
# இரண்டாவது அரையாண்டு அறிக்கை

## (2025 ஜூன் – டிசம்பர்)

### “வளமான நாடு – அழகான வாழ்க்கை”

அரசாங்கத்தின் கொள்கை விளக்க அறிக்கையை அமுல்படுத்தல் தொடர்பான கண்காணிப்பு





சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (பஃவ்ரல் அமைப்பு)

மார்ச் 12 இயக்கம்



2026 மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.


PAFFREL

March 12 Movement

# இரண்டாவது அரையாண்டு அறிக்கை

(ஜூன் - டிசம்பர் 2025)

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன நடைமுறைப்படுத்தல் பற்றிய கண்காணிப்பு:
'வளமான நாடு - அழகான வாழ்க்கை'

2026 மார்ச் மாதம் வெளியிடப்பட்டது

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் அமைப்பு (பஃவ்ரல்)
மார்ச் 12 இயக்கம்

**பொறுப்புத்துறப்பு:** இந்த அறிக்கை ப.ஃ.வ்ரல் அமைப்பு மற்றும் மார்ச் 12 இயக்கம் ஆகியவற்றின் ஒரு சுயாதீனமான கண்காணிப்பு முன்முயற்சியாகும். இதிலுள்ள கண்டறியப்பட்ட முடிவுகள் பகிரங்கமாகக் கிடைக்கப்பெறும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதோடு, அவை தனிநபர்களின், நிறுவனங்களின் அல்லது இவ்வியக்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளையோ அல்லது அரசியல் நிலைப்பாடுகளையோ பிரதிபலிக்கவில்லை.

# முகவுரை

இவ்வறிக்கையானது, இலங்கை அரசாங்கத்தின் ‘‘வளமான நாடு, அழகான வாழ்க்கை” எனும் தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சுயாதீன கண்காணிப்பு மதிப்பீட்டை முன்வைக்கின்றது. அமைச்சரவை அங்கீகாரத்தைத் தொடர்ந்து, இந்த தேர்தல் விஞ்ஞாபனமானது ஐந்தாண்டுகால ஆளுகைக்கான “தேசியக் கொள்கைச் சட்டகம்’’ என உத்தியோகபூர்வமாக ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், அமைச்சுசார் இலக்குகளுடன் ஒத்திசையக்கூடிய மூலோபாய மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்குமாறு அமைச்சுக்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், நடைமுறைப்படுத்தல் மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்கான ஒரு முக்கிய செயலாற்றுகைக் கருவியாக ‘‘பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்ட முகாமைத்துவத்தை’’ (Results-Based Management) ஏற்புச்செய்வதற்கும் அமைச்சரவை தீர்மானித்தது.

இந்த மூன்றாம் தரப்பு கண்காணிப்பு முன்முயற்சியானது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன நடைமுறைப்படுத்தலின் பொருத்தப்பாடு, வினைத்திறன் மற்றும் அதன்மூலம் வெளிப்படும் பெறுபேறுகள் என்பன குறித்தும், பரந்துபட்ட தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் அவை எவ்வாறு இணங்கிச் செல்கின்றன என்பது குறித்தும் ஆக்கபூர்வமான, சுயாதீனமான மற்றும் சான்றுகள் அடிப்படையிலான மதிப்பீட்டை வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது. இச்சூழலில், கண்காணிப்பு என்பது முன்னேற்றத்தைக் கண்டறியும் ஒரு பொறிமுறையாக மாத்திரமன்றி, தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகள் எவ்வாறு வினைத்திறன்மிக்க ஆளுகை, நிலைபேண்தகு அபிவிருத்தி மற்றும் மேம்பட்ட குடிமக்கள் நல்வாழ்வாக மாற்றமடைகின்றன என்பது குறித்த புரிதலை ஆழப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் அமைகிறது. இது மார்ச் 12 இயக்கத்தின் நீண்டகாலப் பணிப்பாணைக்கு (Mandate) அமைவானதாகும்.

இப்பணிப்பாணைக்கு இணங்க, ப.ஃவ்ரல் (PAFFREL) அமைப்பும் மார்ச் 12 இயக்கமும் தேர்தல் விஞ்ஞாபனக் கண்காணிப்புத் தொடர்பான இந்த இரண்டாவது அரையாண்டு அறிக்கையை தற்போது முன்வைக்கின்றன. இது முதலாம் அரையாண்டு மதிப்பீட்டின் தொடர்ச்சியாகும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ள இலக்குகளையும் உறுதிமொழிகளையும் அடைவது தொடர்பில் 2025ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் பற்றிய பகுப்பாய்வுமீது இந்த அறிக்கை குறிப்பான முக்கியத்துவத்தைச் செலுத்துகின்றது.

முதலாவது அரையாண்டு அறிக்கை 2024 நவம்பர் முதல் 2025 மே வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கியிருந்ததுடன், அமைச்சரவைத் தீர்மானங்கள், பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள், நிறைவேற்றுத்துறைத் தீர்மானங்கள் மற்றும் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் ஆகியவற்றின் மீதான ஒரு மீளாய்வுக்கூடாக, அவற்றின் பொருத்தப்பாட்டையும் தொடக்கநிலை வினைத்திறனையும் மதிப்பீடுசெய்வதில் கவனக்குவிவைச் செலுத்தியது. இவை தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை, குடிமக்களை மையப்படுத்திய மிகச்சிறந்த நடைமுறைகளுடன் (citizen-focused best practices) ஒப்பிட்டு ஆராந்தன.

இந்த அறிக்கையில் எடுத்துக்கூறப்பட்டுள்ள கண்காணிப்பின் இரண்டாம் கட்டமானது, 2025 ஜுன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கியுள்ளது. இது 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் அடிப்படையிலமைந்த அமைச்சுக்களின் செயலாற்றுகை மதிப்பீட்டை உள்ளடக்கும் வகையில் தனது பகுப்பாய்வை விரிவுபடுத்துவதுடன், 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டமானது தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் எவ்வாறு இணங்கிச் செல்கின்றது என்பதையும் ஆராய்கின்றது. குறிப்பாக, வள ஒதுக்கீட்டு வினைத்திறன் (resource allocation efficiency) மற்றும் அபிவிருத்திசார் பயனுறுதி (development effectiveness) ஆகிய நியதிகளுக்கமைய இந்த ஆராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் இக்கண்காணிப்பு முயற்சிக்கூடாக, ப.ஃவ்ரல் அமைப்பும் அதன் பங்காளர்களும் பொதுத்துறை ஆளுகையில் (public governance) வெளிப்படைத்தன்மை, நிறுவன ரீதியான கற்றல் மற்றும் பொறுப்புக்கூறல் கலாசாரம் ஆகியவற்றை வளர்ப்பதற்கான தமது அர்ப்பணிப்பை மீளுறுதிப்படுத்துகின்றனர். இது, தேசிய அபிவிருத்திசார் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்வாங்கப்பட்டுள்ள அபிலாஷைகள் இலங்கை மக்களுக்கு உண்மையானதும் ஒப்புரவானதுமான நன்மைகளாக மாற்றமடைவதை உறுதிசெய்கின்றது.

# அட்டவணைகளின் பட்டியல்


| | | | |
|---|---|---|---|
| அட்டவணை 1 | : | ஒவ்வோர் அமைச்சின்கீழான வாக்குறுதிகள் மற்றும் வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 20 |
| அட்டவணை 2 | : | ஒத்திசைவு பற்றிய மதிப்பீட்டின் சுருக்கம் | 22 |
| அட்டவணை 3 | : | 25 அமைச்சுக்களிடமிருந்தும் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களின் சேகரிப்பு நிலை | 25-27 |
| அட்டவணை 4 | : | கடன் மீள்செலுத்துகைகள் இல்லாமல் அமைச்சுக்களுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு, மாகாண சபை வரவுசெலவுத் திட்டம் மற்றும் விசேட செலவு அலகுகள் (SSU) | 106 |
| அட்டவணை 5 | : | 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்காக மாகாண சபைகளுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள | 106 |
| அட்டவணை 6 | : | 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் கடன் மீள்செலுத்துகைக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு | 107 |
| அட்டவணை 7 | : | விசேட செலவு அலகுகள்சார் (SSU) நிறுவனங்களும் ஒதுக்கீடும் | 108 |
| அட்டவணை 8 | : | தகவலறியும் உரிமை ஊடாக 13 அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்ட பதில்கள் | 112 |
| அட்டவணை 9 | : | தகவலறியும் உரிமை ஊடாக 16 அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்ட பதில்கள | 114 |
| அட்டவணை 10 | : | தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுக்கும் அரசிறைத் திட்டமிடலுக்கும் இடையிலான ஒத்திசைவு | 116 |
| அட்டவணை 11 | : | 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள | 117-118 |
| அட்டவணை 12 | : | நெருக்கடிக்குப் பிந்தைய காலத்திலான அரசாங்க வர்த்தமானிகளும் சுற்றறிக்கைகளும் | 121-122 |


**உருக்களின் பட்டியல்**


| | | | |
|---|---|---|---|
| உரு 1 | : | அரசாங்கத் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளின் திசையமைப்பு | 18 |
| உரு 2 | : | விஞ்ஞாபனத்தின் ஒவ்வொரு துறையின்கீழான வாக்குறுதிகளின் எண்ணிக்கை | 19 |
| உரு 3 | : | வாக்குறுதிகளுக்கான ஒத்திசைவினது பொருத்தப்பாட்டின் சதவீதங்கள் | 22 |

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **முகவுரை** | **3** |
| **அட்டவணைகளின் பட்டியல்** | **4** |
| **சுருக்கீட்டுச் சொற்கள்** | **7** |
| **நிறைவேற்றுச் சுருக்கம்** | **9** |
| **1. அறிமுகம்** | **11** |
| 1.1. பின்னணி | 11 |
| 1.2. அறிக்கையின் நோக்கெல்லை | 12 |
| 1.3. முறைமையியல் | 12 |
| 1.3.1. பொருத்தப்பாடு | 13 |
| 1.3.2. வினைத்திறன் | 13 |
| 1.3.3. பயனுறுதி | 13 |
| 1.3.4. பகுப்பாய்வுச் சட்டகம் | 14 |
| 1.3.5. மட்டுப்பாடுகள் | 16 |
| **2. அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றிய ஒரு மேலோட்டமான பார்வை: 'வளமான நாடு — அழகான வாழ்க்கை'** | **17** |
| **3. அமைச்சரவைத் தீர்மானங்களும் தேர்தல் விஞ்ஞாபன ஒத்திசைவும் (ஜுன் – டிசம்பர் 2025)** | **21** |
| **4. தேசிய வரவுசெலவுத்திட்டம் மற்றும் அமைச்சுக்கள் ஊடாக அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கான நடைமுறைப்படுத்தல் ஒழுங்கேற்பாடுகள்** | **23** |
| 4.1. நிறுவன ரீதியிலான திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை முகாமைத்துவம் | 23 |
| 4.2. அமைச்சுக்களின் செயலாற்றுகை பற்றிய தரவுகளை ஒன்றுசேர்த்தல் | 24 |
| **5. 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்ட நடைமுறைப்படுத்தல் பற்றிய மதிப்பீடு** | **29** |
| 5.1. 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கொள்கைசார் நோக்குநிலை பற்றிய மேலோட்டமான பார்வை | 29 |
| 5.2. 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டமும் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளும் | 30 |
| 5.3. அமைச்சுக்கள் மூலமான நடைமுறைப்படுத்துகை நிலை | 30 |
| 1. கல்வி அமைச்சு | 30 |
| 2. சுகாதார மற்றும் ஊடக அமைச்சு | 33 |
| 3. வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சு | 36 |
| 4. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு | 40 |
| 5. விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | 43 |
| 6. தொழில் அமைச்சு | 46 |
| 7. கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு | 50 |
| 8. கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு | 53 |
| 9. டிஜிட்டல் பொருளாதார அமைச்சு | 56 |

10. புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு 59
11. சுற்றாடல் அமைச்சு 62
12. நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு 65
13. பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு 68
14. வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு 71
15. எரிசக்தி அமைச்சு 73
16. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு 77
17. கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு 81
18. பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு 84
19. வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு 87
20. பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு 90
21. பாதுகாப்பு அமைச்சு 92
22. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சு 94
23. கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல் அமைச்சு 97
24. துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு 100
25. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 103

5.4. அவதானிப்புகள் 106

**6. 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்துடன் தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஒத்திசைவு பற்றிய மீளாய்வு 115**

6.1. 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கொள்கைத் திசைமுகம் பற்றிய மேலோட்டமான பார்வை 115

6.2. 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டம் தேர்தல் விஞ்ஞாபனத்துடன் ஒத்திசையும் விதம் 117

**7. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் 119**

7.1. அனர்த்த முகாமைத்துவம் பற்றிய வாக்குறுதிகளும் டித்வா சூறாவளிக்குப் பின்னரான நடவடிக்கைகளும் 119

7.2. தேசிய கொள்கைச் சட்டகத்தில் அனர்த்தம் தொடர்பான உறுதிமொழிகள் 120

7.3. டித்வா சூறாவளிக்குப் பிந்தைய கொள்கை நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தலும் 121

7.4. நிதிசார் உறுதிமொழிகள் 122

7.5. கண்காணிப்பு தாக்கவிளைவுகள் 122

**8. பரிந்துரைகள் 124**

**9. முடிவுரை 126**

**10. உசாத்துணைகள் 128**

**11. பின்னிணைப்புக்கள் 130**

பின்னிணைப்பு 1: 2025 ஜுன் - டிசம்பர் வரையான காலப்பகுதியில் மதிப்பீடு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் 130

பின்னிணைப்பு 2: அமைச்சுக்கள் மட்டத்தில் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளின் நடைமுறைப்படுத்தல் 130

# சுருக்கீட்டுச் சொற்கள்

| | |
|---|---|
| CIABOC | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு |
| DPMM | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் |
| GDP | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| LGBTIQ | பெண் தன்பாலீர்ப்பாளர், ஆண் தன்பாலீர்ப்பாளர், இருபாலீர்ப்பாளர், மாற்றுப் பால்நிலையினர், ஊடுபாலினர் மற்றும் பால்புதுமையினர் |
| M12M | மார்ச் 12 இயக்கம் |
| MPs | பாராளுமன்ற உறுப்பினர்கள் |
| NKRAs | தேசிய முக்கிய பெறுபேற்று விடயப்பரப்புக்கள் |
| NPP | தேசிய மக்கள் சக்தி |
| PAFFREL | சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் அமைப்பு |
| QPR | காலாண்டு முன்னேற்ற அறிக்கை |
| RTI | தகவலறியும் உரிமை |
| SLIDA | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் |
| SSU | விசேட செலவு அலகு |
| USD | ஐக்கிய அமெரிக்க டொலர் |

# நிறைவேற்றுச் சுருக்கம்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் அமைப்பு (PAFFREL), மார்ச் 12 இயக்கத்தின் (M12M) ஒத்துழைப்புடன், அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் தனது இரண்டாவது அரையாண்டு கண்காணிப்பு அறிக்கையை (2025) சமர்ப்பிக்கின்றது. முதலாம் அரையாண்டு மதிப்பீட்டை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ள இவ்வறிக்கையானது, 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டம், நிறுவன ரீதியான நடைமுறைப்படுத்தல் பொறிமுறைகள் மற்றும் அறிக்கையிடற் காலப்பகுதியில் அடையப்பெற்ற துறைசார் முன்னேற்றம் என்பன குறித்த விரிவான ஆய்வை கூட்டிணைப்பதன் மூலம் தனது பகுப்பாய்வின் கனதியை விரிவுபடுத்துகின்றது.

அமைச்சரவை அங்கீகாரங்கள் மற்றும் கொள்கை வழிகாட்டல்கள் ஊடாகப் பல விஞ்ஞாபன உறுதிமொழிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், சொல்லப்பட்ட கொள்கை நோக்கத்திலிருந்து அளவிடக்கூடியதும், பெறுபேறு அடிப்படையிலான முடிவுகளை நோக்கியதுமான முன்னேற்றம் என்பது சீரற்றதாகவே காணப்படுகின்றதென, கண்டறிந்த முடிவுகள் தெரிவிக்கின்றன. தெரிவுசெய்யப்பட்ட சில துறைகள்மீது வரவுசெலவுத்திட்ட ஒத்திசைவில் முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டாலும், முழுமையான காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் கிடைப்பதிலுள்ள மட்டுப்பாடுகள், விரிவான பெறுபேறு மட்டத்திலான கண்காணிப்பிற்குத் தடையாக அமைந்துள்ளன. அவற்றுக்கு மேலதிகமாக, நிறுவன ரீதியான பிளவுறுதன்மையும் (institutional fragmentation) திணைக்கள அல்லது பிரதேச மட்டங்களிலான பகுதியளவு அறிக்கையிடலும் மதிப்பீட்டின் ஒட்டுமொத்த நோக்கெல்லையையும் கனதியையும் பாதித்துள்ளன.

இந்த சவால்கள் எவ்வாறிருப்பினும், அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஒரு வழிகாட்டும் ‘தேசிய கொள்கைச் சட்டகமாக’ உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டமையானது, பெறுபேறு அடிப்படையிலான ஆளுகையை நோக்கிய ஒரு முக்கியமான முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. அத்துடன், உள்ளகக் கண்காணிப்புப் பொறிமுறைகளை நிறுவியுள்ளமையானது, பொறுப்புக்கூறல் மற்றும் செயலாற்றுகை என்பவற்றைப் பின்தொடர்ந்து கண்காணிப்பது பற்றிய நிறுவன ரீதியிலான அங்கீகாரம் அதிகரித்துவருவதை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

இலங்கையில் ஜனநாயக ரீதியிலான ஆளுகையைப் பலப்படுத்துவதில் சுயாதீனமான, மூன்றாம் தரப்பு மேற்பார்வையின் (Third-party oversight) வகிபாகத்தை இந்த இரண்டாவது அரையாண்டு அறிக்கை மீளுறுதிப்படுத்துகின்றது. தரவு ரீதியான தடைகள் இருந்தபோதிலும், முறைமைசார்ந்த ஆவணப்படுத்தல் மீளாய்வு, அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு, வரவுசெலவுத்திட்ட பரிசீலனை, நிறுவனரீதியான வரைபடமாக்கல் (Institutional mapping) மற்றும் உத்தியோகபூர்வ தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக தகவலறியும் உரிமைப் பொறிமுறைகளை உரியமுறையில் பயன்படுத்தியமை ஆகியவற்றினூடாக, இந்தக் கண்காணிப்புச் செயல்முறையானது முறைமையியல் ரீதியான துல்லியத்தைப் (Methodological rigor) பேணிக்காத்துள்ளது.

இந்த முயற்சியானது இயல்பிலேயே ஓர் ஆக்கபூர்வமானதாகும் என்பதை பஃவ்ரல் மற்றும் மார்ச் 12 இயக்கம் என்பன மீளுறுதிப்படுத்துகின்றன. இதன் நோக்கம் குறைகளைச் சுட்டிக்காட்டுவதல்ல. மாறாக, தேர்தல்கால உறுதிமொழிகளை தெளிவாகப் புலப்படக்கூடிய பகிரங்க விளைவுகளாக

(Tangible public outcomes) பயனுறுதிமிக்க வகையில் மாற்றுவதற்கு ஆதரவளிப்பதன்மூலம், வெளிப்படைத்தன்மையுள்ள, பொறுப்புக்கூறத்தக்க மற்றும் செயலாற்றுகை சார்ந்த ஆளுகைக்கு அர்த்தபூர்வமான முறையில் பங்களிப்பதே ஆகும்.

ஜனநாயக ரீதியிலான பொறுப்புக்கூறல், கொள்கை ஒருங்கிசைவு மற்றும் சான்று அடிப்படையிலான பொது நிருவாகத்தை மேம்படுத்தும் குறிக்கோளுடன், அரசாங்கத்தின் பதவிக்காலம் முழுவதும் இந்த சுயாதீனமான கண்காணிப்புச் செயல்முறையைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் மேற்படி நிறுவனங்கள் உறுதியாக உள்ளன.

**ரோஹன ஹெட்டியாராச்சி**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் அமைப்பு (பஃவ்ரல்)

# 1

# அறிமுகம்

## 1.1. பின்னணி

தேர்தல் விஞ்ஞாபன அறிக்கை பற்றிய இந்த இரண்டாவது அரையாண்டு அறிக்கையானது, அரசாங்கத்தின் தேர்தல் பணிப்பாணையை (electoral mandate) நடைமுறைப்படுத்தும் ஆரம்பநிலை சுழற்சிவட்டத்தில் தீர்மானமிக்க ஒரு கட்டமான **2025 ஜுன் முதல் டிசம்பர்** வரையிலான காலப்பகுதியை உள்ளடக்குகின்றது. இக்காலப்பகுதியில், 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டச் சட்டகத்தின்கீழ், தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை முறைசார் கொள்கை வழிகாட்டல்களாக, அமைச்சரவை தீர்மானங்களாக மற்றும் வரவுசெலவுத்திட்ட நடவடிக்கைகளாக மாற்றும் செயல்முறையை அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்திருந்தது.

அமைச்சுகளுக்குள்ளான நிருவாக ரீதியிலான நிலைமாற்றங்கள், தாமதமடைந்த அறிக்கையிடல் சுழற்சிவட்டவங்கள் மற்றும் பரிணாமம் அடைந்துவரும் நிறுவனஞ்சார் ஒழுங்கேற்பாடுகள் ஆகியவற்றால் பரந்துபட்ட ஆளுகைச் சூழமைவு அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. குறிப்பாக, 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதிலும் அங்கீகரிக்கப்படுவதிலும் ஏற்பட்ட தாமதமானது, முதலாம் காலாண்டுக்கான முன்னேற்ற ஆவணங்கள் கிடைப்பதில் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்தப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், 2025 ஆம் ஆண்டுக்கான நான்கு காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளில் இரண்டு மட்டுமே கிடைக்கக்கூடியனவாக இருந்தன. வரவுசெலவுத்திட்டம் சார்ந்த தாமதங்கள் காரணமாக முதலாம் காலாண்டு (Q1) அறிக்கை கிடைக்கப்பெறவில்லை, அதேவேளை நான்காம் காலாண்டு (Q4) அறிக்கை (ஒக்டோபர்—டிசம்பர் 2025) தயாரிப்பு மட்டத்தில் இருந்தது. குறித்தசில சந்தர்ப்பங்களில், அறிக்கையிடலானது முழுமையாக அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைக்கப்படாமல், திணைக்கள அல்லது பிரதேச மட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால், நிறுவன ரீதியான பகுதியவுத் தரவுகளே கிடைக்கப்பெற்றன.

இந்த பின்னணிச் சூழல்சார் யதார்த்தங்கள், மதிப்பீட்டின் நோக்கெல்லை (Scope) மற்றும் கனதி (Depth) ஆகிய இரண்டிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதுடன், அவை இவ்வறிக்கையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டும் உள்ளன.

## 1.2. அறிக்கையின் நோக்கெல்லை

இந்த அறிக்கையின் நோக்கெல்லையானது, அறிக்கையிடல் காலப்பகுதியில் விஞ்ஞாபன உறுதிமொழிகளுக்கும் அரசாங்கத்தின் உண்மையான நடவடிக்கைக்கும் இடையிலான ஒத்திசைவை மதிப்பீடு செய்வதில் கவனம் செலுத்துகின்றது. கொள்கை நோக்கம் (Policy intent) மற்றும் நடைமுறைப்படுத்தல் முன்னேற்றம் (Implementation progress) ஆகிய இரண்டையும் கண்டறியும் பொருட்டு, இந்த பகுப்பாய்வானது ஆளுகை மற்றும் பொது நிருவாகத்தின் பல பரிமாணங்களுக்கு விரிவடைந்து செல்கின்றது.

குறிப்பாக, இவ்வறிக்கை பின்வருவனவற்றை ஆராய்கின்றது:

- 2025 ஜூன் முதல் டிசம்பர் வரை வெளியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களுக்கும் விஞ்ஞாபன உறுதிமொழிகளுக்கும் இடையிலான ஒத்திசைவு.
- விஞ்ஞாபன உறுதிமொழிகளைத் தேசிய கொள்கைச் சட்டகத்திற்குள் உள்வாங்குதல் மற்றும் மூல வாக்குறுதிகளிலிருந்து விலகிச்சென்ற சந்தர்ப்பங்களை (Deviations) அடையாளம் காணுதல்.
- 2025–2029 காலப்பகுதிக்கு விஞ்ஞாபன முன்னுரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுவரும் மூலோபாய வழவரைபடம் (Strategic Roadmap).
- விஞ்ஞாபன உறுதிமொழிகளைத் தொழிற்படுத்துவதற்காக 2025 ஆம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட அமைச்சு மட்டத்திலான செயற்பாட்டுத்திட்டங்கள்.
- விஞ்ஞாபன வாக்குறுதிகளுடன் தொடர்புடைய நிதி ஒதுக்கீடுகள், செலவின முன்னுரிமைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல் வழிமுறைகள் (Implementation modalities) உள்ளடங்கலாக, 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டம்.
- அமைச்சரவை, பாராளுமன்றம், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் வேறு இயைபான அரசாங்க அமைப்புக்கள் என்பவற்றுக்கூடான நிறுவன ரீதியான நடைமுறைப்படுத்தல் வழிவகைகள்.
- தனிப்பட்ட உறுதிமொழிகளின் நடைமுறைப்படுத்தல் நிலையானது, ஆரம்பிக்கப்பட்டவை, முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டவை, பகுதியளவில் நடைமுறைப்படுத்தப்பட்டவை அல்லது நிலுவையில் உள்ளவை என வகைப்படுத்தப்படல்.
- தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுடன் தொடர்புடைய நிதி ஒதுக்கீடுகள், செலவின முன்னுரிமைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல் வழிமுறைகள் உள்ளடங்கலாக, 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டம் பற்றிய மேலோட்டமான பார்வையும், அதனை 2025 தேசிய வரவுசெலவுத்திட்டத்துடன் ஒப்பிடுதலும்.
- கண்டறியப்பட்ட ஒட்டுமொத்தமான முடிவுகள், முறைமை சார்ந்த அவதானிப்புகள் மற்றும் கொள்கை மட்டத்திலான பரிந்துரைகள்.

எனவே, இந்த நோக்கெல்லையானது கொள்கை உருவாக்கம், நிதி ஒதுக்கீடு, நிறுவன ரீதியான ஒருங்கிணைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் செயலாற்றுகை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

## 1.3. முறைமையியல்

தேர்தல் விஞ்ஞாபனக் கண்காணிப்புச் செயல்முறையின் இரண்டாம் கட்டமானது, அளவுசார் (Quantitative) மற்றும் பண்புசார் (Qualitative) குறிகாட்டிகள் என இரண்டு குறிகாட்டிகளிலும் கவனம் செலுத்துகின்றது. ப∴வ்ரல் அமைப்பு, இந்தக் கட்டத்தில் நிறைவேற்றுத்துறைத் தீர்மானங்கள், பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள், அமைச்சரவைத் தீர்மானங்கள், வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் அமைச்சுக்களின் செயலாற்றுகைகள் போன்ற உள்ளீடு மற்றும் செயற்பாட்டுக் குறிகாட்டிகளை (Input and Activity Indicators) ஆராய்ந்தது. குறிப்பாக, இந்தக் கட்டமானது கருத்திட்டங்கள் தொடர்பில் (ஆரம்பிக்கப்பட்டவை/நடைபெறுபவை/ நிறைவுற்றவை) அமைச்சுக்களின் செயலாற்றுகைகள், சேவை வழங்கல்சார் முன்னேற்றங்கள் மற்றும் இயற்றப்பட்ட சட்டவாக்கங்கள் ஆகியவற்றைக் கண்காணித்தது.

முதலாம் கட்டமானது, "பொருத்தப்பாடு" (Relevance) எனும் அளவுகோலின் அடிப்படையில், தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகள் குடிமக்களின் உண்மையான தேவைகளையும் முன்னுரிமைகளையும் எவ்வளவு தூரம் பூர்த்தி செய்கின்றன என்பதையும், அவை தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் எவ்வாறு ஒத்திசைந்துள்ளன என்பதையும் ஒரு அடிப்படை மதிப்பீடாக நிறுவியது. இரண்டாம் கட்டத்திலிருந்து, இந்த மதிப்பீடானது விரிவுபடுத்தப்பட்டு, எஞ்சிய OECD-DAC (பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பு - அபிவிருத்தி உதவிக்குழு) அளவுகோல்களான "வினைத்திறன்" (Efficiency) மற்றும் "பயனுறுதி" (Effectiveness) ஆகியவற்றை உள்வாங்கியுள்ளது. இது காலப்போக்கில் நடைமுறைப்படுத்தல் மற்றும் விளைவுகள் என இரண்டையும் உள்ளடக்கிய ஒரு விரிவான கண்காணிப்பை மேற்கொள்ள அனுமதிக்கின்றது.

### 1.3.1. பொருத்தப்பாடு

**"பொருத்தப்பாடு" (Relevance)** என்பது, அபிவிருத்தி இடையீடானது (Development intervention) இலக்குக் குழுக்களின் தேவைகளையும் முன்னுரிமைகளையும் எந்தளவுக்குப் பூர்த்தி செய்கின்றது என்பதையும், அது நாட்டின் தேசிய அபிவிருத்தித் திட்டத்துடனும் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடனும் (SDGs) எவ்வாறு ஒத்திசைகின்றது என்பதையும் **ஆராய்கின்றது**.[1] தரப்படுத்தல் முறைமையியலானது பொருத்தப்பாடு எனும் அளவுகோலை நான்கு வகைகளாக வகைப்படுத்தியது. அவையாவன: அதிக பொருத்தப்பாடுடையது (Highly Relevant), பொருத்தப்பாடுடையது (Relevant), பகுதியளவு பொருத்தப்பாடுடையது (Partially Relevant) மற்றும் பொருத்தப்பாடற்றது (Irrelevant).

1. **அதிக பொருத்தப்பாடுடையது**
   - அமைச்சரவைத் தீர்மானம் அல்லது வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடானது, தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதியொன்றை நேரடியாகப் பூர்த்திசெய்கின்றது.
   - கொள்கை வாக்குறுதியானது, எவ்வித இடைவெளிகளுமின்றி, உட்கருதப்பட்ட இலக்கு, தரநியமம் அல்லது தேவைப்பாட்டுடன் முழுமையாக நேரொத்துப்போகின்றது.

2. **பொருத்தப்பாடுடையது**
   - அமைச்சரவைத் தீர்மானம் அல்லது வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடானது, தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதியொன்றின் நோக்கத்துடன் விவரமான முறையில் முழுமையாக ஒத்திசையாத போதிலும், அந்நோக்கத்தைப் பரவலாக ஆதரிக்கின்றது.
   - கொள்கை/நடவடிக்கை மற்றும் உறுதிமொழி என்பவற்றுக்கிடையே ஒரு பொதுவான தொடர்பு காணப்படுகின்ற போதிலும், சில தகவமைப்புக்கள் (Adaptation) அல்லது பகுதியளவிலான மேவுகை (Partial coverage) தெளிவாகப் புலப்படுகின்றது.

3. **பகுதியளவு பொருத்தப்பாடுடையது**
   - அமைச்சரவைத் தீர்மானம் அல்லது வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடானது, ஒரு தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதியுடன் வரையறுக்கப்பட்ட தொடர்பையே கொண்டுள்ளது.
   - வாக்குறுதியின் குறித்தசில அம்சங்கள் மட்டுமே கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன, அல்லது அதன் தாக்கம் மறைமுகமாக உள்ளது அல்லது போதியளவில் இல்லை.

4. **பொருத்தப்பாடற்றது**
   - அமைச்சரவைத் தீர்மானம் அல்லது வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடானது, ஒரு தேர்தல் விஞ்ஞாபன வாக்குறதியுடன் எந்தவோர் அர்த்தபூர்வமான வழிவகையிலும் தொடர்புபட்டதாக இல்லை.
   - கொள்கை/நடவடிக்கை மற்றும் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கும் இடையே எவ்வித ஒத்திசைவும் காணப்படவில்லை.

## 1.3.2. வினைத்திறன்

### வினைத்திறன் மதிப்பீடு

வினைத்திறன் என்பது, சாத்தியமான மாற்றுவழிகளைக் கருத்திற்கொண்டு, அபிவிருத்தி இடையீடுகளின் செலவினங்கள் அவற்றின் பெறுபேறுகளால் நியாயப்படுத்தப்படுகின்றனவா என்பதை ஆராய்கின்றது. சுருக்கமாகக் கூறின், ஓர் இடையீடானது அதன் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை (Outcomes) உரிய காலப்பகுதியிலும், செலவுகுறைந்த முறையிலும் (Cost-effective manner) வழங்கியுள்ளதா அல்லது வழங்குவதற்கான சாத்தியமுள்ளதா என்பதை இது மதிப்பீடு செய்கின்றது.

## 1.3.3. பயனுறுதி

### பயனுறுதி மதிப்பீடு

பயனுறுதி என்பது, ஓர் இடையீடானது அதன் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளையும் தாக்கங்களையும் எந்தளவுக்கு அடைந்துள்ளது அல்லது அடைவதற்கான சாத்தியமுள்ளது என்பதை ஆராய்கின்றது. இது வெளியீடுகளுக்கும் (Outputs) விளைவுகளுக்கும் (outcomes) இடையிலான தொடர்பை மதிப்பீடு செய்வதுடன், திட்டமிடப்பட்ட செயற்பாடுகளும் கையளிக்கப்பட வேண்டிய விடயங்களும் (Deliverables) எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளாக மாற்றப்பட்டுள்ளனவா

1 Sivagnanasothy, V. (2020). Development Evaluation in Sri Lanka. USAID/SDGAP, P, 39.

என்பதில் கவனம் செலுத்துகின்றது. இத்தகைய சூழலில், சொல்லப்பட்ட உறுதிமொழிகள் எந்தளவுக்கு உட்கருதியபடி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பதை அளவிடுவதன்மூலமும், அத்துடன் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கும் உண்மையான அடைவுகளுக்கும் இடையிலான இடைவெளிகளை அடையாளம் காண்பதன்மூலமும் பயனுறுதியானது மதிப்பீடு செய்யப்படுகின்றது.

## 1.3.4. பகுப்பாய்வுச் சட்டகம்

இவ்வறிக்கையானது, தற்போதைய அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுக்கு எதிராக அதன் முன்னேற்றத்தை முறைமை சார்ந்து மீளாய்வு செய்கிறது. ஜனாதிபதி செயலகத்தின் நிறைவேற் தீர்மானங்கள், அமைச்சரவை அமைச்சர்களின் அமைச்சரவைத் தீர்மானங்கள், பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள், தேசிய வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள், அமைச்சுக்களின் செயலாற்றுகைகள் மற்றும் இயைபான அதிகார சபைகளின் செயற்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, எவை நிறைவேற்றப்பட்டுள்ளன மற்றும் எவை முன்னெடுக்கப்படுகின்றன என்பதை இது அளவிடுகின்றது. மேலும் இது, ஒரு வாக்குறுதியை **நடைமுறைப்படுத்தப்பட்டது (Implemented), பகுதியளவு நடைமுறைப்படுத்தப்பட்டது (Partially Implemented), ஆரம்பிக்கப்பட்டது (Initiated), இன்னும் நடைமுறைப்படுத்தப்படாதது (Yet to be Implemented)** மற்றும் **சரிபார்க்கப்படவேண்டிய தெளிவற்ற பகுதிகள் (Gray Areas to be Verified)** என அடையாளம் காண்பதுடன், பகிரங்க விவாதத்திற்கும் கொள்கை மேம்பாட்டுக்குமாக சான்று அடிப்படையிலான ஒரு தளத்தையும் வழங்குகின்றது.

### நிறைவேற்றுத்துறைத் தீர்மானங்கள்

தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் தீர்மானங்கள் மிக முக்கியமானவை. ஏனெனில் அவை அரசாங்கத்திற்கான ஒட்டுமொத்த திசைப்பாட்டையும் முன்னுரிமைகளையும் தீர்மானிக்கின்றன. அமைச்சரவையையும் அமைச்சுக்களையும் வழிநடத்துவதன் மூலம், கொள்கைகளும் வளங்களும் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் ஒத்திசைந்து செல்வதை ஜனாதிபதி உறுதிப்படுத்துகின்றார். வலுவான தலைமைத்துவமானது பணி நிறைவேற்றத்தை (Delivery) விரைவுபடுத்துமென்றும் பொறுப்புக்கூறலை (Accountability) வலுப்படுத்துமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி எடுக்கும் நிறைவேற்றுத் துறைத் தீர்மானங்கள் இச்செயற்பாட்டின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

### அமைச்சரவைத் தீர்மானங்கள்

அரசியல் உறுதிமொழிகளை முறைசார் கொள்கை நடவடிக்கைகளாக மாற்றுவதால், அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதில் அமைச்சரவைத் தீர்மானங்கள் மையப்பங்கு வகிக்கின்றன. கூட்டாக முடிவெடுப்பதனூடாக (Collective decision-making), அமைச்சரவையானது முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்படுவதையும், வளங்கள் ஒதுக்கப்படுவதையும், சட்ட அல்லது நிருவாகச் சட்டகங்கள் நிறுவப்படுவதையும் உறுதிப்படுத்துகின்றது. பயனுறுதிமிக்க அமைச்சரவைத் தீர்மானங்கள் அமைச்சுக்களுக்கிடையே இசைவிணைவை (Coherence) வழங்குகின்றன, ஒன்றையொன்று மேவுவதை (Overlaps) தவிர்க்கின்றன அத்துடன் பொறுப்புக்கூறலையும் உருவாக்குகின்றன. இது தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுக்கும் நடைமுறையிலுள்ள ஆளுகைக்கும் இடையிலான ஒரு முக்கிய இணைப்பாக அமைகின்றது. இந்த இரண்டாவது அரையாண்டு அறிக்கையானது, இலங்கை அமைச்சரவை அலுவலகத்தின் இணையத்தளத்தில் (https://www.cabinetoffice.gov.lk/) உத்தியோகபூர்வ ஊடக அறிக்கைகளாக வெளியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இது பகிரங்கமாகக் கிடைக்காத உண்மையான அமைச்சரவைக் குறிப்புக்களை (Cabinet memorandum) அல்லது அமைச்சரவைப் பத்திரங்களை (Cabinet papers) அடிப்படையாகக் கொண்டதல்ல.

### பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதில் பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள் மிக முக்கியமானவை. ஏனெனில் அரசாங்கத்தின் உறுதிமொழிகளுக்குப் பயன்கொடுக்கும் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் தேசிய வரவுசெலவுத்திட்டம் என்பவற்றை பாராளுமன்றமே அங்கீகரிக்கின்றது. விவாதங்கள், மேற்பார்வை மற்றும் குழு வேலை (Committee work) ஊடாக, பாராளுமன்றமானது நடைமுறைப்படுத்தலில் பொறுப்புக்கூறலையும் வெளிப்படைத்தன்மையையும் உறுதிப்படுத்துகின்றது. மக்களின் குரலைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம், பாராளுமன்றம் சட்டபூர்வத்தன்மையை (Legitimacy) பலப்படுத்துவதுடன், அரசாங்கம் அதன் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுடன் ஒத்திசைந்து செயற்படுவதையும் உறுதிப்படுத்துகின்றது.

இக்கண்காணிப்புச் செயல்முறையானது பாராளுமன்ற செயல்நடவடிக்கைகளை, அதிலும் குறிப்பாக வரவுசெலவுத்திட்ட அறிவிப்புகள், சட்ட அறிவிப்புகள், குழுச் செயல்முறைகள் மற்றும் கொள்கைத் தீர்மானங்கள் என்பவற்றைக் கையாள்கின்றது. முதல் ஆறுமாத காலப்பகுதியின் போது, 2025 ஏப்ரல் மாதத்தில் பாராளுமன்றத்தில் தேசிய வரவுசெலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதுடன், அது 2025 டிசம்பர் வரை நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டது.

## தேசிய வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள்

அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை, நடைமுறைப்படுத்தக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களாகவும் சேவைகளாகவும் மாற்றிப் பயன்படுத்தும் முதன்மையான கருவி தேசிய வரவுசெலவுத்திட்டமாகும். எனவே, வாக்குறுதியளிக்கப்பட்ட உறுதிமொழிகளுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும், அவ்வுறுதிமொழிகள் பயனுறுதியுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு வரவுசெலவுத்திட்டத்தைக் கண்காணிப்பது அத்தியாவசியமானதாகும். இது, வள ஒதுக்கீடுகள் தேர்தல் விஞ்ஞாபன முன்னுரிமைகளுடன் ஒத்திசைந்துள்ளனவா என்பதைச் சரிபார்ப்பதற்கும், கொள்கை நோக்கங்களுக்கும் உண்மையான செலவினங்களுக்கும் இடையிலான இடைவெளிகளைக் கண்டறிவதற்கும், மற்றும் பெறுபேறுகளுக்காக நிறுவனங்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்கும் உதவுகின்றது. தொடர்ச்சியான வரவுசெலவுத்திட்டக் கண்காணிப்பானது வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்துவதுடன், பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்தி, உருவாகிவரும் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான உரிய காலத்திலான திருத்தங்களை (Timely adjustments) மேற்கொள்ளவும் வழிவகுக்கின்றது.

தேர்தல் விஞ்ஞாபனக் கண்காணிப்புச் செயல்முறையின் முதலாம் கட்டமானது, விஞ்ஞாபன முன்மொழிவுகளுடன் 2025 தேசிய வரவுசெலவுத்திட்டம் எந்தளவுக்கு ஒத்திசைந்துள்ளது என்பதை மதிப்பீடு செய்ய பின்வரும் மூன்று அளவுகோல்களைப் பகுப்பாய்வு செய்தது. அவையாவன: **பொருத்தப்பாடு** (வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் குறிப்பான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுக்கு நேரொத்தவையாக இருத்தல்), **வினைத்திறன்** (முழுமையான நடைமுறைப்படுத்தலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிசார் வளங்களின் போதியதன்மை) மற்றும் பயனுறுதி (தேர்தல் விஞ்ஞாபன இலக்குகளுடன் ஒத்திசைந்த தெளிவான காலவரையறைகளும் அளவிடக்கூடிய இலக்குகளும் காணப்படுதல்). **2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தைப்** பொறுத்தவரை, அந்த வரவுசெலவுத்திட்டத்தைச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட ஆரம்ப மூன்று மாதகாலத் தாமதமானது, ஒரு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதோடு தொடர்புடைய ஒரு நிலைமாறுகாலத் தடையாகக் (Transitional constraint) கருதப்படலாம். மேலும், நான்காவது காலாண்டில் ஏற்பட்ட சூறாவளி அனர்த்தத்தின் பாதிப்புக்கள், அமைச்சுக்களின் வழமையான பணிப்பாய்வுகளையும் (Workflows) நிருவாகச் செயல்முறைகளையும் கணிசமாகப் பாதித்தன. இக்காரணிகள் கால வினைத்திறன் (Time efficiency) மற்றும் நிறுவனஞ்சார் முகாமைத்துவ இயலுமையாற்றல் (institutional management capacity) தொடர்பிலான கரிசனைகளைத் தோற்றுவிக்கின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக, செலவினங்களின் அமைப்புக்கூறானது (Composition of expenditure), மூலதன முதலீட்டைவிட (Capital investment) மீண்டெழுஞ் செலவினங்களே (Recurrent spending) தொடர்ந்து அதிகப்படியாக இருப்பதையும், அது பெரும்பாலும் அபிவிருத்தி சார்ந்ததாகவன்றி தொழிற்பாடுகள் (Operational) சார்ந்ததாக இருப்பதைக் காட்டுவதோடு ஒட்டுமொத்த வினைத்திறனில் (Efficiency) தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது. மீண்டெழுஞ் செலவினத்தின் உயர் விகிதமானது, நிதி ஒதுக்கீடுகளை நிலையான அபிவிருத்திப் பெறுபேறுகளாக மாற்றுவதற்கான அரசாங்கத்தின் இயலுமையைக் கட்டுப்படுத்தக்கூடும். இதன்மூலம் பொது வளப் பயன்பாட்டின் வினைத்திறன் பாதிக்கப்படுகின்றது.

2025ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தைப் பொறுத்தவரை, கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்ட நடைமுறைப்படுத்துகையின் பயனுறுதியானது தற்போதைய நிலையில் மட்டுப்படுத்தப்பட்டதாகவே தோன்றுகிறது. ஆண்டின் மூன்றாவது காலாண்டுவரை கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி, வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான அமைச்சுக்களுக்கு மட்டுமே நிதிசார் முன்னேற்றத் தகவல்கள் (Financial progress information) கிடைக்கக்கூடியனவாக உள்ளன. அதேவேளை அமைச்சுக்கள் முழுவதற்கும் பரந்துபட்ட பௌதிக முன்னேற்றத் தரவுகள் (Physical progress data) கிடைக்கப்பெறவில்லை. மேலும், பௌதிக செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (Physical performance indicators) இல்லாமையானது, நிதிசார் செலவினங்கள் கண்களுக்குப் புலப்படக்கூடிய வெளியீடுகளாகவும் (Tangible outputs) விளைவுகளாகவும் (Outcomes) மாற்றப்பட்டுள்ளனவா என்பதை ஒரு அர்த்தபூர்வமான முறையில் மதிப்பீடு செய்வதைக் கட்டுப்படுத்துகின்றது.

பயனுறுதி பற்றிய கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கு, எல்லா அமைச்சுக்களும் நிதிசார் தரவுகளையும், பௌதிக முன்னேற்றத் தரவுகளையும் முறைமைசார்ந்து வெளியிடுவது அத்தியாவசியமானது. முழுமையான பௌதிகச் செயலாற்றுகைத் தகவல்கள் கிடைக்கப்பெற்றதும், மூன்று காலாண்டுகளினதும் தரவுகளையும் உள்வாங்கி, 2025 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த வருடாந்த மதிப்பீட்டை (Consolidated annual assessment) வெளியிடுவதனை இந்தக் கண்காணிப்பு நடவடிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அமைச்சுக்களின் செயலாற்றுகைகளும் இயைபான அதிகாரசபைகளின் செயற்பாடுகளும்

அமைச்சுக்கள், அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன நடைமுறைப்படுத்தலைக் கண்காணிப்பதில் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றன. ஏனெனில், அவை கொள்கை வாக்குறுதிகளைச் செயல்நடவடிக்கையாக மாற்றும் முதனிலை முகவராண்மைகளாக (Primary agencies) உள்ளன. ஒவ்வோர் அமைச்சும் தனது துறைசார்ந்த உறுதிமொழிகளுக்கு நேரடியாகப் பொறுப்புக்கூற வேண்டியது என்பதுடன், வளங்கள் ஒதுக்கப்படுவதையும், செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதையும், முன்னேற்றம் அளவிடப்படுவதையும் அது உறுதிப்படுத்துகின்றது. அமைச்சுக்கள் மேற்கொள்ளும் பயனுறுதிமிக்க கண்காணிப்பானது, செயல்நிறைவேற்றுகையில் ஏற்படும் இடைவெளிகளையும், காலதாமதங்களையும் மற்றும் சவால்களையும் அடையாளங்காண உதவுவதுடன், ஏனைய அரசாங்க நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பையும் உறுதிப்படுத்துகிறது. உரியகாலத்திலான அறிக்கைகள் மற்றும் பின்னூட்டங்களை வழங்குவதன்மூலம், அமைச்சுக்கள் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல்

மற்றும் தமது தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான அரசாங்கத்தின் ஒட்டுமொத்த நம்பகத்தன்மை ஆகியவற்றுக்குப் பங்களிக்கின்றன.

இப்பகுப்பாய்வின் இரண்டாம் கட்டத்தில், அமைச்சுக்களிடமிருந்தான பௌதிகச் செயலாற்றுகைகள் கண்காணிக்கப்படுகின்றன. அமைச்சுக்களின் செயலாற்றுகைகளை மதிப்பிடுவதற்காக, அமைச்சுக்களின் 2025–2029 காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டங்கள், முன்னேற்றக் கண்காணிப்புச் சட்டகத்தை அடிப்படையாகக் கொண்ட 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் போன்ற ஆவணங்கள் ஆராயப்படுகின்றன. மேற்சொல்லப்பட்ட ஆவணங்களைக் கோரி மொத்தமாகவுள்ள 25 அமைச்சுக்களுக்கும் தகவலறியும் உரிமைச் சட்டத்தின்கீழான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்தக் கட்டத்தில், 'க்ளீன் ஸ்ரீலங்கா' முன்முயற்சி மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு முன்னெடுக்கும் 'ஊழல் எதிர்ப்புச் செயற்பாட்டுத்திட்டத்தின்' நடைமுறைப்படுத்துகை ஆகிய இரண்டையும் கண்காணிக்கும் பணிகள் தொடர்ந்தன. இவற்றுக்கு மேலதிகமாக, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட "முழு நாடுமே ஒன்றாக: போதைப்பொருள் ஆபத்தை இல்லாதொழித்தல்" (*A Nation United: Eradicating the Menace of Narcotic Drugs*) எனும் தேசிய மட்டத்திலான நடவடிக்கை மற்றும் 2025 நவம்பரில் நாட்டைப் பாதித்த 'டித்வா' (Ditwah) சூறாவளி அனர்த்தத்திற்கான அரசாங்கத்தின் பதில்நடவடிக்கைப் பணி (Response mission) ஆகியவையும் இவ்வறிக்கையில் மீளாய்வு செய்யப்படுகின்றன.

### 1.3.5. மட்டுப்பாடுகள்

- தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளைத் தேசிய கொள்கைச் சட்டகத்துடன் ஒருங்கிணைத்து, அவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அமைச்சுக்களுக்கு அறிவுறுத்தி அரசாங்கம் சுற்றறிக்கைகளை வெளியிட்டுள்ளது. இருப்பினும், அமைச்சு மட்டத்தில் மூலோபாயத் திட்டங்களையும், வருடாந்த நடைமுறைப்படுதல் நிகழ்ச்சித்திட்டங்களையும் (செயற்பாட்டுத் திட்டங்கள்) தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தகவலறியும் உரிமைக் கோரிக்கைகளுக்கூடாகப் பெறப்பட்ட தகவல்களுக்கிணங்க, இவ்வறிக்கை தயாரிக்கப்படும் காலப்பகுதி வரை, மூன்று (03) அமைச்சுக்கள் மட்டுமே தமது மூலோபாயத் திட்டங்களைப் பூர்த்தி செய்திருந்தன.

- அமைச்சு மட்டத்திலான செயலாற்றுகை பற்றிய தரவுகளைச் சேகரிப்பது சவாலாக அமைந்தது. மொத்தமாகவுள்ள 25 அமைச்சுக்களில், 15 அமைச்சுக்கள் மட்டுமே இப்பகுப்பாய்வுக்குத் தேவைப்பட்ட ஆகக் குறைந்தளவிலான தகவல்களை வழங்கின. தகவலறியும் உரிமைச் சட்டகத்தின்கீழ் தரவுகள் கோரப்பட்டபோதிலும், அவற்றுக்கான பதில்கள் குறிப்பிடத்தக்களவில் வேறுபட்டுக் காணப்பட்டன. சில அமைச்சுக்களினால் மட்டுப்படுத்தப்பட்டளவு தகவல்கள் வழங்கப்பட்டபோதிலும், அவற்றுள் பல தகவல்கள் முழுமையற்றவையாகவும், தெளிவற்றவையாகவும் அல்லது கோரப்பட்ட குறிப்பான தகவல்களை உள்ளடக்காதவையாகவும் அமைந்தன. இச்சூழ்நிலை பற்றி இவ்வறிக்கையில் அட்டவணை ஒன்றின்மூலம் விளக்கப்பட்டுள்ளதுடன், இது பகுப்பாய்வின் பரந்துபட்ட தன்மையையும் ஆழத்தையும் (Comprehensiveness and depth) கட்டுப்படுத்தியுள்ளது.

- முதலாம் கட்டத்தைப் போலவே, இந்த அறிக்கையும், பொதுவெளியில் உத்தியோகபூர்வ ஊடக அறிக்கைகளாக வெளியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களை மட்டுமே பிரத்யேகமான ஆதாரமாகக் கொண்டுள்ளது. அமைச்சரவையில் விவாதிக்கப்படும் விடயங்கள் தொடர்பான விரிவான பின்னணித் தகவல்களையும், தன்னிலையான சூழமைவையும் (substantive context) அமைச்சரவைக் குறிப்புக்கள் கொண்டுள்ளன என்பது புரிந்துகொள்ளத்தக்கது. தேர்தல் விஞ்ஞாபன நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களை மேலதிக விபரங்களுடன் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்வது, வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதுடன் அரசாங்கத்தின் செயல்நடவடிக்கைகள் குறித்து மேலும் ஆழமான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளவும் வழிவகுக்கும்.

- இவ்வறிக்கை தயாரிக்கப்படும் காலப்பகுதி வரை, மூன்றாவது காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் மட்டுமே கிடைக்கப்பெற்றிருந்தன என்பதுடன் எல்லா அமைச்சுக்களுக்குமான இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டு அறிக்கைகளும் கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லை. நான்காவது காலாண்டுக்கான செயலாற்றுகைத் தரவுகள் (Performance data) இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்பதனால், அவை இக்கண்காணிப்புச் செயல்முறையின் அடுத்த அறிக்கையில் உள்வாங்கப்படும்.

# 2


# அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றிய ஒரு மேலோட்டமான பார்வை: 'வளமான நாடு – அழகான வாழ்க்கை'

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் "வளமான நாடு – அழகான வாழ்க்கை" எனும் தொலைநோக்குடன் அமைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கை முன்னுரிமைகளையும் உட்கருதப்பட்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலையும் தேர்தல் விஞ்ஞாபனம் கோடிட்டுக் காட்டுகின்றது. பின்வரும் அபிலாஷைகளை உறுதிப்படுத்துவது இத்தொலைநோக்கின் மையமாக அமைந்துள்ளது: வசதியான நாட்டில் ஒரு முழுநிறைவான வாழ்க்கை, பாதுகாப்பான நாட்டில் ஒரு கௌரவமான வாழ்க்கை, செல்வம் கொழிக்கும் நாட்டில் ஒரு நவீன வாழ்க்கை மற்றும் நிலைதளராத நாட்டில் ஓர் அபிமானமிக்க வாழ்க்கை.

**தேசிய முக்கிய பெறுபேற்றுத் துறைகளை (NKRAs)** அடைந்துகொள்வதற்கான பணிச் சட்டகமாக (Mission framework) இந்நான்கு அடிப்படை எதிர்பார்ப்புக்களும் அமைகின்றன. இந்தச் சட்டகத்தின் கீழ், **39 உப-தேசிய முக்கிய பெறுபேற்றுத் துறைகள் (Sub-NKRAs)** நடைமுறைப்படுத்தலுக்கான குறிப்பான இலக்குகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. தேசிய முக்கிய பெறுபேற்றுத் துறைகளில், **பொருளாதாரம்** சார்ந்த துறையே அதிகளவான (604) திட்டமிடப்பட்ட செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. அதேவேளை **சமுதாயம் (335)**, **ஆளுகை (213)** மற்றும் **சமூகம் (181)** ஆகிய துறைகள் ஒப்பீட்டளவில் குறைவான செயற்பாடுகளையே கொண்டுள்ளன.


அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனமானது 437 அபிவிருத்தி சார்ந்த (Development-oriented) வாக்குறுதிகளையும், 455 கொள்கை சார்ந்த (Policy-oriented) வாக்குறுதிகளையும் அத்துடன் அபிவிருத்தி மற்றும் கொள்கை ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய 441 வாக்குறுதிகளையும் சேர்த்து மொத்தமாக 1,333 வாக்குறுதிகளைக் கொண்டுள்ளது.

அதற்கமைய, மொத்த வாக்குறுதிகளில் மூன்றிலொரு பங்கு கொள்கை சார்ந்தவையாக உள்ளன. நிதிப் பங்களிப்பின்றி அல்லது மிகக்குறைந்த நிதிப் பங்களிப்புடன் இத்தகைய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தலுக்காக ஆரம்பிக்க முடியும் என்பதை இது குறிக்கின்றது. அதேபோன்று, மொத்த வாக்குறுதிகளில் மற்றுமொரு மூன்றிலொரு பங்கு அபிவிருத்தி சார்ந்தவையாக உள்ளன. இவை நிதி முதலீடுகளையும் முறையான காலவரையறைகளையும் (Timeframes) கோருகின்றன. எஞ்சிய வாக்குறுதிகள் கொள்கை மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டையும் உள்ளடக்கியவையாகும். இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு உளக்கருத்தும் (Intention) முதலீடும் அவசியமாகும்.




*உரு 1: அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளின் நோக்குநிலை*

மொத்தமாக, தேர்தல் விஞ்ஞாபனமானது பரந்தளவிலான தொனிப்பொருள் சார்ந்த துறைகளில் விரவியுள்ள **1,333 உறுதிமொழிகளைக்** கொண்டுள்ளது. அவற்றுள் பின்வரும் துறைகள் உள்ளடங்குகின்றன: கல்வி (78), சுகாதாரம் (55), வீடமைப்பு (12), விளையாட்டு (30), கலை மற்றும் கலாசாரம் (71), வரலாறு (7), சுற்றாடல் (65), ஊடகம் (15), சமூகப் பாதுகாப்பு (40), தொழில் (24), பெண்கள் (20), சிறுவர் (15), இளைஞர் (37), முதியோர் (9), இயலாமையிலுள்ள ஆட்கள் (34), பேரண்டப் பொருளாதாரம் (83), கமத்தொழில் (52), கால்நடை வளர்ப்பு (21), கடற்றொழில் (68), டிஜிட்டல் அரசு (16), ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (55), சுற்றுலாத்துறை (40), கைத்தொழில்கள் (56), இரத்தினங்கள் மற்றும் கனிமங்கள் (38), எரிசக்தி (42), போக்குவரத்து (47), கடல்சார் வணிகம் (15), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (30), காணி (24), நிர்மாணத்துறை (19), அரசியலமைப்பு (15), பொது நிதி (14), நீதி முறைமை (23), பொதுமக்கள் பாதுகாப்பு (14), சிறைச்சாலைகள் (13), போதைப்பொருளற்ற சமூகம் (8), இராஜதந்திரம் (84), தேசியப் பாதுகாப்பு (27), மற்றும் உலகளாவிய உறுதிமொழிகள் (20).




*உரு 2: தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஒவ்வொரு துறையின்கீழான வாக்குறுதிகளின் எண்ணிக்கை*

எவ்வாறிருப்பினும், 2025 மார்ச் மாத அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம், அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை உத்தியோகபூர்வமாக தேசிய அபிவிருத்திக் கொள்கைச் சட்டகமாக ஏற்றுங்கீகரித்தது. அதற்கிணங்க, தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள 1,333 உறுதிமொழிகளும் 1,385 செயற்பாடுகளாக மாற்றப்பட்டு, பின்னர் அவை 25 அமைச்சுக்களுக்கிடையே 1,474 செயற்பாடுகளாக பகிர்ந்தளிக்கப்பட்டன. பயனுறுதிமிக்க தொழிற்பாட்டுமயமாக்கலை இலகுபடுத்துவதற்காக, வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான செயற்பாடுகள் ஒன்றுக்குமேற்பட்ட அமைச்சுக்களுக்குக் குறித்தளிக்கப்பட்டன. இத்தகைய செயற்பாடுகள் அமைச்சரவை அந்தஸ்துள்ள 25 அமைச்சுக்கள் ஊடாக பட்டியலிடப்பட்டுள்ளன, அவை பின்வருமாறு அமைகின்றன:

| இல. | அமைச்சின் பெயர் | அமைச்சுக்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் எண்ணிக்கை | % |
|---|---|---|---|
| 1 | வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை | 139 | 10% |
| 2 | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி | 108 | 8% |
| 3 | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனம். | 107 | 8% |
| 4 | கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி | 95 | 7% |
| 5 | சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகம் | 94 | 7% |
| 6 | புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் | 82 | 6% |
| 7 | கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல் | 81 | 6% |
| 8 | சுற்றாடல் | 76 | 5% |
| 9 | வலுசக்தி | 68 | 5% |
| 10 | கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் | 66 | 5% |
| 11 | இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு | 64 | 5% |
| 12 | மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம் | 59 | 4% |
| 13 | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி | 55 | 4% |
| 14 | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி | 50 | 4% |
| 15 | பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் | 45 | 3% |
| 16 | பாதுகாப்பு | 42 | 3% |
| 17 | டிஜிட்டல் பொருளாதாரம் | 37 | 3% |
| 18 | வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் | 33 | 2% |
| 19 | நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு | 33 | 2% |
| 20 | துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து | 28 | 2% |
| 21 | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் | 28 | 2% |
| 22 | தொழில் | 25 | 2% |
| 23 | வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி | 21 | 2% |
| 24 | பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | 20 | 1% |
| 25 | பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு | 18 | 1% |
| | **மொத்தம்** | **1,474** | |

*அட்டவணை 1: ஒவ்வோர் அமைச்சின்கீழான வாக்குறுதிகளின் எண்ணிக்கை மற்றும் வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள்*

# 3

# அமைச்சரவைத் தீர்மானங்களும் தேர்தல் விஞ்ஞாபன ஒத்திசைவும் (ஜூன் – டிசம்பர், 2025)

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதில் அமைச்சரவைத் தீர்மானங்கள் ஒரு முக்கிய வகிபாகம் வகிக்கின்றன. ஏனெனில் அவை அரசியல் ரீதியான உறுதிமொழிகளை முறைசார் கொள்கைச் செயல்நடவடிக்கைகளாக மாற்றுகின்றன. கூட்டாக முடிவெடுப்பதனூடாக (Collective decision-making), அமைச்சரவையானது முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம் வழங்குவதுடன், வளங்களை ஒதுக்கி, தேவையான சட்ட மற்றும் நிருவாகச் சட்டகங்களையும் நிறுவுகின்றது. முறையாக ஒருங்கிணைக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள், அமைச்சுக்களுக்கு இடையே கொள்கைசார் இசைவிணைவை (Policy coherence) உறுதிப்படுத்துவதுடன், பணிகளில் ஏற்படும் மேவுகைகளைக் (Overlaps) குறைத்து பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்துகின்றன. இதன்மூலம், தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுக்கும் நடைமுறையிலுள்ள ஆளுகைக்கும் இடையிலான ஒரு முக்கிய இணைப்பாக அமைச்சரவைத் தீர்மானங்கள் அமைகின்றன.

இக்கண்காணிப்பு நடவடிக்கையின் முதலாம் கட்டமானது, 2024 நவம்பர் முதல் 2025 மே வரையான காலப்பகுதியில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களை மீளாய்வு செய்தது. இக்காலப்பகுதியில் மொத்தம் 299 அமைச்சரவைத் தீர்மானங்கள் பதிவு செய்யப்பட்டதுடன், அவற்றுள் 216 தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அவற்றின் பொருத்தப்பாடு குறித்து மதிப்பீடு செய்யப்பட்டன.

இரண்டாம் கட்டமானது, 2025 ஜூன் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களை மதிப்பீடு செய்தது. இக்காலப்பகுதியில் மொத்தம் **457 அமைச்சரவைத் தீர்மானங்கள்** வெளியிடப்பட்டதுடன், அவற்றுள் **27 தீர்மானங்கள்** சட்டரீதியாக கட்டாயப்படுத்தப்பட்ட தீர்மானங்களைப் (Legally mandated decisions) பிரதிபலிக்கும் **நியதிச்சட்ட ரீதியிலான (Statutory)** தன்மையைக் கொண்டிருந்தன. எஞ்சிய **430 அமைச்சரவைத் தீர்மானங்கள்**, தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுடனான அவற்றின் பொருத்தப்பாடு குறித்து மதிப்பீடு செய்யப்பட்டன. அந்த மதிப்பீட்டின்மூலம் பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன:

**22% அதிக பொருத்தப்பாடுடையது:** இவை தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள குறிப்பான உறுதிமொழிகளை அவற்றின் உட்கருத்து மற்றும் உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் நேரடியாகவும் துல்லியமாகவும் நடைமுறைப்படுத்துவதைச் சுட்டிக்காட்டுகின்றன;

**31% பொருத்தப்பாடுடையது:** இவை தேர்தல் விஞ்ஞாபனத்தின் தொனிப்பொருள்களுடன் கணிசமானளவு ஒத்திசைந்துபோகும் தன்மையைக் கொண்டுள்ளன. இருப்பினும், இவை எப்போதும் குறிப்பான ஒரு வாக்குறுதியுடன் மிகச்சரியாக நேரொத்த நிலையில் இருக்கவில்லை;


**23% பகுதியளவு பொருத்தப்பாடுடையது:** இவை தேர்தல் விஞ்ஞாபன இலக்குகளுடன் தொடர்பைக் கொண்டுள்ளபோதிலும், உட்கருதப்பட்ட நோக்கெல்லையின் ஒரு பகுதியை மட்டுமே பூர்த்தி செய்கின்றன அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வழிமுறையிலேயே அதற்குப் பங்களிக்கின்றன;

**24% பொருத்தப்பாடற்றது:** இவை தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமைகளுடன் எந்தவிதத் தெளிவான தொடர்பையும் கொண்டிருக்கவில்லை; அத்துடன்

ஒட்டுமொத்தமாக, மதிப்பீடு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில் **76%** தேர்தல் விஞ்ஞாபனத்துடன் பொருத்தப்பாட்டைக் கொண்டுள்ளன. அவற்றுள் **22%** உயர் மட்டத்திலும் **31%** கணிசமானளவிலும், உறுதிமொழிகளை நேரடியாக அமுல்படுத்துவதனூடாகக் கொள்கைசார் ஒத்திசைவை (Policy coherence) வெளிப்படுத்தியுள்ளன. இருப்பினும், பகுதியளவு பொருத்தப்பாடுடைய (**23%**) மற்றும் பொருத்தப்பாடற்ற (**24%**) அமைச்சரவைத் தீர்மானங்களின் விகிதாசாரம் ஒப்பீட்டளவில் அதிகமாக இருப்பது, அமைச்சரவையின் கணிசமான நடவடிக்கைகள் கடந்தகால அரசாங்கத்தின் முன்முயற்சிகளின் தொடர்ச்சியாகவோ அல்லது அந்தந்தச் சூழ்நிலைகளிலிருந்தும் நிருவாகத் தேவைகளிலிருந்தும் உருவானவையாகவோ இருப்பதைக் காட்டுகின்றது. இந்த மட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும், தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை செயற்படுத்தக்கூடிய அரசாங்கக் கொள்கைகளாக மாற்றும் விடயத்தில் அரசாங்கத்திற்குள்ள உளக்கருத்தை இவ்வறிக்கையின் முடிவுகள் உணர்த்துகின்றன.

| அமைச்சரவைத் தீர்மானங்களின் எண்ணிக்கை | பொருத்தப்பாட்டு நிலை | சதவீதம் (அண்ணளவாக. %) |
|---|---|---|
| 95 | அதிக பொருத்தப்பாடுடையது | 22 |
| 132 | பொருத்தப்பாடுடையது | 31 |
| 100 | பகுதியளவு பொருத்தப்பாடுடையது | 23 |
| 103 | பொருத்தப்பாடற்றது | 24 |
| 430 | | 100 |

*அட்டவணை 2: ஒத்திசைவு பற்றிய மதிப்பீட்டின் சுருக்கம்*




*உரு 3: வாக்குறுதிகளுக்கான ஒத்திசைவினது பொருத்தப்பாட்டின் சதவீதங்கள்*

# 4

# தேசிய வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் அமைச்சுக்கள் ஊடாக அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கேற்பாடுகள்

## 4.1. நிறுவன ரீதியிலான திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை முகாமைத்துவம்

தற்போதைய அரசாங்கம் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு கட்டமைக்கப்பட்ட நிறுவன ரீதியான திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை முகாமைத்துவச் சட்டகத்தை (Structured Institutional Planning and Performance Management Framework) நடைமுறைப்படுத்தியுள்ளது.

**தேசிய கொள்கைச் சட்டகமாக தேர்தல் விஞ்ஞாபனம்:** 2025 மார்ச் மாதம் 3ஆம் திகதியன்று, அமைச்சரவையானது ''வளமான நாடு – அழகான வாழ்க்கை'' எனும் தேர்தல் விஞ்ஞாபனத்தை உத்தியோகபூர்வமாக தேசிய கொள்கைச் சட்டகமாக ஏற்புச் செய்தது. அதற்கிணங்க, எல்லா அமைச்சுக்களும், திணைக்களங்களும், அரச நிறுவனங்களும், மாகாண சபைகளும் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளும் தத்தமது திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தற் செயல்முறைகளை இந்த கொள்கைச் சட்டகத்துடன் ஒத்திசைக்குமாறு பணிக்கப்பட்டன.

**செயலாற்றுகைக் கண்காணிப்புச் சுற்றறிக்கை:** 2025 மார்ச் மாதம் 24ஆம் திகதியன்று, ஜனாதிபதி செயலகம் PS/SB/Circular/03/2025 எனும் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கையை வெளியிட்டது. இதன்மூலம், எல்லா அமைச்சுக்களும் தமது 2025ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டங்களை, முன்னேற்றக் கண்காணிப்புச் சட்டகம் (Progress Monitoring Framework) மற்றும் 2025-2029 காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டங்கள் (Strategic Plans) என்பவற்றுக்கமைய தயாரிக்கும்படி அறிவுறுத்தப்பட்டன.

**கட்டாயத் திட்டமிடலும் அறிக்கையிடலும்:** தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை வெளிப்படையாக உள்வாங்கியுள்ள மூலோபாயத் திட்டங்களையும் செயற்பாட்டுத் திட்டங்களையும் சமர்ப்பிக்கும்படியும், நடைமுறைப்படுத்தலிலான முன்னேற்றம் பற்றி அமைச்சின் செயலாற்றுகைக் கண்காணிப்பு முறைமைக்கூடாக (MPMS) காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடும்படியும் எல்லா அமைச்சுக்களும் தேவைப்படுத்தப்படுகின்றன.

**நிறுவன ரீதியான மேற்பார்வை பொறிமுறைகள்:** அரசாங்க முதலீட்டுக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மூலோபாய ரீதியில் முடிவெடுப்பதை விரைவுபடுத்துவதற்காக, 11 சிரேஷ்ட அதிகாரிகளை உள்ளடக்கிய அரசாங்க முதலீட்டுக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக்

குழுவை அமைச்சரவை 2024 டிசம்பர் 30 ஆம் திகதி நியமித்தது.

**பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்ட முகாமைத்துவம் (RBM):** செயலாற்றுகைப் பொறுப்புக்கூறலையும் விளைவுகளை அடிப்படையாகக்கொண்ட நடைமுறைப்படுத்தலையும் வலுப்படுத்துவதற்காக, பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்ட முகாமைத்துவ அணுகுமுறையை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் 2025 ஒக்டோபர் 07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை எடுத்துள்ளது. ஒவ்வோர் அமைச்சினதும் அதிகாரப்படிநிலை சார்ந்த பொறுப்புக்களுக்கு (hierarchical responsibilities) இணங்க, அந்தந்த நோக்கெல்லைக்குள் அபிவிருத்தி இலக்குகளை உரிய காலத்தில் அடைந்துகொள்வதற்கு அமைச்சுசார் பெறுபேற்றுச் சட்டகங்கள் (Ministerial Results Frameworks) துணைபுரியும். இதன்மூலம், எதிர்பார்க்கப்படும் வெளியீடுகளையும் நன்மைகளையும் மக்களுக்கு உரியகாலத்தில் வழங்குவதை உறுதிப்படுத்துவதுடன், பொருளாதாரத் துறைகளுக்கு இடையேயான தொடர்புகளை வலுப்படுத்தவும், அரசாங்க முதலீடுகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் வழிபிறக்கிறது.[1] அரசதுறையில் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவத்தை நிறுவனமயப்படுத்துவதற்கும், அமைச்சுசார் பெறுபேற்றுச் சட்டகங்களை ஒவ்வோர் அமைச்சினதும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வரவுசெலவுத்திட்டச் செயல்முறையின் மூலோபாயக் கட்டங்களுடன் ஒருங்கிணைப்பதற்கும், அத்துடன் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்.

**செயல்நுணக்க அபிவிருத்திக் கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும்:** அரசாங்கம், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டமூலத்திற்கான (Strategic Development Projects Bill) உத்தேசத் திருத்தங்களை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், அதனைத்தொடர்ந்து பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக அதனைச் சமர்ப்பிப்பதற்கும் 2025 ஒக்டோபர் 21 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தை எடுத்தது.

2025 டிசம்பர் 17 ஆம் திகதியன்று, பாராளுமன்றம் 2025 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டத்திற்கு அங்கீகாரம் அளித்தது. இத்திருத்தங்கள் பல முக்கிய மாற்றங்களை முன்மொழிந்துள்ளன. குறிப்பாக, அதிகபட்ச வரி விடுமுறை காலத்தை (Tax holiday period) 25 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளாகக் குறைத்தல், கண்காணிப்புப் பொறிமுறைகளை வலுப்படுத்துதல் மற்றும் செயல்நுணுக்க முதலீடுகளுக்குக் கடுமையான இணங்கியொழுகற் தேவைப்பாடுகளைக் (Compliance requirements) கட்டாயமாக்குதல் என்பன அவற்றுள் உள்ளடங்கும்.

இந்தப் பாராளுமன்ற செயல்நடவடிக்கையானது, தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி இலக்குகளை முன்னெடுப்பதற்கான ஒரு விரைவான நடவடிக்கையாகக் கருதப்படலாம். எவ்வாறாயினும், இந்தத் திருத்தங்களினால் ஏற்படக்கூடிய சாத்தியமான விளைவுகள், தற்பொழுது நடைபெற்றுவரும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் செயல்முறையின் ஒரு பகுதியாகத் தனிவேறாக மதிப்பிடப்பட வேண்டும்.

## 4.2. அமைச்சுக்களின் செயலாற்றுகை பற்றிய தரவுகளை ஒன்றுசேர்த்தல்

மேற்கூறிய நிறுவன ரீதியான ஒழுங்கேற்பாடுகளுக்கிணங்க, இந்த மூன்றாம் தரப்புக் கண்காணிப்பு முயற்சியானது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய கொள்கைச் சட்டகம், தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சுற்றறிக்கை மூலம் கோரப்பட்ட 2025–2029 காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டம் மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை மீளாய்வு செய்வதன் மூலம் நடைமுறைப்படுத்தலை மதிப்பிடுவதற்கு எதிர்பார்க்கிறது. அத்துடன், 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்றவாறு, 2025 ஆம் ஆண்டுக்கான காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளையும் (முறையே ஜூன் 30 மற்றும் செப்டம்பர் 30 ஆம் திகதிகளுடன் முடிவடையும் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளை உள்ளடக்கியது) இது மீளாய்வு செய்கிறது. உத்தியோகபூர்வ நிகழ்நிலைத் தளங்கள் மற்றும் தகவலறியும் உரிமைக் (RTI) கோரிக்கைகள் ஊடாக இந்த ஆவணங்களைச் சேகரிப்பதற்கு கண்காணிப்புக் குழு முயற்சித்தது. தேவைப்பட்ட ஆவணங்களின் சேகரிப்பு நிலைமையைப் பின்வரும் அட்டவணை முன்வைக்கின்றது.

1 https://www.cabinetoffice.gov.lk/cab/index.php?option=com_content&view=article&id=16&Itemid=49&lang=en&dID=13461

| இல | அமைச்சு | அமைச்சு சார் பெறுபேற்றுச் சட்டகங்கள் (2025-2029) DPMM மூலம் | மூலோபாயத் திட்டம் (2025-2029) | செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | காலாண்டு முன்னேற்ற அறிக்கை (QPR) 2025 | | | 2025-09-30 வரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Q2 | Q3 | Q4 | |
| 1 | வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் | | | | | | | |
| | நீர் வழங்கல் | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| | வீடமைப்பு | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 2 | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி | | | | | | | |
| | போக்குவரத்து | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| | நெடுஞ்சாலைகள் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| | நகர அபிவிருத்தி | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 3 | துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 4 | சுற்றாடல் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 5 | பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு | | | | | | | |
| | பெருந்தோட்டம் | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது |
| | சமூக உட்கட்டமைப்பு | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது |
| 6 | மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |

| இல | அமைச்சு | அமைச்சு சார் பெறுபேற்றுச் சட்டகங்கள் (2025–2029) DPMM மூலம் | மூலோபாயத் திட்டம் (2025–2029) | செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | காலாண்டு முன்னேற்ற அறிக்கை (QPR) 2025 | | | 2025–09–30 வரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Q2 | Q3 | Q4 | |
| 7 | கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 8 | கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது |
| 9 | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 10 | வலுசக்தி | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 11 | நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 12 | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 13 | வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 14 | சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகம் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 15 | புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 16 | பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |

| இல | அமைச்சு | அமைச்சு சார் வெறுபேற்றுச் சட்டகங்கள் (2025–2029) DPMM மூலம் | மூலோபாயத் திட்டம் (2025–2029) | செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | காலாண்டு முன்னேற்ற அறிக்கை (QPR) 2025 | | | 2025–09–30 வரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Q2 | Q3 | Q4 | |
| 17 | வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 18 | கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 19 | பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 20 | தொழில் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 21 | கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | பெறப்பட்டது | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 22 | டிஜிட்டல் பொருளாதாரம் | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 23 | இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | பெறப்பட்டது |
| 24 | பாதுகாப்பு | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 25 | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி | பெறப்பட்டது | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |

*அட்டவணை 3: 25 அமைச்சுக்களிடமிருந்தும் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களின் சேகரிப்பு நிலை*

மூலோபாயத் திட்டங்கள், செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் தொடர்பான அமைச்சுசார் உறுதிப்பாடுகளின் நிலைப்பாட்டை மேற்கூறப்பட்ட அட்டவணை முன்வைக்கின்றது. இக்கருவிகள் பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்ட வினைத்திறனான முகாமைத்துவக் கட்டமைப்பொன்றின் அத்தியாவசியக் கூறுகளாக அமைகின்ற போதிலும், கண்காணிப்பு நடவடிக்கையானது முறைசார் நிறுவன ரீதியான மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளின் கிடைக்கக்கூடியதன்மை, காலநேரம் மற்றும் துல்லியத்தன்மை ஆகியவற்றிலேயே தொடர்ந்தும் பெருமளவில் தங்கியுள்ளது.

தொடர்ச்சியாகவும் பகிரங்கமாகவும் அணுகக்கூடிய தகவல்களும் ஆவணங்களும் இல்லாத பட்சத்தில், முன்னேற்றத்தைப் புறவயரீதியாகவும் (objectively) விரிவாகவும் மதிப்பிடும் திறன் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகிறது. அறிக்கையிடல் இணங்கியொழுகலை (reporting compliance) வலுப்படுத்துவதுடன், அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களையும் முன்னேற்ற அறிக்கைகளையும் முறையாக முன்கூட்டியே வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்துவது கண்காணிப்புச் செயன்முறையின் வினைத்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை கணிசமாக மேம்படுத்தும்.

# 5

# 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்ட நடைமுறைப்படுத்தல் பற்றிய மதிப்பீடு

## 5.1. 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கொள்கைசார் நோக்குநிலை பற்றிய மேலோட்டமான பார்வை

அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை, நடைமுறைப்படுத்தக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களாகவும் அரசாங்க சேவைகளாகவும் மாற்றியமைப்பதற்கான முதன்மைக் கருவியாகத் தேசிய வரவுசெலவுத்திட்டம் அமைகின்றது. எனவே, வாக்குறுதியளிக்கப்பட்ட உறுதிமொழிகளுக்குப் போதியளவு நிதி ஒதுக்கப்படுவதையும் அவை வினைத்திறனாக நடைமுறைப்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்கு வரவுசெலவுத்திட்டத்தைக் கண்காணிப்பது இன்றியமையாததாகும். வள ஒதுக்கீடுகள் தேர்தல் விஞ்ஞாபனத்தின் முன்னுரிமைகளுடன் ஒத்துப்போகின்றனவா என்பதை மதிப்பிடவும், கொள்கை நோக்கங்களுக்கும் உண்மையான செலவினங்களுக்கும் இடையிலான இடைவெளிகளை அடையாளம் காண்பதற்கும், அத்துடன் பெறுபேறுகளுக்கான நிறுவன ரீதியான பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்கும் வரவுசெலவுத்திட்டக் கண்காணிப்பு உதவுகின்றது. வரவுசெலவுத்திட்ட உருவாக்கத்தில் நிலவும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியன பொதுமக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுடன், உரிய நேரத்தில் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் உருவெடுக்கும் நெருக்கடி நிலைகளின் போது சுறுசுறுப்புடன் செயற்படுவதற்கும் வழிவகுக்கின்றது.

கண்காணிப்பின் முதலாம் கட்டமானது, 2024 நவம்பர் முதல் 2025 மே வரையான வரையறுக்கப்பட்ட கண்காணிப்புக் காலத்தைக் கருத்திற்கொண்டு, பிரதானமாக வெளியீடுகளில் (Outputs) கவனம் செலுத்தியது. 2025 ஜூன் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியை உள்ளடக்கிய இரண்டாம் கட்டமானது, தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தல் விளைவுகளாக (Outcomes) மாற்றுவதில் அமைச்சுக்களின் செயலாற்றுகையைக் கண்காணிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், அரசாங்கம் மாறியதைத் தொடர்ந்து 2025 வரவுசெலவுத்திட்டச் செயன்முறையில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக முதலாம் காலாண்டு முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படவில்லை. அதேவேளை, அறிக்கையிடல் காலப்பகுதி 2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த போதிலும், டித்வா (Ditwah) அனர்த்தத்தின் விளைவாக நான்காம் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் கிடைக்கப்பெறவில்லை. இதன் விளைவாக, அமைச்சுக்கள் தமது பொறுப்புக்களை எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தியுள்ளன என்பதை மதிப்பீடு செய்வதற்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளையே இவ்வாய்வு நம்பியுள்ளது.

கண்காணிப்புக் குழுவானது ஆரம்பத்தில் தகவலறியும் உரிமைக் கோரிக்கைகளின் ஊடாக எல்லா அமைச்சுக்களிடமிருந்தும் முன்னேற்ற

அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள உத்தேசித்திருந்தது. எவ்வாறாயினும், 25 அமைச்சுக்களில் 15 அமைச்சுக்களிடமிருந்து மாத்திரமே ஆவணங்கள் கிடைக்கப்பெற்றன. இருப்பினும், கிடைக்கக்கூடிய அனைத்து ஆவணங்களையும் பயன்படுத்தி, இயன்றவரை கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

## 5.2. 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டமும் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளும்

தேர்தல் விஞ்ஞாபனத்தின் 133 உறுதிமொழிகளைத் தொழிற்படுத்துவதற்காக 2025 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றின் நடைமுறைப்படுத்தலை மதிப்பிடுவதனை இக்கண்காணிப்பு நடவடிக்கை நோக்கமாகக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், தரவுகள் கிடைப்பதில் நிலவிய மட்டுப்பாடு மற்றும் விரிவானதும் வகைப்படுத்தப்பட்டதுமான அறிக்கையிடல் இல்லாமை ஆகியவற்றின் காரணமாகக் கருத்திட்ட மட்டத்திலான (Project-level) பகுப்பாய்வை மேற்கொள்வது சாத்தியமற்றதாக இருந்தது.

கிடைக்கக்கூடிய உத்தியோகபூர்வ மூலங்கள் ஊடாக ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் நிதிசார் முன்னேற்றம் என்பவற்றை அடையாளங்காண முடிந்துள்ள போதிலும், பௌதிக முன்னேற்றம் மற்றும் வெளியீடு மட்டத்திலான அடைவுகள் (output-level achievements) குறித்த தகவல்கள் பெரும்பாலும் அணுக முடியாதவையாகவே காணப்படுகின்றன. இந்த இடைவெளியானது, நடைமுறைப்படுத்தலின் வினைத்திறன் மற்றும் விளைவுகளின் அடைவுநிலை ஆகியவற்றை விரிவாக மதிப்பீடு செய்வதைத் தடுத்திருந்தது.

## 5.3. அமைச்சுக்கள் மூலமான நடைமுறைப்படுத்துகை நிலை

### 1. கல்வி அமைச்சு

#### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சானது அரசாங்கத்தின் முக்கிய அமைச்சுகளில் ஒன்றாகும். தற்போது இந்த அமைச்சுப் பதவியை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் என்ற தன்மையில் கௌரவ பிரதமர் வகித்து வருகின்றார். அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், கல்வித் துறையானது "நாகரிகமடைந்த பிரஜை - முன்னேற்றமடைந்த மனித வளம்" எனும் தொனிப்பொருளின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள 1,333 மொத்த உறுதிமொழிகளுள் 78 உறுதிமொழிகள் இந்தத் தொனிப்பொருளின்கீழ் வருகின்றமை குறிப்பிடத்தக்கது என்பதுடன் இவை 16 தொனிப்பொருள்சார் விடயப்பரப்புக்களில் பரந்துபட்டுக் காணப்படுகின்றன.

எவ்வாறிருப்பினும், தேசிய கொள்கைச் சட்டகத்திற்குள், கல்வி தொடர்பான உறுதிமொழிகளின் எண்ணிக்கை பட்டியலிடப்பட்டுள்ள மொத்த 1,385 செயற்பாடுகளில் 108 ஆக அதிகரித்துள்ளது. குறிப்பாக, ஆரம்பத்தில் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள், விளையாட்டு மற்றும் கலாசார விவகாரங்கள் ஆகியவற்றின்கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்த பல வாக்குறுதிகள், தற்போது கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சின்கீழ் மீளக் குறித்தளிக்கப்பட்டுள்ளன அல்லது அவ்வாறே மேலதிகமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.


#### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

இவை எல்லாத் துறைகளிலும் அதிகளவிலான உறுதிமொழிகளைக் கொண்டுள்ளதுடன், மொத்தச் செயற்பாடுகளில் சுமார் 8 சதவீதத்தையும் பிரதிபலிக்கின்றன. இது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கொள்கைச் சட்டகத்திலும் கல்வித் துறைக்கு உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது. இருந்தபோதிலும், 2025–2029 காலப்பகுதிக்கான அமைச்சின் மூலோபாயத் திட்டம் இன்னும் தயாரிப்பு மட்டத்திலேயே உள்ளதுடன், 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டமானது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அல்லது கொள்கைச் சட்டகத்திலுள்ள உறுதிமொழிகளில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியைப் போதியளவு உள்ளடக்கவுமில்லை. எவ்வாறாயினும், பட்டியலிடப்பட்ட வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக 2025 ஆம் ஆண்டில் 157 கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் ஏற்புச் செய்யப்பட்டன.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம் - 2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (ஜுன் 2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (செப்டெம்பர் 2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (டிசம்பர் 2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு

மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சினால் 29 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றன. இது பல்வேறு கொள்கை ரீதியான முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிவகுத்தது. அமைச்சரவைத் தீர்மானங்களில் மூன்று (03) மாத்திரமே தேர்தல் விஞ்ஞாபனத்துடன் அதிக பொருத்தப்பாடுடையவை என கண்காணிப்பின் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் ஐந்து (05) தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை எனவும், ஏழு (07) தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை எனவும், ஏனைய பதினான்கு (14) தீர்மானங்களும் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றவை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு


2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கீழ், கல்வித் துறைக்காக 273,339 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், இது மொத்த வரவுசெலவுத்திட்டத்தின் 3.09 சதவீதமாகும். அத்துடன், அதற்குரிய வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளுடன் கல்வி சார்ந்த 157 உறுதிமொழிகள் அறிவிக்கப்பட்டன. இதில் 75.89 சதவீதம் மீண்டெழுஞ் செலவினத்திற்காகவும் (recurrent expenditure), 24.11 சதவீதம் மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தன.

இதனுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்திற்காக 303,850 மில்லியன் ரூபா ஒதுக்கீடு முன்மொழியப்பட்டுள்ளது. இதில் 76.96 சதவீதமானது மீண்டெழுஞ் செலவினத்திற்காகவும், 23.04 சதவீதமானது மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மொத்த நிதி ஒதுக்கீடானது 3.09 சதவீதத்திலிருந்து 3.38 சதவீதமாக சிறியளவிலான அதிகரிப்பைக் காட்டியுள்ளது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 273,339 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 147,491 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 54 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள கல்வி தொடர்பான உறுதிமொழிகள், கலாசாரத்தை ஒரு பரந்துபட்ட மற்றும் இயங்குதன்மையுள்ள களமாக (dynamic domain) அங்கீகரிக்கின்ற கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும், சர்வதேசத் தரநியமங்களுக்கு ஒத்திசைவான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கும், சிறுவர்-நேயக் கற்றல் சூழலில் வாழ்க்கைத் திறன்களையும் அறிவையும் வளர்ப்பதற்கும் வலுவான முக்கியத்துவத்தை அளிக்கின்றன. மற்றுமொரு முக்கிய

உறுதிமொழி யாதெனில், கல்வியில் அரசாங்க முதலீட்டை வலுப்படுத்துவதாகும். இது கல்விக்கான செலவினத்தைப் படிப்படியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 6 சதவீதமாக அதிகரிப்பதற்கான உறுதிமொழியையும் உள்ளடக்கியுள்ளது. எவ்வாறாயினும், 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அண்ணளவாக 1 சதவீதமே கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

கல்விச் சீர்திருத்தச் செயன்முறையின் ஒரு பகுதியாக அமைச்சு 20 கலந்தாலோசனைக் கருத்தரங்குகளை நடாத்தியதுடன், 2025 ஜுலை 24 ஆம் திகதி பாராளுமன்ற விவாதத்திற்காக ஒரு சீர்திருத்த முன்மொழிவும் சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 6 ஆம் தரத்திற்கான கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதானது ஆரம்பத்தில் திட்டமிட்டபடி பூர்த்தியடையவில்லை என்பதுடன், அது 2027 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, தரம் 1 முதலான வகுப்புக்களுக்கான சீர்திருத்தங்கள் 2026 ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளன. அதற்கமைய, கல்விச் சீர்திருத்த நடைமுறைப்படுத்தலின் ஒட்டுமொத்த நிலைமையானது பகுதியளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு சர்வதேச ரீதியாக தரப்படுத்திய பல்கலைக்கழகங்களில் பட்டத்தைப் பயில்வதற்கான 200 ஒரு வருடகால புலமைப்பரிசில். | ✓ | ✓ | ✓ |
| 02 | சிறுவர் நேயமிக்க கல்விசார் சூழமைவுக்குள் வாழ்க்கைத் திறன்கள் மற்றும் அறிவை ஊட்டுவதை நோக்கமாகக் கொண்ட சர்வதேச நியமங்களுக்கு இயைபான கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தல். | ✓ | ✓ | ✓ |
| 03 | குறைந்தபட்ச வசதிகளைப் பேணி வருவதற்காக அவசியமான பௌதிக மற்றும் மனித வளங்களை வழங்குதல். | ✓ | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 37 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகள் மேலுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன. ஏனையவை பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 2. சுகாதார மற்றும் ஊடக அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

சுகாதார அமைச்சானது மக்கள்-மையப்படுத்தப்பட்ட மற்றும் சேவை-சார்ந்த ஒரு நிறுவனமாவதுடன், இது ஊடகத் துறையுடனும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது. அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் கீழ், சுகாதாரத் துறையிலான 55 உறுதிமொழிகளையும், அதற்கு மேலதிகமாக ஊடகத் தொனிப்பொருள் சார்ந்த 15 உறுதிமொழிகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு இவ்வமைச்சு பொறுப்பாகவுள்ளது. மேலும், தேசிய கொள்கைச் சட்டகத்தின்கீழ் சுமார் 94 சுகாதாரம் சார்ந்த உறுதிமொழிகள், செயற்பாடுகளாக வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளதாக இக்கண்காணிப்பு மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

குறுகிய காலப்பகுதிக்குள் சுகாதாரத்திற்கான அரசாங்கத்தின் செலவினத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தது 3 சதவீதமாவது படிப்படியாக அதிகரித்தல், அரசாங்க நிதிகளை வினைத்திறனாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் பயன்படுத்துதல் மற்றும் சுகாதாரத் துறையில் ஊழலை ஒழிப்பதற்கான செயல்முனைப்புள்ள நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவை சுகாதாரத் துறையின் முக்கிய உறுதிமொழிகளுள் உள்ளடங்குகின்றன. அரசாங்கம் தனது உத்தியோகபூர்வ பதவிக்காலத்தின் இரண்டாவது ஆண்டை எட்டியுள்ள போதிலும், 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.6 சதவீதம் மாத்திரமே சுகாதாரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

தேசிய கொள்கைச் சட்டகம் சுகாதாரத்துறை சார்ந்த 94 உறுதிமொழிகளை செயற்பாடுகளாக அடையாளம் கண்டுள்ளபோதிலும், 2025–2029 காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டமானது இன்னும் தயாரிப்பு மட்டத்திலேயே உள்ளதென்பதை மேலதிக கண்காணிப்பு முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. மீளாய்வுக் காலப்பகுதியில் ஒரு செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும், அது இயைபான தேர்தல் விஞ்ஞாபனத்தின் அல்லது 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய கொள்கைச் சட்டகத்தின் உறுதிமொழிகளைப் போதியளவில் உள்ளடக்கவில்லை.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம் - 2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (ஜுன் 2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (செப்டெம்பர் 2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (டிசம்பர் 2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு

மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் 59 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றனவென்று கண்காணிப்பு அவதானிப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. இது, தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதனை இலகுபடுத்துகின்றது. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களுள், 25 தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞான உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையவை எனவும், 13 தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை எனவும், 12 தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை எனவும், ஏனைய 08 தீர்மானங்கள் நேரடியாகவே பொருத்தப்பாடற்றவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன.





*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

மேலும், 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக சுகாதாரம் தொடர்பான 122 உறுதிமொழிகள் அறிவிக்கப்பட்டதுடன், இதற்காக 519,541 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இது மொத்த வரவுசெலவுத்திட்டத்தில் 5.8

சதவீதமாகும். இவ்வொதுக்கீட்டில் 81.61 சதவீதம் மீண்டெழுஞ் செலவினத்திற்காகவும், 18.39 சதவீதம் மாத்திரமே மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் நீண்டகால அடிப்படையில் முறைமையை வலுப்படுத்துவதற்குமான அரசிறைக் களம் (fiscal space) மட்டுப்படுத்தப்பட்டளவில் உள்ளதையே சுட்டிக்காட்டுகின்றது. 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 555,100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதன் மூலம் ஒரு முன்னேற்றம் காணப்படுகின்றது. இது மொத்த ஒதுக்கீட்டில் 6.18 சதவீதமாகும். இருப்பினும், மூலதன மற்றும் மீண்டெழுஞ் செலவினம் என்பவற்றுக்கிடையேயான விகிதம் ஏறக்குறைய மாற்றமின்றியே காணப்படுகின்றது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 519,541 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும், 2025 ஆம் ஆண்டுக்கான செலவினத் தொகையும், நிதி மற்றும் பௌதிக ரீதியிலான முன்னேற்றம் தொடர்பான விபரங்களும் அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

ஊடகத் துறையைப் பொறுத்தமட்டில், கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகளை நீக்குவது உள்ளடங்கலாக, 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான உறுதிமொழி காணப்படுகின்றது. இதற்கென ஒரு குழுவை நியமிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டபோதிலும், இந்த வாக்குறுதி இதுவரை உருவாக்க நிலையிலேயே (in the pipeline) உள்ளதுடன், முறையாக இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|
| 01 | குடும்ப சுகாதாரக் கூறுகள் பிரதேசங்களின் நோயாளிகளுக்கு தனித்துவமான சுகாதார சேவைகளை வழங்குவதற்கான சுற்றயல் கிளினிக் சேவைகளை (தனித்துவமான மதியுரையாளர்களின் வருகை) நிறுவுதல். (satellite clinics) | ✓ | ✓ |
| 02 | அரசாங்க சுகாதார நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற எல்லா விதமான ஆய்வுகூடப் பரிசோதனைகள் மற்றும் நடவடிக்கைமுறைகளுக்கான ISO தரநியமங்களை உறுதிசெய்தலும், பெறுபேறுகளுக்கு பொருள்கோடல் வழங்குவதற்காக மருத்துவரொருவரினதும் தாதி உத்தியோகத்தர் ஒருவரினதும் சேவையை 24 மணித்தியாலங்கள் தொலைபேசி மூலமாக பெற்றுக்கொள்ளக்கூடிய புதிய முறையியலொன்று. | ✓ | ✓ |
| 03 | உள, பேச்சு, செவிப்புல, தொழில்சார் மற்றும் சமுதாய இயன்மருத்துவ சிகிச்சைகளுக்கான வசதிகளை நிறுவுதல். | ✓ | ✓ |
| 04 | ஒவ்வொரு மாவட்டத்திலும்/மாகாணத்திலும் வசதிகள் நிறைந்த விரிவான இதயநோய்க் கூறு, விரிவான புற்றுநொய் பராமரிப்புக் கூறு, கண் பராமரிப்புக் கூறு மற்றும் சிறுநீரகப் பராமரிப்புக் கூறு. | ✓ | ✓ |
| 05 | உள்நாட்டு ஔடத உற்பத்திக்கான ஆராய்ச்சிகளையும் வளர்த்தலையும் ஊக்குவித்தல். | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 63 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது ஒரேயொரு மைல்கல்லை மாத்திரமே எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சிய வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 3. வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

ஒவ்வொரு பிரஜைக்கும் ஆரோக்கியமான இல்லத்தை வழங்குதல், பயனுறுதிமிக்க காணி முகாமைத்துவம் மற்றும் விரிவான வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றை அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் முக்கிய கொள்கைசார் முன்னுரிமைகளாக வலியுறுத்துகின்றது. வீடமைப்புத் துறையினுள், 12 தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் நான்கு தொனிப்பொருள்சார் வகுதியின்கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளன: அவையாவன, புதுவாழ்வு வீடமைப்பு, நகர்சார் வீடமைப்பு, கிராமிய வீடமைப்பு மற்றும் பெருந்தோட்ட வீடமைப்பு என்பனவாகும். எவ்வாறாயினும், பெருந்தோட்ட வீடமைப்புத் தொடர்பான உறுதிமொழிகள் பின்னர் பெருந்தோட்ட மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சுக்கு மீளவும் குறித்தளிக்கப்பட்டுள்ளன.

புதுவாழ்வு வீடமைப்பு எனும் வகுதியின்கீழ், புதிதாகத் திருமணமான தம்பதியினர் வீடொன்றை நிர்மாணிப்பதற்கோ அல்லது கொள்வனவு செய்வதற்கோ நிதியுதவி வழங்கும் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. இந்த உறுதிமொழி தொடர்பான அமைச்சரவைக் குறிப்பறிக்கையொன்று அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வீடமைப்புக்கு மேலதிகமாக, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் பணிகளுக்கும் இவ்வமைச்சு பொறுப்பாகவுள்ளது. நிர்மாணத்துறையின் கீழ் 19 உறுதிமொழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதேவேளை, நீர் வழங்கல் தொடர்பான ஒருசில உறுதிமொழிகள் மாத்திரமே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி எனும் வகுதியின்கீழ் வருகின்றன. நிர்மாணம் சார்ந்த பல உறுதிமொழிகள், அரச துறைக்குப் பொருந்தக்கூடிய தரநியமப்படுத்தப்பட்ட பெறுகை நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல் உள்ளடங்கலான பெறுகைச் செயன்முறைகளில் கவனம் செலுத்துகின்றன.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

மொத்தமாக 33 தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் தற்போது தேசிய கொள்கைச் சட்டகத்திலும் நகர அபிவிருத்தி அமைச்சின் மூலோபாயத் திட்டத்திலும் பிரதிபலிப்பதனை கண்காணிப்பின் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஏனெனில் வீடமைப்பு சார்ந்த பணிகள் ஏலவே அந்த அமைச்சின் கீழேயே அதிகாரமளிக்கப்பட்டிருந்தன. எனினும், தற்போது வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சின்கீழ் அவை நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 2026-

2028 காலப்பகுதியில் இயைபான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளின் நடைமுறைப்படுத்துகையை வழிநடத்துவதற்காக ஒரு செயற்பாட்டுத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

‘‘வளமான நாடு, அழகான வாழ்க்கை” எனும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பின்வரும் உறுதிமொழிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அவை தேசிய கொள்கைச் சட்டகத்தினுள் வெளிப்படையாக உள்ளடக்கப்படவில்லை:

- தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்திசைந்து பாரிய நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான ஒரு பொறிமுறையை நிறுவுதல்.
- எல்லா அரச நிறுவனங்களும் ஒருசீரான மற்றும் தரநியமப்படுத்தப்பட்ட அரசாங்க பெறுகைச் சட்டகத்திற்கு (public procurement framework) இசைந்தொழுகுவதை உறுதிப்படுத்தல்.

## நீர் வழங்கல்


| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம் - 29) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

## வீடமைப்பு

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | பெறப்பட்டது. |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

## அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு

மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் 10 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றன. இது, தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதனை இலகுபடுத்தியது. அமைச்சரவைத் தீர்மானங்களில் இரண்டு (2) தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்துடன் அதிக பொருத்தப்பாடுடையவை எனவும், மேலும் இரண்டு (2) தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை எனவும், இன்னும் இரண்டு (2) தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை எனவும், நான்கு (4) தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றவை எனவும் கண்காணிப்புப் பகுப்பாய்வு சுட்டிக்காட்டுகின்றது.





*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு


2026 ஆம் ஆண்டில் சுமார் 31,000 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்கு இசைவாக, டித்வா அனர்த்தம் சார்ந்த தாக்கங்களால் எழுந்த 20,000 இற்கு மேற்பட்ட வீட்டு அலகுகளுக்கான மேலதிகத் தேவையையும் கருத்திற்கொண்டு, 2026 ஆம் ஆண்டில் அமைச்சின் ஒரு முக்கிய நிகழ்ச்சித்திட்டமாக ‘‘இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல்’’ (Rebuilding Sri Lanka) எனும் முன்முயற்சி உருவெடுத்துள்ளது.

2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக வீடமைப்புத் தொடர்பான 50 உறுதிமொழிகள் அறிவிக்கப்பட்டன. இதற்கென ஒதுக்கப்பட்ட 104,268 மில்லியன் ரூபாவில் 2.93 சதவீதம் மீண்டெழுஞ் செலவினத்திற்காகவும், 97.09 சதவீதம் மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வுறுதிமொழிகளை நடைமுறைப்படுத்த உதவுவதற்காக 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் அதே விகிதத்தில் 101,212 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 104,268 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 26,613 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 31 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான விபரங்கள் அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக வீடமைப்புத் தொடர்பான 50 உறுதிமொழிகள் அறிவிக்கப்பட்டன. இதற்கென ஒதுக்கப்பட்ட 104,268 மில்லியன் ரூபாவில் 2.93 சதவீதம் மீண்டெழுஞ் செலவினத்திற்காகவும், 97.09 சதவீதம் மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வுறுதிமொழிகளை நடைமுறைப்படுத்த உதவுவதற்காக 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் அதே விகிதத்தில் 101,212 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நீர் வழங்கல் என்பது ஓர் அத்தியாவசிய சேவையாக இருந்தபோதிலும், அது பற்றி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பான வாக்குறுதிகள் எவையுமில்லை என்ற விடயம் அவதானிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | கொழும்பு நகரத்தின் சேரிப்புற மற்றும் குடிசை வீடுகளில் வசிக்கின்ற மக்களுக்கு அரச இடையீட்டுடன் பொருத்தமான வீடுகள். | ✓ | ✓ | ✓ |
| 02 | நகர்சார் மற்றும் பகுதியளவிலான நகர்சார் பிரதேசங்களில் சுகாதாரம், கல்வி, விளையாட்டு, போக்குவரத்து, பூங்கா வசதிகளைக் கொண்ட முழுநிறைவான வீடமைப்புக் கருத்திட்டங்கள். | | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 08 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளை மேலுள்ள அட்டவணை சுட்டிக்காட்டுகின்றது. ஏனைய வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 4. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனமானது சிறுவர் விவகாரங்கள் தொடர்பான உறுதிமொழிகளை வழிநடத்தும் முக்கிய கருத்தேற்புசார் சட்டகமாக, ‘‘பாதுகாப்பான சிறுவர் உலகம், படைப்பாற்றல்மிக்க எதிர்கால சந்ததி’’ என்பதை வெளிப்படுத்துகின்றது. இந்த உறுதிமொழிகளுக்கு அடிப்படையான முக்கிய கோட்பாடுகள், சர்வதேச சமவாயங்களுடன், அதிலும் குறிப்பாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சமயவாயத்துடன் (UNCRC), ஒத்திசைந்த சட்ட மற்றும் நிறுவன ரீதியான ஒரு சட்டகத்தை நிறுவுவதனை உள்ளடக்குகின்றன. இது, சுதந்திரம், காப்பு மற்றும் துஷ்பிரயோகத்திலிருந்தும் சகல வடிவங்களிலான வன்முறைகளிலிருந்தும் சிறுவர்களின் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தி, போதிய கவனிப்பையும் போஷாக்கையும் வழங்கி, எல்லா சிறுவர்களினதும் ஒட்டுமொத்த நல்வாழ்வையும் பூரணமான அபிவிருத்தியையும் ஊக்குவிக்கின்றது.

சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பான கணிசமான எண்ணிக்கையிலான உறுதிமொழிகள், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் அமுல்படுத்தப்படும் நடவடிக்கைகளுடன் மேவுகின்றன (overlap) என்பதை கண்காணிப்பின் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இது அமைச்சுக்களுக்கு இடையிலான வலுவான ஒருங்கிணைப்புப் பொறிமுறைகளின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. தேசிய கொள்கைச் சட்டகத்தினுள் ‘‘பாதுகாப்பான சிறுவர் உலகம், படைப்பாற்றல்மிக்க எதிர்கால சந்ததி’’ எனும் தொனிப்பொருளின் கீழ் 15 உறுதிமொழிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அதேவேளை, ‘‘முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கல்வி’’ எனும் தொனிப்பொருளின் கீழ் மேலதிகமாக ஒன்பது உறுதிமொழிகளும், பெண்களை மையப்படுத்திய 20 வாக்குறுதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

இந்த உறுதிமொழிகள் கல்வித் துறையுடன் தொனிப்பொருள்சார் ஒத்திசைவாக இருந்தபோதிலும், சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பான மொத்தம் 59 உறுதிமொழிகள் தேசிய கொள்கைச் சட்டகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில், அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுவரும் நிலையே காணப்பட்டது. அதேவேளை, நடைமுறைப்படுத்தலை வழிநடத்துவதற்கான ஒரு செயற்பாட்டுத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மகளிர் விவகாரங்களைப் பொறுத்தமட்டில், ‘‘பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு வரிச் சலுகைகள், நிதி உதவி மற்றும் வேறு அத்தியாவசிய வளங்களை வழங்குவதன் மூலம் மாதவிடாய்க் கால வறுமையை (period poverty) இல்லாதொழித்தல்’’ எனும் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழியானது கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக தொழிற்படுத்தப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் அதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் பெற்றுள்ளது. அதேபோன்று, சர்வதேச தரநியமத்திற்கு ஒத்திசைந்து சிறுவர்-நேயக் கற்றல் சூழலில் வாழ்க்கைத் திறன்களையும் அறிவையும் வளர்ப்பதற்கான கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழியானது, சிறுவர் விவகாரங்களின் கீழ் பட்டியலிடப்பட்டிருந்தாலும், அது கல்வி அமைச்சின் ஒரு பிரதான நிகழ்ச்சித்திட்டமாகவே அமைகின்றது. எவ்வாறாயினும், கண்காணிப்பின் அவதானப்புக்கள், இந்தச் சீர்திருத்தங்களின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட ஆறாம் தர ஆங்கிலப் பாடத் தொகுப்பு (module) பற்றிய கரிசனைகளை வெளியிட்டுள்ளன. இதன்மூலம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களுடன் இச்சீர்திருத்தம் எந்தளவுக்கு இணங்கிப் போகின்றது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.


‘‘வளமான நாடு, அழகான வாழ்க்கை” எனும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பின்வரும் உறுதிமொழிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அவை தேசிய கொள்கைச் சட்டகத்தில் வெளிப்படையாகப் பிரதிபலிக்கவில்லை:

- LGBTIQ+ சமூகத்தினருக்கு சுகாதாரக் கவனிப்பு, சட்ட உதவி, சமூகப் பாதுகாப்பு மற்றும் நீதி உட்பட, அரச சேவைகளுக்கான சமமான அணுகலை விரிவுபடுத்துதல்.
- பல்வகைமைசார் பால்நிலை அடையாளங்களையுடைய (diverse gender identities) தனிநபர்களுடனான தொடர்பாடல்களின் போது, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஆளணியினர் உட்பட, அரச அலுவலர்களை வழிநடாத்துவதற்கான தெளிவான தொழிற்பாட்டுத் தரநியமங்களுடன்கூடிய நடத்தைக் கோவையொன்றை உருவாக்கி அதனை நிறுவனமயப்படுத்துதல்.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் 11 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றன. இது, தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்படுவதை இயலுமாக்கியது. இந்த அமைச்சரவைத் தீர்மானங்களுள் நான்கு (4) தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்துடன் அதிக பொருத்தப்பாடுடையவையாகவும், மூன்று (3) தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவையாகவும், மேலும் மூன்று (3) தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவையாகவும், அத்துடன் ஒரு (1) தீர்மானம் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றதாகவும் காணப்பட்டன.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*


### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

மேலும், 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்களின்கீழ் 23 உறுதிமொழிகள் அறிவிக்கப்பட்டதுடன், அவற்றை நடைமுறைப்படுத்த 16,328 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒதுக்கப்பட்ட நிதியில் சுமார் 94 சதவீதம் மீண்டெழுஞ் செலவினமாகும் என்பதுடன் வெறும் 5 சதவீதம் மாத்திரமே மூலதனச் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என கண்காணிப்புப் பகுப்பாய்வு சுட்டிக்காட்டுகின்றது. இது நிகழ்ச்சித்திட்ட விரிவாக்கம் மற்றும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதிர்பார்க்கப்பட்ட நீண்டகால கட்டமைப்புசார் இடையீடுகளுக்குத் தேவையான வளங்களின் போதியதன்மை பற்றிய கரிசனைகளை எழுப்பியுள்ளது. 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்திலும் இந்தத் தரவுகள் கிட்டத்தட்ட அவ்வாறே பிரதிபலிக்கின்றன.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 16,328 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. எவ்வாறாயினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 9,016 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 55 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் பிரதிபலிக்கின்றது. பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான விபரங்கள் அமைச்சிடமிருந்து இன்னமும் கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | புதிதாகத் திருமணமான தம்பதிகள் தங்களது வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி உதவியை வழங்குதல். | ✓ | ✓ | ✓ |
| 02 | இயலாமைக்குட்பட்ட சிறுவர்கள், வீதிகளிலுள்ள சிறுவர்கள் மற்றும் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் உட்பட, அபாய நேர்வுக்கு உட்படக்கூடிய சிறுவர்களை முன்கூட்டியே இனங்காண்பதற்கு மற்றும் அவர்களுக்காக உரிய தலையீட்டினை மேற்கொண்டு செயற்படுவதற்கு வலுவான பொறிமுறையொன்றை தாபித்தல். | ✓ | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 20 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளை மேலுள்ள அட்டவணை சுட்டிக்காட்டுகின்றது. ஏனைய வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 5. விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனமானது பங்கேற்பு, ஒழுக்கம், நம்பிக்கை, போட்டித்தன்மை, தொழில்வாண்மை மற்றும் சர்வதேச மட்டத்திலான நிபுணத்துவம் ஆகியவற்றை விளையாட்டுத் துறையின் அடிப்படை வழிகாட்டற் கோட்பாடுகளாக அடையாளப்படுத்துகின்றது. போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், விளையாட்டுக்களில் சமமான அணுகல், சர்வதேச ஒத்துழைப்பு அத்துடன் அரச நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு இடையிலான கூட்டுழைப்பு ஆகிய உறுதிமொழிகளின் ஊடாக இக்கோட்பாடுகள் மேலும் வலுப்படுத்தப்படுகின்றன.

இச்சட்டகத்தினுள், விளையாட்டுத் துறை சார்ந்த 30 தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளையும், இளைஞர் விவகாரங்கள் சார்ந்த தொனிப்பொருள் விடயப்பரப்பின் கீழான 37 உறுதிமொழிகளையும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு கொண்டுள்ளது.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

கண்காணிப்பின் முடிவுகள், அமைச்சின்கீழ் வருகின்ற 67 உறுதிமொழிகள் தேசிய கொள்கைச் சட்டகத்தில் பிரதிபலிக்கப்படுவதை சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, 2026-2028 காலப்பகுதிக்கான இயைபான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், நடைமுறைப்படுத்தற் செயற்பாடுகளுக்கு வழிகாட்டுவதற்காக 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.


''வளமான நாடு, அழகான வாழ்க்கை" எனும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பின்வரும் உறுதிமொழிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அவை தேசிய கொள்கைச் சட்டகத்தில் வெளிப்படையாக உள்வாங்கப்பட்டிருக்கவில்லை:

- அரசிடமிருந்தான இலகுபடுத்துகைசார் ஆதரவுடன், பொருத்தமானதும் இலாபகரமானதுமான வேலைவாய்ப்புக்களை அணுகிப் பெறுவதற்கு இளைஞர்களுக்குள்ள உரிமையைப் பாதுகாத்தல்.
- சுற்றாடல் ஆளுகை மற்றும் நிலைபேண்தகுதன்மை சார்ந்த முன்முயற்சிகளில் இளைஞர்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காக, உள்ளூராட்சி மட்டத்தில் இளைஞர் செயற்பாட்டு சுற்றாடல் குழுக்களை நிறுவுதல்.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

## அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் ஆறு அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றன. இது, தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்படுவதை இயலுமாக்கியது. இந்த அமைச்சரவைத் தீர்மானங்களுள் இரண்டு (2) தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையவை என்றும், இரண்டு (2) தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை என்றும், ஒரு (1) தீர்மானம் பகுதியளவு பொருத்தப்பாடுடையது என்றும், ஒரு (1) தீர்மானம் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றது என்றும் மதிப்பிடப்பட்டமையை கண்காணிப்பின் போதான பகுப்பாய்வு வெளிப்படுத்தியது.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*


## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக 12,600 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டுடன் மொத்தம் 29 உறுதிமொழிகள் அறிவிக்கப்பட்டன. இந்த உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் வகையில் 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் 14,300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மீண்டெழுஞ் செலவினங்களுக்கும் மூலதனச் செலவினங்களுக்கும் இடையிலான விகிதமானது, அண்ணளவாக 55% மீண்டெழுஞ் செலவு மற்றும் 45% மூலதனச் செலவு என்றளவில் மாற்றமின்றி காணப்படுகின்றது. இது தொழிற்பாட்டு ரீதியான செலவுகளுக்கும் அபிவிருத்தி முதலீடுகளுக்கும் இடையில் ஒப்பீட்டளவில் சமநிலையான ஒதுக்கீட்டைச் சுட்டிக்காட்டுகின்றது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 12,600 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 4,300 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 34 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

கண்காணிப்பானது, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் தொடர்பான பல உறுதிமொழிகள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை மேவுவதாக (overlap) வெளிப்படுத்துகின்றது. எனவே, ஒரே செயற்பாடுகள் இருமுறை செய்யப்படுவதைத் (duplication) தவிர்ப்பதற்கும், நடைமுறைப்படுத்தலில் ஒத்திசைவை (coherence) உறுதிப்படுத்துவதற்கும், அமைச்சுக்களுக்கிடையேயான பயனுறுதிமிக்க ஒருங்கிணைப்பு அவசியமென்பதை இது வலியுறுத்துகின்றது.

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | சட்டவிரோத ஊக்கமருந்துகளைப் பாவித்தல், போட்டிகளைக் காட்டிக்கொடுத்தல் மற்றும் ஏனைய மோசடிகள் உள்ளிட்ட அனைத்து ஊழல் மோசடிகளையும் ஒழிப்பதற்கான பொறிமுறை. | ✓ | ✓ | ✓ |
| 02 | முரண்பாடுகளின்றி ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவையான உபகரணங்களும் வசதிகளும் அரச இடையீட்டில் வழங்கப்படும். | ✓ | ✓ | ✓ |
| 03 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் அதன் கிளைகள், தேசிய இளைஞர் படையணி, இளைஞர் கழக இயக்கம் போன்ற அரச நிறுவனங்களை அறிவு, திறன், ஒழுக்கத்துடன் கூடிய செயலாற்றல்மிக்க நவீன இளம் தலைவர், தலைவிகளை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு மறுசீரமைப்புச் செய்தல். | ✓ | ✓ | ✓ |
| 04 | ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் முற்றிலும் பரிபூரணமான ஒரு விளையாட்டரங்கு. | ✓ | ✓ | ✓ |
| 05 | கிராமிய மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை செல்கின்ற ஒன்றிணைந்த விளையாட்டுப் பயிற்சித் திட்டம். | ✓ | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 37 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. ஏனைய வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 6. தொழில் அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம், "செயற்றிறன் மிக்க ஊழியர் படை – கௌரவமான தொழில்சார் வாழ்க்கை" என்பதனை தொழிலாளர் சார்ந்த உறுதிமொழிகளுக்கான வழிகாட்டும் மேலோங்கிய தொனிப்பொருளாக (overarching theme) அடையாளப்படுத்துகின்றது. தொழிலின் கண்ணியத்தையும் மதிப்பையும் பாதுகாத்தல், பணியிடத்தில் சமமான நடாத்துகையும் பல்வகைமையும், மற்றும் பாரபட்சம் எதுவுமில்லாது சம வாய்ப்புக்களை வழங்குதல் ஆகியவை இந்தத் தொனிப்பொருளின் மையக் கோட்பாடுகளாக (core principles) அமைகின்றன.

இந்தத் தொனிப்பொருளின்கீழ், வேதன ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதையும் ஊழியர்களை ஊக்குவிப்பதையும் நோக்காகக் கொண்ட தேசிய சம்பளக் கட்டமைப்பை நிறுவுதல் உட்பட மொத்தமாக 21 தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இது தொடர்பாக அமைச்சரவைத் தீர்மானங்கள், பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள் அத்துடன் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் ஊடாக தேசிய சம்பளக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அரச மற்றும் தனியார் துறைகளின் மாதாந்தச் சம்பளங்களுக்கான திருத்தங்கள் மற்றும் குறைந்தபட்ச வேதனச் சட்டத்திலான (Minimum Wages Act) சீர்திருத்தங்கள் ஆகியன சட்டமாக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், இந்தத் திருத்தங்கள், நாளாந்த வேதனம் பெறும் தொழிலாளர்களுக்கு (daily wage workers) நேரடிப் பயனளிக்கவில்லை என்பது கண்காணிப்பு முடிவுகளின் மூலம் தெரியவருகின்றது. வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கு "உலகளாவிய பிரஜை" (*Universal Citizen*)

என்ற தொனிப்பொருளின்கீழ் வழங்கப்பட்ட தனிவேறான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழியானது மேற்கூறிய வேதனச் சீரமைப்புக்களின் ஊடாகத் தகுந்த முறையில் கையாளப்படவில்லை. தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிக்கிணங்க, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை அதிகரிப்பதற்கான ஒரு விசேட அறிவிப்பு 2026 வரவுசெலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட போதிலும், அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தொழில் அமைச்சுக்குப் பதிலாக பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சுக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளது.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

தொழிலாளர் சம்பந்தப்பட்ட 24 தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளும் தேசிய கொள்கைச் சட்டகத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாக கண்காணிப்பு மேலும் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வின் போது, 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான அமைச்சின் மூலோபாயத் திட்டம் உருவாக்கப்பட்டுக்கொண்டிருந்த அதேவேளை, 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், அச்செயற்பாட்டுத் திட்டம் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் அனைத்தையும் முழுமையாக உள்ளடக்கியிருக்கவில்லை.


"வளமான நாடு, அழகான வாழ்க்கை" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவையும், தேசிய கொள்கைச் சட்டகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவையுமான பின்வரும் உறுதிமொழிகளைக் கண்காணிப்பு நடவடிக்கை அடையாளப்படுத்தியது. எவ்வாறிருப்பினும், முன்மொழியப்பட்ட வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கை நீக்கப்பட்டுள்ளது:

- பாடசாலை பாடத்திட்டத்திற்குள் பட்டப்படிப்பு மட்டம் வரையிலான தொழிற்கல்வியை ஒருங்கிணைத்தல்.
- பொருளாதாரம் விரிவடையும் போது மேலதிக தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான ஒரு பொறிமுறையுடன் சேர்த்து, நீண்டகாலமாக வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல்.
- ஆசிரியர் தொழிலுக்கு 20,000 தனிநபர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்.
- தகவல் தொழில்நுட்பவியல் துறையில் 3,000 STEM பட்டதாரிகளையும் மற்றும் 9,000 STEM அல்லாத பட்டதாரிகளையும் தொழிலில் அமர்த்துதல்.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேயன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு எட்டு அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன், அவை தொழிலாளர் தொடர்பான தெரிவுசெய்யப்பட்ட முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதையும் இலகுபடுத்தின. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களுள் ஒரு தீர்மானம் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையது என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை நான்கு தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை என்றும், ஒரு தீர்மானம் "பகுதியளவு பொருத்தப்பாடுடையது என்றும், அத்துடன் இரண்டு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றவை என்றும் மதிப்பிடப்பட்டுள்ளன.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*


### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

மேலும், 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக தொழிலாளர் தொடர்பான 14 உறுதிமொழிகள் அறிவிக்கப்பட்டதுடன், 2025 ஆம் ஆண்டில் 6,136 மில்லியன் ரூபா அதற்கெனச் செலவிடப்பட்டுள்ளது. இது 72 சதவீதம் மீண்டெழுஞ் செலவு மற்றும் 18 சதவீதம் மூலதனச் செலவு என்ற விகிதத்தைக் கொண்டுள்ளது. இந்த உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் வகையில், 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் அதே விகிதத்துடன் 6,400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 6,136 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 3,168 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 52 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

### பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

அரச மற்றும் தனியார் துறைகளுக்கான சம்பளத்தில் செய்யப்பட்ட கட்டமைப்புசார் மாற்றங்கள் அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள முக்கிய வாக்குறுதிகளில் ஒன்றாகும். அதற்கமைய, சட்டத் திருத்தங்கள் ஊடாக மாதாந்தச் சம்பளம் மாத்திரமன்றி, தொழிலாளர்களின் நாளாந்த வேதனமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இச்செயல்முறையை முழுமைப்படுத்துவதற்காக, 2005 ஆம் மற்றும் 2016 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டங்கள் ஊடாக வழங்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிகளை உள்ளடக்கிய திருத்தச் சட்டங்களான, 2025 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமும் அத்துடன் 2025 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமும் நீக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, முன்னதாக சம்பளக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த வரவுசெலவுத்திட்டப் படிகள் (budgetary allowances), 2025 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதன (திருத்தச்) சட்டத்தின் மூலம் அடிப்படைச் சம்பளமாகவும் வேதனங்களாகவும் மாற்றப்பட்டன.

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | பாராளுமன்றம் | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | தொழிற் கொள்கையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல். | ✓ | | ✓ | ✓ |
| 02 | மேன்பவர் ஊழியர்களின் (manpower workers) தொழில் பாதுகாப்பையும் நியாயமான சம்பளத்தையும் உறுதிசெய்தல். | ✓ | | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 14 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. ஏனையவை பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 7. கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத் துறையானது சுமார் 8.4% பங்களிப்பை வழங்குகின்றது. இது இத்துறை சார்ந்த தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளின் மூலோபாய முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. "உயர்வான உற்பத்தித்திறன் - உணவுப் பாதுகாப்புமிக்க நாடு" என்ற தொனிப்பொருளின் கீழ், அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் 10 உப-துறைகளில் 52 உறுதிமொழிகளை உள்ளடக்கியுள்ளது. அத்துடன், "உயர்தரமான கால்நடை உற்பத்தி - ஒரு தொழில்முயற்சியாண்மைசார் அணுகுமுறை" என்ற தொனிப்பொருளின் கீழ் நான்கு உப-துறைகளில் 21 உறுதிமொழிகளும், காணி மற்றும் நீர்ப்பாசனம் தொடர்பான நான்கு உப-துறைகளில் மேலும் 24 உறுதிமொழிகளும் காணப்படுகின்றன. ஒட்டுமொத்தமாக, இந்த உறுதிமொழிகள் விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் பணிப்பாணைக்குள் (Mandate) வருகின்றன.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனம் தொடர்பான 107 உறுதிமொழிகள் தேசிய கொள்கைச் சட்டகத்தினுள்** உள்வாங்கப்பட்டுள்ளதாக கண்காணிப்பின் முடிவுகள் தெரிவிக்கின்றன. **இது எல்லாத் துறைகளுக்குமிடையிலான உறுதிமொழிகளுள்,** கல்வித் துறைக்கு அடுத்தபடியாக, **இரண்டாவது அதிகப்படியான எண்ணிக்கையை** பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், **மொத்த உறுதிமொழிகளில் சுமார் 8 சதவீதமுமாகும்.** மீளாய்வின் போது, **2026–2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான இயைபான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளின் நடைமுறைப்படுத்தலை வழிகாட்டுவதற்கான அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு மட்டத்திலேயே இருந்தது.** அதேவேளை, **மீளாய்வுக் காலப்பகுதிக்கான செயற்பாட்டுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிலையில் (pending receipt) இருந்தது.**

கண்காணிப்பு நடவடிக்கையானது, "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள பின்வரும் உறுதிமொழி தேசிய கொள்கைச் சட்டகத்தில் வெளிப்படையாக உள்வாங்கப்படவில்லை என்பதை அடையாளம் கண்டது:


- சுற்றுச்சூழல் ரீதியாக அல்லது சமூக ரீதியாக கூருணர்வுகொண்ட பிரதேசங்களிலுள்ள காணியின் பாதுகாப்பு.

அவதானிப்பு: இந்த உறுதிமொழி தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், அது தேசிய கொள்கைச் சட்டகத்தில் பிரதிபலிக்கவில்லை. இது தேர்தல் விஞ்ஞாபனத்தின் உள்நோக்கம் (intent) மற்றும் முறைசார் கொள்கை ஏற்பு (formal policy adoption) ஆகியவற்றுக்கு இடையிலான ஓர் இடைவெளியைச் சுட்டிக்காட்டுகின்றது.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | பெறப்பட்டது. |
| 2025-09-30 ஆம் தேயன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு 25 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் இயலச் செய்துள்ளன. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில், ஆறு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையவை என மதிப்பிடப்பட்டுள்ள அதேவேளை, ஒன்பது தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை எனவும், ஐந்து தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை எனவும், மேலும் ஐந்து தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*


## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

இந்த உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவாக, 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 119 வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டதுடன், அதற்கமைய அமைச்சுக்கு 218,382 மில்லியன் ரூபா ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. இது மொத்த தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 2.48 சதவீதமாகும். இவ்வொதுக்கீட்டில் முறையே 38.38 சதவீதம் மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும் மற்றும் 61.62 சதவீதம் மூலதனச் செலவினங்களுக்காகவும் குறித்தொதுக்கப்பட்டுள்ளன. இதனுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு 229,050.00 மில்லியன் ரூபாவாக உயர்வடைந்துள்ளமை ஓர் அதிகரிப்பைக் காட்டுகின்றது. மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்கான விகிதம் கிட்டத்தட்ட அதேயளவில் உள்ளது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 218,382 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 95,642 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 44 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

## தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | பரவலாகக் காணப்படுகின்ற விலங்கு நோய்களை கட்டுப்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம். | ✓ | ✓ | ✓ |
| 02 | விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலுவல்களின் மேம்பாட்டுக்கான நிதி ஏற்பாடுகளை அதிகரித்தல். | ✓ | ✓ | ✓ |
| 03 | குளங்கள், கால்வாய்கள் மற்றும் ஆற்றுத் திருப்பங்கள் போன்ற நீர்ப்பாசன முறைமைகளை கால இடைவெளிகளில் புனரமைத்தல். | ✓ | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 43 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, வாக்குறுதிகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 8. கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

இலங்கையின் மீன்பிடித் துறையானது மூன்று பிரதான அங்கங்களைக் கொண்டுள்ளது: கடல்சார் மீன்பிடி (*marine fisheries*), உள்நாட்டு (நன்னீர்) மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு (*Aquaculture*) தொழில்துறை. இலங்கையின் கடல்சார் நியாயாதிக்க இடப்பரப்பு (maritime jurisdiction) சுமார் 517,000 சதுரகிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட பிரத்தியேக பொருளாதார வலயத்தை (Exclusive Economic Zone - EEZ) உள்ளடக்கியுள்ளது. மேலும், நாடு பரந்தளவிலான உள்நாட்டு மற்றும் கரையோர நீர் வளங்களைக் கொண்டுள்ளது. இதில் சுமார் 21,500 சதுரகிலோமீட்டர் உள்நாட்டு நீர்நிலைகளும், 1,580 சதுரகிலோமீட்டர் களப்புகள் மற்றும் முகத்துவாரங்களும் (estuaries) அத்துடன் 5,200 சதுரகிலோமீட்டர் நீர்த்தேக்கங்களும் உள்ளடங்குகின்றன.

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனமானது கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் துறை சார்ந்த சுமார் 68 உறுதிமொழிகளை வரையறுத்துக் கூறுகின்றது. உயிருள்ள மற்றும் உயிரற்ற கடல் வளங்களை நிலைபேண்தகு முறையில் பயன்படுத்துதல் (sustainable utilisation), நீலப் பொருளாதார (Blue Economy) அணுகுமுறையின் ஊடாக நவீன கடல்சார் கைத்தொழில்களை நிறுவுதல் மற்றும் உலகளாவிய சந்தைகளில் இலங்கையர் வர்த்தக நாமம் (Sri Lankan brand) ஒன்றை உருவாக்குதல் ஆகியவை இதிலுள்ள முக்கிய உறுதிமொழிகளாகும். இதில், அலங்கார மீன் மற்றும் நீர்வாழ் தாவர ஏற்றுமதி வருமானத்தை 2028 ஆம் ஆண்டளவில் 25 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கான இலக்கும் உள்ளடக்கப்பட்டுள்ளது.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

அமைச்சின் பணிப்பாணையின் கீழ் இத்துறை தொடர்பான 66 உறுதிமொழிகள் தேசியக் கொள்கைச் சட்டகத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளன என்று கண்காணிப்பு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு மட்டத்தில் இருந்தது. அதேவேளை, ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அது கண்காணிப்பு நோக்கங்களுக்காக இன்னும் உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேயன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு 10 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகளின் நடைமுறைப்படுத்தலையும் இலகுபடுத்தின. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில், இரு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையவை என மதிப்பிடப்பட்டுள்ள அதேவேளை, ஏழு தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை எனவும், ஒரு தீர்மானம் பகுதியளவு பொருத்தப்பாடுடையது எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*


### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

அரச நிதியளிப்பைப் பொறுத்தவரை, 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் அமைச்சானது 20 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டதுடன், அதற்காக 11,684.30 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டது. அந்த ஒதுக்கீட்டில் 53 சதவீதம் மீண்டெழுஞ் செலவினங்களாகவும் 47 சதவீதம் மூலதனச் செலவினங்களாகவும் காணப்பட்டன. 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் 18 முன்மொழிவுகள் உள்ளன. இதற்காக 11,800 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அதில் சுமார் 35 சதவீதம் மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும் 65 சதவீதம் மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது முதலீடு சார்ந்த இடையீடுகளுக்கு (investment-oriented interventions) ஒப்பீட்டளவில் வலுவான முக்கியத்துவம் அளிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 11,684 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 5,374 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 46 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

## தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | தற்போது கடுமையான பின்னடைவுக்கு இலக்காகியுள்ள கடலக மீன்பிடி அலுவல்களை இற்றைப்படுத்துவதற்காக நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல். | ✓ | ✓ | ✓ |
| 02 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சார்ந்ததாக அங்குள்ள மக்களை இலக்காகக் கொண்ட பன்னாள் மீன்பிடி கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக துறைமுகங்களை விரிவாக்குதலும் வசதிகளை முன்னேற்றுதலும். | ✓ | ✓ | ✓ |
| 03 | சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை தைரியமிழக்கச் செய்வித்தல், கடலக விபத்துகள் மற்றும் ஊழல்களைக் குறைத்தல் மற்றும் அவசர பிரதிபலிப்புச் செய்தல் அத்துடன் கடல்சார் விபத்துகளைக் குறைப்பதற்கான பொறியமைப்புகள். | ✓ | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 21 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, வாக்குறுதிகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 9. டிஜிட்டல் பொருளாதார அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

டிஜிட்டல் பொருளாதார அமைச்சானது "ஒரு டிஜிட்டல் அரசு – ஒரு சர்வதேச பங்காண்மை" எனும் தேர்தல் விஞ்ஞாபனத் தொனிப்பொருளின்கீழ் வழிநடத்தப்படுகின்றது. இது, புத்தாக்கம் மூலம் உந்தப்பட்ட நிலையான பொருளாதார வளர்ச்சி, அரசாங்க சேவைகளின் டிஜிட்டல் நிலைமாற்றம், இலங்கையின் சந்தை அடையாளத்தை மீள் வர்த்தகநாமப்படுத்துதல் (rebranding), டிஜிட்டல் பொருளாதாரத்திலுள்ள வாய்ப்புக்களைப் பயன்படுத்துதல் அத்துடன் நவீன தொழில்நுட்பங்கள், மிகச்சிறந்த நடைமுறைகள் (best practices) மற்றும் சந்தை அணுகல் ஆகியவற்றுக்கான சர்வதேச கூட்டுழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் சர்வதேசத் தரநியமங்களுக்கு ஒத்திசைவாக டிஜிட்டல் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் ஆகிய விடயங்கள் உள்ளடங்கலாக, முக்கிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

இந்த தொனிப்பொருள்சார் விடயப்பரப்பின் கீழ் 37 உறுதிமொழிகள் தேசிய கொள்கைச் சட்டகத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக கண்காணிப்பு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான, தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்த வழிகாட்டும் அமைச்சின் மூலோபாயத் திட்டமானது தயாரிப்பு மட்டத்தில் இருந்தது. அதேவேளை, 2025 ஆம் ஆண்டுக்கான ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அது கண்காணிப்பு நோக்கங்களுக்காக இன்னும் உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு எட்டு அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகளின் நடைமுறைப்படுத்தலையும் இலகுபடுத்தின. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில், மூன்று தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையவை என மதிப்பிடப்பட்ட அதேவேளை, இரு தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை எனவும், மேலும் இரு தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை எனவும், அத்துடன் ஒரு தீர்மானம் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றது எனவும் மதிப்பிடப்பட்டன.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

இந்த தொனிப்பொருள்சார் சட்டகத்தின்கீழ், தேர்தல் விஞ்ஞாபனமானது அமைச்சின் பணிப்பாணைக்குள் வருகின்ற 37 உறுதிமொழிகளை வரையறுத்துக் கூறுகின்றது. அவை 16 வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களினாலும் கருத்திட்டங்களினாலும் ஆதரிக்கப்படுகின்றன. 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் அமைச்சுக்கு 16,623 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 59 சதவீதம் மூலதனச் செலவினங்களுக்காகவும், 41 சதவீதம் மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும், 2026 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டமானது டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் நிலைமாற்ற முன்முயற்சிகளை நோக்கிய ஒரு சிறிய முதலீட்டு நோக்குநிலையைக் (investment orientation) காட்டுகின்றது. இது மூலதனச் செலவினத்தை 59 சதவீதத்திலிருந்து 61 சதவீதமாக அதிகரித்துள்ளது.





*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 16,623 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2,535 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 18 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

இலத்திரனியல் பெறுகை (e-procurement) மற்றும் வலுவான அரச மேற்பார்வைப் பொறிமுறை உள்ளடங்கலான டிஜிட்டல் அடிப்படையிலான ஆளுகைக்கூடாக அரச நிதி வினைத்திறன், வெளிப்படைத்தன்மை, ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை முன்னேற்றுதல் அத்துடன் அநாவசியமான அரச செலவினங்களை இல்லாதொழித்தல் (பக்கம் 104) என்பது, தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுள் ஒன்றாகும். அரசாங்கம், இந்த வாக்குறுதியை 2026 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டின் ஊடாக நடைமுறைப்படுத்த உட்கருதியது.

கொள்கை உந்துவிசையானது (policy thrust) கணிசமான அரசிறை சார்ந்த உறுதிமொழிகளினால் (fiscal commitments) வலுப்படுத்தப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டம் 30 பில்லியன் ரூபா பெறுமதியான டிஜிட்டல்மயமாக்கல் நிதித் தொகுப்பிலிருந்து“ (digitalisation envelope) கணிசமான பங்கை, இலத்திரனியல் பெறுகை (e-procurement) மற்றும் கொடுப்பனவு முறைமைகளை விரிவுபடுத்துவதற்காக ஒதுக்கியுள்ளது.

ஊடகத் தகவல்களின்படி, 2026 ஜுலை 1 முதல் மத்திய அரசாங்கத்தின் எல்லா அமைச்சுக்களும், திணைக்களங்களும், முகவராண்மைகளும் ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவத் தகவல் முறைமையின் (Integrated Treasury Management Information System - ITMIS) ஊடாகத் தோற்றுவிக்கப்படும் கொள்வனவுக் கட்டளைகளை (purchase orders) மாத்திரமே பிரத்தியேகமாகப் பயன்படுத்த வேண்டுமென அரசாங்கம் பணிப்பாணை விடுத்துள்ளது.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

## தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

“புத்தாக்கத்தை ஊக்குவிக்கின்ற, புலமைச் சொத்துரிமைகளைப் பாதுகாக்கின்ற, அத்துடன் தரவுத் தனியுரிமை, பாதுகாப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துகின்ற ஒரு விரிவான சட்டச் சட்டகத்தை நடைமுறைப்படுத்துதல்” (பக்கம் 154) என்ற தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிக்கமைய, 2025 மார்ச் 17 ஆம் திகதி அரசாங்கம் அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டது. இதன்படி, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவும், அதன்பின்னர் 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க, ஒழுங்குபடுத்துகைசார் மேற்பார்வையை வலுப்படுத்தவும், இணங்கியொழுகுதலை (compliance) மேம்படுத்தவும் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை ஊக்குவிக்கவும் என பாராளுமன்றம் 2025 ஒக்டோபர் 30 ஆம் திகதியன்று 2025 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டத்தை அங்கீகரித்தது. இருப்பினும், இச்சட்டத்தின் வலுவுறுத்துகை இன்னும் தொழிற்பாட்டுக்கு வரவில்லை.[1]

1 https://www.dpa.gov.lk/guid/MEDIA%20Release%20-%20PDPA%20Bill%20Amended%20in%20Parliament%20-%20English%20V%203.0%20in%20Letterhead.pdf

மேலும், இலங்கையில் இணையப் பாதுகாப்புக்கான (Cybersecurity) தேசியளவிலான சட்டச் சட்டகம் எதுவும் தற்போது வரை காணப்படவில்லை.

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | பிரஜைகளுக்கு வெளிப்படைத்தன்மையும் வினைத்திறனும் கொண்ட சேவையை வழங்குவதற்கான பதிலிறுப்புச் செய்கின்ற அரச பிரிவொன்றை உருவாக்குவதற்காக பிரதான அரச நிறுவனங்களை டிஜிட்டல்மயமாக்கல். | ✓ | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 10 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 10. புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ள "உன்னதமான கலாசார வாழ்க்கை – ஒத்துணர்வுடைய மக்கள்" எனும் தொனிப்பொருள், கலாசார அலுவல்களுக்கான ஒட்டுமொத்தமான சட்டகத்தையும் (overarching framework) வழங்குகின்றது. இத்தொனிப்பொருள் பின்வருவன உட்பட முக்கியமான கோட்பாடுகளினால் நெறிப்படுத்தப்படுகின்றது:

- தனது கலாசார அடையாளத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கும் விருத்தி செய்வதற்கும் ஒவ்வொரு சமூகத்திற்கும் உள்ள உரிமை;
- கலாசார அபிவிருத்தியில் சமூகங்களும் தனிநபர்களும் தீவிரமாகப் பங்கெடுப்பதற்கான உரிமை;
- கலாசாரங்களுக்கிடையிலான செழுமைப்படுத்தல் (intercultural enrichment) மற்றும் பரிணாம வளர்ச்சி;
- உள்நாட்டு மற்றும் உலகளாவிய கலாசார அறிவை அடிப்படையாகக்கொண்ட புலமைத்துவ, ஆன்மிக மற்றும் அழகுணர்ச்சிசார் இயலுமையாற்றல்களுடன்கூடிய ஒத்துணர்வுள்ள தனிநபர்களை உருவாக்குதல்;
- கலாசாரப் பல்வகைமையை ஏற்றுக்கொண்டு, ஆக்கபூர்வமான கலாசார விமர்சனங்களை ஊக்குவித்தல்;
- அரசியல் தலையீடுகளற்ற கலாசாரப் படைப்புகளுக்கு ஆதரவளித்தல்; அத்துடன்
- கலாசார ரீதியாக செழுமைப்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தை வளர்ப்பதற்கான அரசாங்கத்தின் முன்முயற்சிகள்.

இந்தத் தொனிப்பொருளின் கீழ் மொத்தமாக 82 தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அறிவுறுத்துகைசார் விடயதானங்களின் விநியோகம் ஆகியவற்றின் ஊடாக வரலாறு, கலாசாரம் மற்றும் மரபுரிமைகளின் விழுமியங்களை வெளிப்படுத்துவதற்கான கல்விக் கொள்கைகளையும் விழிப்புணர்வு முன்முயற்சிகளையும் வகுத்தமைத்து நடைமுறைப்படுத்துதல் இதில் உள்ளடங்கும். இந்த உறுதிமொழிகள் கலாசாரத்தை ஒரு பரந்துபட்ட மற்றும் இயக்கவியல் சார்ந்த களம் (dynamic domain) என அங்கீகரிக்கும் அதேவேளை, வரலாறு, கலாசாரம் மற்றும் மரபுரிமை தொடர்பான உள்ளடக்கங்களை பாடசாலைப் பாடத்திட்டங்களிலும் சமூக அடிப்படையிலான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களிலும் ஒருங்கிணைத்தல் குறித்தும் வலியுறுத்துகின்றன. அத்துடன் இந்தத் தொனிப்பொருளானது இலக்கியம், திரைப்படமும் தொலைக்காட்சி நாடகமும், மேடை நாடகம், நடனம், கட்புலக் கலைகள், சிற்பக்கலையும் புகைப்படக் கலையும், இசையும் பாடலும், கண்களுக்குப் புலப்படாத கலாசார மரபுரிமைகள் (intangible cultural heritage) மற்றும் பாரம்பரியக் கலைகள் உள்ளிட்ட பல்வேறு கலாசாரத் துறைகளை உள்ளடக்கியுள்ளது.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

கண்காணிப்பின் முடிவுகள், 78 உறுதிமொழிகளும் தேசியக் கொள்கைச் சட்டகத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய நடைமுறைப்படுத்தலை வழிகாட்டுவதற்கான அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு மட்டத்திலேயே இருந்தது. அதேவேளை, செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அது கண்காணிப்பு நோக்கங்களுக்காக இன்னும் உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேயின்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு

மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு 16 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட உறுதிமொழிகள் மீதான முன்னேற்றத்தையும் இயலுமாக்கின. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில், ஒரு தீர்மானம் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையது என மதிப்பிடப்பட்ட அதேவேளை, ஐந்து தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை எனவும் மதிப்பிடப்பட்டன. மேலும் எந்தவொரு தீர்மானமும் பகுதியளவு பொருத்தப்பாடுடையது என மதிப்பிடப்படாததுடன், பத்து தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றவை எனவும் மதிப்பிடப்பட்டன.





*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு


2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டமானது, அமைச்சில் 90 நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்காக 14,466.20 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதில் 59.77 சதவீதம் மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும், 40.33 சதவீதம் மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இதனுடன் ஒப்பிடுகையில்,

2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு 14,550 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது மொத்த ஒதுக்கீட்டில் ஒரு சிறிய அதிகரிப்பைக் காட்டினாலும், மீண்டெழுஞ் செலவினத்தின் விகிதம் 59.77 சதவீதத்திலிருந்து 65.46 சதவீதமாக அதிகரித்துள்ளதுடன், மூலதனச் செலவினம் 40.33 சதவீதத்திலிருந்து 34.54 சதவீதமாகக் குறைந்துள்ளது. இம்மாற்றமானது அபிவிருத்தியை நோக்கிய ஒரு நகர்வாக அமையவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 14,466.20 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 5,621 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 39 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | அரச சுவடிக்கூடத்தை நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் மறுசீரமைத்தல். | ✓ | ✓ | ✓ |
| 02 | நாட்டின் வரலாறு, கலாசாரம் மற்றும் மரபுரிமையுடன் தொடர்புடைய பங்குதாரர்கள் இப்போது ஈடுபட்டுள்ள கலாசார வளங்களைப் பாதுகாக்கும் அதேவேளை, முகாமையுடன் தொடர்புடைய பணிகளுக்கு அப்பாற்சென்று கலாசார மரபுரிமையையும் வரலாற்றின் பெறுமதியையும் பற்றிய அவர்களின் புரிதலை மேம்படுத்தல். | ✓ | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 13 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 11. சுற்றாடல் அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

அரசாங்கத்தின் சூழலியற் கொள்கையானது, "உயிர்ப் பல்வகைமையின் ஆரோக்கியமான இருப்பை உறுதிப்படுத்தும் ஒரு நிலைபேண்தகு சுற்றாடல்" என்ற தொலைநோக்கால் வழிநடத்தப்படுகின்றது. இது சமூக-பொருளாதார மேம்பாட்டுக்கும் சூழல் பாதுகாப்புக்கும் இடையில் சமநிலையைப் பேணும் அதேவேளை, இயற்கை வளங்களை நிலைபேண்தகு முறையில் பயன்படுத்துவதையும் வலியுறுத்துகிறது. சூழல்சார் ஆளுகையில் (environmental governance) பங்கேற்பு முறையிலான அணுகுமுறைகள், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைத்தல் மற்றும் பொருத்தமான அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் மற்றும் நடத்தை மாற்றங்களினால் பலப்படுத்தப்பட்ட ஒரு சமநிலையான சூழலின் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குதல் ஆகியவை முக்கிய கொள்கைசார் முன்னுரிமைகளில் உள்ளடங்குகின்றன.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

தேர்தல் விஞ்ஞாபனத்தில் 12 தொனிபொருள்சார் விடயப்பரப்புக்களின்கீழ் 65 உறுதிமொழிகள் பட்டியலிடப்பட்டுள்ள போதிலும் கண்காணிப்பு முடிவுகள், 76 உறுதிமொழிகள் தேசிய கொள்கைச் சட்டகத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன. மீளாய்வின் போது, 2026-2028 காலப்பகுதிக்கான இயைபான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளின் நடைமுறைப்படுத்துகைக்கு வழிகாட்டுவதற்கென அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு மட்டத்தில் இருந்தது. அதேவேளை, ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அது தகவலறியும் உரிமைக் கோரிக்கைகள் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு ஆறு அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட உறுதிமொழிகள் மீதான முன்னேற்றத்தையும் இயலுமாக்கின. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில், இரண்டு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையது என மதிப்பிடப்பட்டதுடன், ஒரு தீர்மானம் பொருத்தப்பாடுடையது எனவும், ஒரு தீர்மானம் பகுதியளவு பொருத்தப்பாடுடையது எனவும், இரண்டு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றவை எனவும் மதிப்பிடப்பட்டன.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட 54 வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் கருத்திட்டங்களுக்குமாக அமைச்சுக்கு 16,077 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 78 சதவீதம் மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும், 22 சதவீதம் மாத்திரமே மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது அபிவிருத்தி சார்ந்த இடையீடுகளில் (development-oriented interventions) ஒப்பீட்டளவில் மட்டுப்படுத்தப்பட்ட முதலீட்டுடன், தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலேயே அதிக கவனம் செலுத்தப்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 16,077 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும், 2025 ஆம் ஆண்டுக்கான செலவின விபரங்களும், நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றமும் இதுவரை அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெறவில்லை.

2026 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் அமைச்சுக்கான ஒதுக்கீடு 19,410 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் 75 சதவீதம் மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும், 25 சதவீதம் மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது முதலீடுகளை நோக்கிய ஒரு சிறிய முன்னேற்றத்தை வெளிப்படுத்துகின்றது.

## தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தற்போது விதிக்கப்பட்டுள்ள சட்டங்களின் பலவீனங்கள், குறைபாடுகள், பற்றாக்குறைகளை நீக்குதல், சர்வதேசத்துடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகள், சாசனங்கள் மற்றும் உள்நாட்டு சுற்றாடல் சட்டங்களை மீளாய்வு செய்தல், பொதுமக்களின் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளுக்கான பங்கேற்பு அணுகல் வழிமுறைகளை மேற்கொள்ளல் மற்றும் அவசியப்பாடுகளின் பேரில் புதிய சட்டங்களை ஆக்குவதற்காக அந்தந்த துறைசார்ந்த தேர்ச்சிபெற்றவர்களை உள்ளடக்கிய ஆணைக்குழு ஒன்றை நிறுவுதல். | ✓ | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 14 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 12. நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

"சட்டவாட்சியின் அடிப்படையிலான ஆளுகை – சம அணுகலுடனான ஒரு நீதிமன்ற முறைமை" என்பது அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நீதித்துறை அங்கத்திற்கான மைய தொனிப்பொருளாகும். இந்தத் தொனிப்பொருளானது சட்டத்தின் முன் சகலரும் சமம் மற்றும் சட்டத்தின்கீழான சமமான பாதுகாப்பு, நீதித்துறைச் சுதந்திரம், பொதுமக்கள் நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் நீதி நிருவாகத்திலான வினைத்திறன் என்பனவுட்பட, முக்கிய கோட்பாடுகளினால் நெறிப்படுத்தப்படுகின்றது.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

கண்காணிப்பின் முடிவுகள், 33 உறுதிமொழிகளும் தேசிய கொள்கைச் சட்டகத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய இயைபான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளின் நடைமுறைப்படுத்தலுக்கு வழிகாட்டுவதற்கான அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு மட்டத்திலேயே இருந்தது. அதேவேளை, அமைச்சினால் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிலையிலேயே இருந்தது.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு

மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு 19 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட உறுதிமொழிகளின் முன்னேற்றத்தையும் இலகுபடுத்தின. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில், நான்கு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையது என மதிப்பிடப்பட்டதுடன், ஆறு தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையது எனவும், ஐந்து தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையது எனவும், நான்கு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றவை எனவும் மதிப்பிடப்பட்டன.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டமானது, இந்த நோக்கங்களை அடைவதற்காக 54,308 மில்லியன் ரூபாவையும், 66 வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களையும் ஒதுக்கியிருந்தது. இதில் 70 சதவீதம் மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும், 30 சதவீதம் மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது சிறைச்சாலைகள் போன்ற தொழிற்பாட்டு ரீதியிலான செலவினங்களின் (operational spending) ஆதிக்கத்தைப் பிரதிபலிப்பதுடன், நீதித்துறை முறைமையில் தெரிவுசெய்யப்பட்ட மூலதன முதலீடுகளுக்கு (capital investments) மாத்திரமே ஆதரவளிக்கிறது. 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கீடானது 59,277.40 மில்லியன் ரூபாவாக அதிகரித்த போதிலும், இதேபோன்ற ஒரு நிதி நிலைமையே காணப்படுகின்றது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில் அமைச்சுக்கு 54,308 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. எனினும், 2025 ஆம் ஆண்டுக்கான செலவின விபரங்களும், நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றமும் இதுவரை அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெறவில்லை.

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

"நிதிசார் துஷ்பிரயோகம், இலஞ்சம், ஊழல் முதலியன போன்ற ஊழல்மிக்க நடைமுறைகளைத் தடுப்பதற்கான சட்டவாக்கங்களுக்கு முன்னுரிமை அளித்தல்" (பக்கம் 201) என்ற தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிக்கிணங்க, சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்ட நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச்சட்ட (திருத்தச்) சட்டமூலத்தை (Bills of Exchange Ordinance Amendment Bill) அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், பின்னர் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் 2024.07.15 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதன்படி, நிதிசார் ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்கும், வியாபாரங்களைப் பாதுகாப்பதற்கும், வர்த்தக நடவடிக்கைகளில் காசோலைகள் "மறுதலிக்கப்படும்" (bounced cheques) நிகழ்வுகளைக் குறைப்பதற்குமென 2025 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தச்) சட்டமானது 2025 ஆகஸ்ட் 15 ஆம் திகதி அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.

மேலும், பணம் தூய்தாக்கல் (money laundering), பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான சர்வதேச தரநியமங்களுக்கு அமைய, சட்ட நபர்களினது (legal persons) பயன்தரு சொத்துவத்தின் (beneficial ownership) வெளிப்படைத்தன்மை தொடர்பான குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தைத் திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வளர்ப்பதற்கும், பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கும், அத்துடன் சொத்துவத்தின் வெளிப்படைத்தன்மை தொடர்பில் கிரமமுறையிலான மேற்பார்வையில் நிலவிய இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்குமென, 2025 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கம்பெனிகள் (திருத்தச்) சட்டத்தை பாராளுமன்றம் 2025 ஆகஸ்ட் 4 ஆம் திகதி அங்கீகரித்தது.

தடுப்புக்காவலில் உள்ள கைதிகளாக (remand prisoners) நீண்டகாலம் தடுத்து வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, குற்றவியல் நீதி முறைமையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் வினைத்திறனை மேம்படுத்துதல் (பக்கம் 209) என்பது

தேர்தல் விஞ்ஞாபனத்தின் உறுதிமொழியாகும். இந்த உறுதிமொழியை நடைமுறைப்படுத்துவதற்காக, முதலாம் கட்டக் கண்காணிப்பு அறிக்கையில் அமைச்சரவை அங்கீகாரம் உள்வாங்கப்பட்டுள்ளது. அத்துடன், 2025 ஜூன் 18 ஆம் திகதி, 2025 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதன் மூலம், இது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை கண்காணிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) ஒழிப்பது, தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த முக்கிய உறுதிமொழிகளில் ஒன்றாகும். எவ்வாறாயினும், தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வலுவில் வைத்திருக்கும் அதேவேளை, அதனை, பயங்கரவாதத்திலிருந்து அரசசைப் பாதுகாத்தல் சட்டம் (PSTA) எனும் தலைப்பிலான புதிய சட்டத்தின் மூலம் மாற்றீடு செய்வதற்கு அரசாங்கம் கருதுகிறது. அரசாங்கம் இது தொடர்பான வரைவுநிலை சட்டமூலத்தை (draft bill) மீளாய்வுக்காகப் பகிரங்கப்படுத்தி, பொதுமக்களிடமிருந்து பரிந்துரைகளைக் கோரியுள்ளது. இந்த அணுகுமுறையானது, தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மக்களுடன் அரசாங்கம் கொண்டுள்ள சமூக ஒப்பந்தத்திலிருந்து (social contract) விலகிச்செல்வதற்கான சாத்தியக்கூறுகளை வெளிப்படுத்துகின்றது.

போதைப்பொருள்சார்ந்த தவறுகளுக்கான தண்டனைகளைக் கடுமையாக்குதல் மற்றும் வழக்குகளைத் துரிதமாகத் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (பக்கம் 212) என்ற தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிக்கமைய, அரசாங்கமானது நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச்சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டம் (ஆழ்கடலில் அபாயகரமான போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான தடை) ஆகிய சட்டங்களைத் திருத்துவதற்கு 2025 ஜூன் 23 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானமொன்றை எடுத்தது. குறித்த சட்டமூலம் மீதான முதலாவது வாசிப்பு (first reading) 2025 டிசம்பர் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

நீதிமன்றச் செயற்பாட்டுக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்தலும், நீதிபதிகளுக்கும் பணிக்குழுவினருக்கும் அதுதொடர்பில் உரிய பயிற்சிகளை வழங்குதலும் போன்றவற்றின் ஊடாக நீதிமன்றச் செயற்பாட்டை மேலும் எளிதாக்கி, வினைத்திறனாக்குதல் (பக்கம் 200) என்ற தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிக்கமைய, அரசாங்கமானது நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் (திருத்தச்) சட்டமூலத்தையும், மற்றும் நீதித்துறை (திருத்தச்) சட்டமூலத்தையும் (ஆழ்கடலில் அபாயகரமான போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான தடை) பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அமைச்சரவைத் தீர்மானமொன்றை எடுத்துள்ளது.

தற்போதுள்ள சட்டங்களை மீளாய்வு செய்து, அவசியமானவாறு சட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு சட்ட நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்தல் (பக்கம் 200) என்ற தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிக்கமைய, அரசாங்கமானது சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தக பிணக்குகள்) சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் அதனை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவைத் தீர்மானமொன்றை எடுத்துள்ளது. குறித்த சட்டமூலம் மீதான முதலாவது வாசிப்பு (first reading) 2025 ஜூலை 11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | பாராளுமன்றம் | வரவு செலவுதிட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | ரிமான்ட் சிறைக்கைதிகளாக நீண்டகாலம் தடுத்துவைக்கப்படுவதைத் தடுக்கக்கூடிய வகையில் குற்றவியல் நீதி முறைமையுடன் தொடர்புடைய நிறுவனங்களின் வினைத்திறனை மேம்படுத்துதல். | ✓ | | | |
| 02 | ஸ்மார்ட் நீதிமன்ற வளாகங்களை (Smart court houses) உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும், நீதிமன்ற அறிக்கைகளின் மென்பிரதிகளைப் (soft copies) பேணுதலும். | ✓ | | ✓ | ✓ |
| 03 | சர்வதேச தரத்திற்கு அமைவான விசேட வசதிகள் உட்பட, சிறைச்சாலைகளுக்குள்ளான வசதிகளை விரிவுபடுத்தல். | ✓ | | ✓ | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04 | நிதிசார் முறைகேடுகள், இலஞ்சம், கொமிஸ்பெறல் போன்ற ஊழல்மிக்க செயற்பாடுகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு சட்டங்களை ஆக்குவதை முதன்மைப் பணியாகக் கருதி செயலாற்றுதல். | | ✓ | | |
| 05 | பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளிட்ட அடக்குமுறை சார்ந்த அனைத்துச் சட்டங்களையும் இல்லாதொழித்து, அனைத்து மக்களினதும் சுதந்திரத்தை உறுதி செய்தல். | | ✓ | | |
| 06 | போதைப்பொருள் சார்ந்த தவறுகளுக்கான தண்டனைகளைக் கடுமையாக்குதல், வழக்குகளைத் துரிதமாகத் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | ✓ | ✓ | | |
| 07 | நீதிமன்ற செயற்பாட்டுக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் நீதிபதிகளுக்கும் பணிக்குழுவினருக்கும் அது தொடர்பில் உரிய பயிற்சியை வழங்குதல் போன்றவற்றின் ஊடாக நீதிமன்ற செயற்பாட்டை மேலும் எளிதாக்கி வினைத்திறனாக்கல். | ✓ | ✓ | | |
| 08 | சட்ட வல்லுனர்களின் குழுவொன்றினால் தற்போதுள்ள சட்டங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, தேவையான சட்டங்களை இற்றைப்படுத்துதல். | ✓ | ✓ | | |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 19 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 13. பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

இலங்கையின் அரச சேவையானது அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முதன்மைக் கருவியாகும். சுமார் 1.4 மில்லியன் ஆளணியினரைக் கொண்ட இதில், அமைச்சின் செயலாளர்கள் முதல் அலுவலக உதவியாளர்கள் வரை பரந்தளவிலான தொழில்வாண்மையாளர்களும் அலுவலர்களும் உள்ளடங்குகின்றனர். இந்த ஊழியர் படையைப் பராமரிப்பதற்காக அரசாங்கத்தின் மொத்தச் செலவினத்தில் ஒரு கணிசமான பங்கு ஒதுக்கப்படுகிறது.

இத்துறையின்கீழ் வருகின்ற தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறலும், தகுதியை அடிப்படையாகக்கொண்ட நியமனங்களும் பதவியுயர்வுகளும், வினைத்திறன் மற்றும் முறைசார் நடவடிக்கைமுறைகளுக்கு இசைந்தொழுகுதல், ஒழுக்கநெறிசார் நடத்தையும் நிறுவனத்தின் தொடர்ச்சியானதன்மையும், நவீன தொழில்நுட்பவியல் பயன்பாடு, உற்பத்தித்திறன்மிக்க கொள்கைகளை உருவாக்குதல், பங்காண்மைகளும் பொதுமக்கள் பங்கேற்பும், பொதுமக்கள் விழிப்புணர்வு அத்துடன் திறன் விருத்தி, உள்வாங்குந்தன்மை (inclusion) மற்றும் பாரபட்சமின்மை ஆகியன உள்ளடங்கலான கோட்பாடுகளினால் வழிநடாத்தப்படுகின்றன.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

இவ்வமைச்சின் கீழ் மொத்தமாக 20 தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. தேசிய கொள்கைச் சட்டகத்திற்கிணங்க, அரசாளுகையில் பொதுமக்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்காக தற்போது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களையும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களையும் ஒரு வருடத்திற்குள் நடத்துவது இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன், அரசியலமைப்பின் 16 ஆவது திருத்தத்தின் கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிக் கொள்கையை, அதற்கு அவசியமான வளங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதனூடாக நடைமுறைப்படுத்துவதற்கும் இதில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.


கண்காணிப்பு முடிவுகள், மேற்கூறிய 20 உறுதிமொழிகளும் தேசிய கொள்கைச் சட்டகத்தில் பட்டியலிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன. மீளாய்வின் போது, 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான இயைபான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டும் அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு நிலையில் இருந்தது.

அதேவேளை, ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அது இன்னும் உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | பெறப்பட்டது. |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேயன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

## அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு

மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு 12 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட உறுதிமொழிகளின் முன்னேற்றத்தையும் இயலுமாக்கின. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில், மூன்று தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையது என மதிப்பிடப்பட்டதுடன், ஒரு தீர்மானம் பொருத்தப்பாடுடையது எனவும், நான்கு தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையது எனவும், நான்கு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றவை எனவும் மதிப்பிடப்பட்டன.





*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

2012 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட எல்லை நிர்ணயக் குழுவின் (Delimitation Committee) பரிந்துரைகளை மீளாய்வு செய்து, புதிய பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக புதியதோர் எல்லை நிர்ணயக் குழுவை நியமிக்கும் பொருட்டு 2025 ஆகஸ்ட் 04 ஆம் திகதி இவ்வமைச்சு அமைச்சரவைக் குறிப்பறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளது. எனினும், அந்தக் குழு இன்னும் தாபிக்கப்படவில்லை.

## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

அரச நிதியளிப்பைப் பொறுத்தவரை, 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் இவ்வமைச்சானது 131 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்காக 588,141 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது, இது மொத்த வரவுசெலவுத்திட்டத்தில் 6.66 சதவீதமாகும். இதில் 93 சதவீதம் மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும், வெறுமனே 6.5 சதவீதம் மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. மீண்டெழுஞ் செலவினங்களை

அடிப்படையாகக் கொண்ட இடையீடுகளுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதை இது காட்டுகின்றது. 2026 ஆம் ஆண்டில் 674,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது, இது மொத்த வரவுசெலவுத்திட்டத்தில் 7.5 சதவீதமாகும். இதில் மீண்டெழுஞ் செலவினங்கள் 95 சதவீதமாக அதிகரித்துள்ளது, இது முந்தைய அதே நிதி நிலைமையையே மீண்டும் பிரதிபலிக்கிறது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 588,141 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. எனினும், 2025 ஆம் ஆண்டுக்கான செலவின விபரங்களும், நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றமும் இதுவரை அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெறவில்லை.

## தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவு-திட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சு-சார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | குறைந்தபட்ச வசதிகளைப் பேணி வருவதற்காக அவசியமான பௌதிக மற்றும் மனித வளங்களை வழங்குதல். | | ✓ | ✓ |
| 02 | பிரஜைகளுக்கு வெளிப்படைத்தன்மையும் வினைத்திறனும் கொண்ட சேவையை வழங்குவதற்கான பதிலிறுப்புச் செய்கி-ன்ற அரச பிரிவொன்றை உருவாக்குவதற்காக பிரதான அரச நிறுவனங்களை டிஜிட்டல்மயமாக்கல். | ✓ | ✓ | ✓ |
| 03 | அரச கொள்கை வகுத்தலில் உதவி புரியவும், அமுலாக்கவும் உத்தியோகத்தர்கள் கொண்டிருக்க வேண்டிய ஆற்றல்களை விருத்தி செயவதற்காகவும் அரச கொள்கைகள் பற்றிய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் (SLIDA) சாத்தியவளத்தை மேம்படுத்தி மறுசீரமைத்தல். | | ✓ | ✓ |
| 04 | தொழிலுக்காக நாட்டுக்குள்ளேயும் நாட்டுக்கு வெளியிலும் புலம்பெயர்ந்துள்ள ஆட்களின் வாக்களிக்கின்ற உரிமையை உறுதிசெய்தல். | ✓ | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 11 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, ஒரு மைல்கல்லை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

தொழிலுக்காக நாட்டுக்குள்ளேயும் நாட்டுக்கு வெளியிலும் புலம்பெயர்ந்துள்ள ஆட்களின் வாக்களிக்கின்ற உரிமையை உறுதிசெய்தல் (பக்கம் 194) என்ற தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழி, பூர்வாங்க நிறுவனஞ்சார் நடவடிக்கைகள் ஊடாக பகுதியளவு நிறைவேற்றப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வசிக்கும் புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கான நடைமுறைப்படுத்தற் சட்டகத்தை ஆராய்வதற்காக அமைச்சரவைத் தீர்மானமொன்று எடுக்கப்பட்டு, அதற்கென ஒரு பிரத்தியேகக் குழுவும் (dedicated committee) நிறுவப்பட்டுள்ளது. அத்துடன், பொதுமக்களின் கருத்துக்களைக் கோருதல் மற்றும் பங்குதாரர்களின் ஈடுபாடு என்பனவுட்பட, இலங்கை தேர்தல் ஆணைக்குழுவினால் ஆதரித்துவாதிடல் முயற்சிகளும் (advocacy efforts) முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும், இப்படிமுறைகள் வெறும் நடவடிக்கைமுறை சார்ந்தவையாகவும் (procedural), தயார்நிலைப்படுத்தல் மட்டத்தில் உள்ளவையாகவுமே (preparatory) காணப்படுகின்றன என்று இந்தக் கண்காணிப்புச் செயற்பாடு அவதானிக்கின்றது. வெளிநாட்டிலிருந்து வாக்களிப்பதை இயலுமாக்கும் உறுதியான சட்டத் திருத்தங்கள் அல்லது தொழிற்பாட்டுப் பொறிமுறைகள் (operational mechanisms) இல்லாத நிலையில், இவ்வுறுதிமொழி பூர்த்திசெய்யப்பட்டதாகக் கருதப்பட முடியாது. இதற்கிணங்க, தற்போதைய நிலையானது மூல உறுதிமொழியிலிருந்து பின்தங்கியதாகவே காணப்படுகிறது. இது கொள்கைசார் உட்கருத்து (policy intent) மற்றும் கண்களுக்குப் புலப்படக்கூடிய நடைமுறைப்படுத்தல் (tangible implementation) என்பவற்றுக்கு இடையிலான இடைவெளியைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 14. வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைச் சட்டகமானது, பொருளாதார ஜனநாயகம் (economic democracy) எனும் கருத்தேற்பில் கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன், அது ஒரு மனிதவள அபிவிருத்தித் திட்டத்துடனும், தொழில்நுட்பவியல் அபிவிருத்திசார் வழிவரைபடத்துடனும் (roadmap) ஒருங்கிணைக்கப்பட்டும் உள்ளது. இது பொருளாதார வாய்ப்புகளுக்கான சமமான அணுகல், பொருளாதார ரீதியிலான முடிவெடுத்தலில் சகலரையும் உள்வாங்குந்தன்மையிலான பங்கேற்பு (inclusive participation) மற்றும் பொருளாதார நன்மைகளின் நியாயமான விநியோகம் ஆகியவற்றை உறுதிப்படுத்த நாடுகின்றது. இச்சட்டகம், நிலைபேண்தகு பொருளாதார வளர்ச்சியை எய்துவதை நோக்காகக் கொண்ட பத்து முக்கிய கோட்பாடுகளைச் சுற்றி கட்டமைக்கப்பட்டுள்ளது. மேலும், மீண்டெழும் தன்மையுள்ளதும், உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டதுமான பொருளாதாரத்தை உருவாக்குவதன் ஊடாக, 2030 ஆம் ஆண்டளவில் 120 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதியுள்ள உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியை (real GDP) எட்டுவதை இது இலக்காகவும் கொண்டுள்ளது.

இவ்வுயரிய குறிக்கோள்களுக்கு ஒத்திசைவாக, உள்நாட்டு வர்த்தகத்தின்கீழ் பத்து தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளும், சர்வதேச வர்த்தகத்தின்கீழ் மேலும் பத்து உறுதிமொழிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், விவசாய உற்பத்திகளைப் பதப்படுத்துதல் மற்றும் அவற்றை இடம்பெயர்த்தல் (transportation) என்பவற்றுக்கான தொழில்நுட்ப மற்றும் நிதிசார் உதவியை வழங்குவதில் மேலதிகமாக இன்னுமோர் உறுதிமொழியும் கவனம் செலுத்துகின்றது.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

கண்காணிப்பு முடிவுகளின்படி, இவ்வமைச்சுக்கான 21 உறுதிமொழிகள் தேசிய கொள்கைச் சட்டகத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. மீளாய்வின் போது, 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான இயைபான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டும் அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு நிலையில் இருந்தது. அதேவேளை, ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அது இன்னும் உத்தியோகபூர்வமாகப் பெறப்படவில்லை.

தேசிய கொள்கைச் சட்டகத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தேர்தல் விஞ்ஞாபனத்தின் உள்நாட்டு வர்த்தகப் பிரிவின்கீழ் பட்டியலிடப்படாத பின்வரும் உறுதிமொழியை இந்தக் கண்காணிப்புச் செயற்பாடு அடையாளம் கண்டது:


- சந்தைப் போட்டித்தன்மையை ஊக்குவித்தல், கண்காணிப்பு நிறுவனங்களின் இயலுமையை வலுப்படுத்துதல், சந்தைச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் ஒழுங்கமைத்தல் மற்றும் வர்த்தகத் தொழிற்பாடுகளில் அரசாங்கத்தின் பங்கை (government's stake) பிரதிநிதித்துவம் செய்தல் ஆகியவற்றின் மூலம், நியாயமான விலையில் பொதுமக்களுக்கு உயர்தரம் வாய்ந்த பண்டங்களினதும் சேவைகளினதும் தொடர் விநியோகத்தை உறுதிப்படுத்துதல்.

**அவதானிப்பு:** தேர்தல் விஞ்ஞாபனத்தின் மேலோங்கிய தொனிப்பொருள்சார் இலக்குக்கு (overarching thematic goal) ஒத்திசைவாக, இந்த உறுதிமொழியானது தேசிய கொள்கைச் சட்டகத்தில் ஒரு மேலதிகச் சேர்க்கையாக அமைந்துள்ளது. இது உள்நாட்டு வர்த்தகத் துறையில் சந்தை ஒழுங்குபடுத்துகை (market regulation) மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு என்பவற்றுக்கு அரசாங்கம் வழங்கும் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

## அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு மூன்று அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட உறுதிமொழிகளின் முன்னேற்றத்தையும் இலகுபடுத்தின. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில், மொத்தமாக மூன்று தீர்மானங்களும் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையது என மதிப்பிடப்பட்டன.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

அரச நிதியளிப்பைப் பொறுத்தவரை, 2025 ஆம் ஆண்டில் இவ்வமைச்சு 15 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டது. இதற்காக 2,664 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இதில் 81 சதவீதம் மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும், மற்றும் 18.33 சதவீதம் மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. இருப்பினும், 2026 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 4,450 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மீண்டெழுஞ் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் ஆகியவற்றுக்கு இடையேயான விகிதம் கிட்டத்தட்ட 50:50 ஆகக் காணப்படுகிறது. இது நிதி ஒதுக்கீட்டில் ஏற்பட்டுள்ள ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.




அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 2,664 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. எனினும், 2025 ஆம் ஆண்டுக்கான செலவின விபரங்களும், நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றமும் இதுவரை அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெறவில்லை.

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவு-திட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சு-சார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | மிகைப்பொருள் திணிப்பு எதிர்ப்புச் (anti-dumping) சட்ட-திட்டங்களைப் பலப்படுத்துதல் மற்றும் நியாய வியாபாரம் (fair-trading) பற்றிய புதிய சட்டதிட்டங்களை அறிமுகம் செய்-தலும், நிலவுகின்ற சட்டங்களை இற்றைப்படுத்தலும். | | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 05 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 15. எரிசக்தி அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

அரசாங்கத்தின் கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டமானது மசகு எண்ணெய் சார்ந்த மின் உற்பத்தியில் தங்கியிருப்பதனைக் குறைத்து, பசுமைப் பொருளாதாரத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (renewable energy) பயன்பாட்டை கணிசமாக அதிகரிப்பதற்கு முன்னுரிமை அளிக்கிறது. அத்துடன், தடையற்ற எரிசக்தி விநியோகத்தை உறுதி செய்வதற்காக, தேசிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், களஞ்சியப்படுத்துகை மற்றும் விநியோக உட்கட்டமைப்புக்களுக்கு புத்துயிரளித்து அவற்றை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இக்கொள்கை வரையறுத்துக் கூறுகின்றது. எரிசக்தியை ஓர் அத்தியாவசிய தேசிய சேவையாக அங்கீகரித்தல், நிலைபேண்தகு மற்றும் பாதுகாப்பான எரிசக்தி விநியோகத்தையும் நுகர்வையும் உறுதி செய்தல், மற்றும் எரிசக்தி பொருளாதாரத்தை ஒரு வெளிநாட்டு வருமான மூலாதாரமாக மாற்றுதல் ஆகிய மேலோங்கிய கொள்கைகள் இந்த உறுதிமொழிகளுக்கு வழிகாட்டுகின்றன.

இத்துறை சார்ந்த மொத்தம் 68 தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன, இது ஒட்டுமொத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுமார் 5 சதவீதமாகும். தொழிற்சாலைகள் மற்றும் போக்குவரத்துத் துறைகளில் மாற்று எரிசக்தி மூலாதாரங்களை (alternative energy sources) ஊக்குவிப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான உறுதிமொழிகள் இதில் அடங்கும். நிலையான மற்றும் நகரும் மூலாதாரங்களிலிருந்து (stationary and mobile sources) வெளியேறும் காற்று மாசடைவைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

கண்காணிப்பு முடிவுகளின்படி, 68 உறுதிமொழிகளும் தேசிய கொள்கைச் சட்டகத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. மீளாய்வின் போது, 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான இயைபான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டும் அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு நிலையில் இருந்தது. அதேவேளை, ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அது இன்னும் உத்தியோகபூர்வமாகப் பெறப்படவில்லை.

தேசிய கொள்கைச் சட்டகத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தேர்தல் விஞ்ஞாபனத்தின் எரிசக்தி துறையின்கீழ் பட்டியலிடப்படாத பின்வரும் உறுதிமொழியை இந்தக் கண்காணிப்புச் செயற்பாடு அடையாளம் கண்டது:

- அரசாங்க வைத்தியசாலைகள், பாடசாலைகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களுக்கு மின்சார விநியோகத் திட்டங்களை வழங்குவதற்காக, சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் ஒருங்கிணைந்து தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை அங்குரார்ப்பணம் செய்தல். பொதுமக்களின் வரிப்பணம் ஊடாக வழங்கப்படும் மானியங்களில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்காக, இந்த நிகழ்ச்சித்திட்டம் சுய-மின்னுற்பத்தி (self-generation) மற்றும் எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கியிருக்கும்.


**அவதானிப்பு:** தேர்தல் விஞ்ஞாபனத்தின் மேலோங்கிய தொனிப்பொருள்சார் இலக்குக்கு (overarching thematic goal) ஒத்திசைவாக, இந்த உறுதிமொழியானது தேசிய கொள்கைச் சட்டகத்தில் ஒரு மேலதிகச் சேர்க்கையாக அமைந்துள்ளது. இது அரச நிறுவனங்களுக்கான எரிசக்தி வினைத்திறன் (energy efficiency) மற்றும் நிலைபேண்தகு மின்சார விநியோகம் (sustainable electricity supply) என்பவற்றுக்கு அரசாங்கம் வழங்கும் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது.

### பெற்றோலியம்

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு 14 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட உறுதிமொழிகளின் முன்னேற்றத்தையும் கூட்டாக இலகுபடுத்தின. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில், இரண்டு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையது என மதிப்பிடப்பட்ட அதேவேளை, மூன்று தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை எனவும், ஏழு தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை எனவும், இரண்டு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*


## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் இவ்வமைச்சானது 21 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்காக 21,142 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது, இதில் 5 சதவீதம் மாத்திரமே மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும், 95 சதவீதம் மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது, முதலீடு சார்ந்த இடையீடுகளுக்கு (investment-oriented interventions) அளிக்கப்படும் வலுவான முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகிறது. 2026 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 22,373 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்கு இடையிலான விகிதமும் கிட்டத்தட்ட அதேயளவில் காணப்படுகிறது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 21,142 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2,756 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 13 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

ஐந்தாண்டுகளுக்குள் இலங்கையை பிராந்தியத்தில் ஆகக்குறைந்த மின்கட்டணத்தைக் கொண்ட நாடாக மாற்றுவதற்கு போட்டித்தன்மைமிக்க பெறுகை மற்றும் விலைமனு கோரல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தி, எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின்னுற்பத்தியை விலைகுறைந்த சூரிய ஒளி மற்றும் காற்றாலை மீதான மீள்புதுப்பிக்கத்தக்க மூலங்கள் ஊடாக மேற்கொள்ளல் (பக்கம் 165) என்ற விஞ்ஞாபன உறுதிமொழிக்கு இணங்க, 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க மின்சாரச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கான அமைச்சரவைத் தீர்மானம் 2024 டிசம்பர் 30 ஆம் திகதி எடுக்கப்பட்டது. அதற்கிணங்க, இலங்கை மின்சார சபையை (CEB), மின் உற்பத்தி, மின் கடத்துகை மற்றும் விநியோகம் என்பவற்றுக்கான தனிவேறானதும், சுதந்திரமானதுமான கம்பெனிகளாகப் பிரிப்பதன் மூலம் மின்சக்தித் துறையை மறுசீரமைப்பதற்காக, பாராளுமன்றம் 2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தச்) சட்டத்தை 2025 ஆகஸ்ட் 18 ஆம் திகதி அங்கீகரித்துள்ளது.

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | பாராளு-மன்றம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | ஐந்தாண்டுகளுக்குள் இலங்கையை பிராந்தியத்தில் ஆகக்குறைந்த மின்கட்டணத்தைக் கொண்ட நாடாக மாற்றுவ-தற்கு போட்டித்தன்மைமிக்க பெறுகை மற்றும் விலைமனு கோரல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தி, எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின்னுற்பத்தியை விலைகுறைந்த சூரிய ஒளி மற்றும் காற்றாலை மீதான மீள்புதுப்பிக்கத்தக்க மூலங்கள் ஊடாக மேற்கொள்ளல். | ✓ | ✓ | |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 16 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 16. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள போக்குவரத்துத் துறையினது மேலோங்கிய குறிக்கோளானது, பாதுகாப்பானதும் கட்டுப்படியாகக்கூடியதும் காலதாமதமற்றதுமான நகர்வை உறுதிப்படுத்துகின்ற வினைத்திறன்மிக்க மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்த பொதுப் போக்குவரத்து முறைமையொன்றை நிறுவுவதாகும். ஐந்து ஆண்டுகளுக்குள் தேசிய பயணிகள்சார் போக்குவரத்துத் தேவையின் 70 சதவீதத்தைப் பொதுப் போக்குவரத்தின் ஊடாகப் பூர்த்திசெய்தல் இதன் ஒரு முக்கிய இலக்காகும்.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

இந்தக் குறிக்கோளுக்கு ஒத்திசைவாக, போக்குவரத்துத் துறையின்கீழ் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 47 உறுதிமொழிகள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. அமைச்சுடன் தொடர்புடையதாக அடையாளம் காணப்பட்ட 50 உறுதிமொழிகளும் தேசிய கொள்கைச் சட்டகத்தில் உள்வாங்கப்பட்டுள்ளமையை கண்காணிப்பின் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டும் நோக்குடைய அமைச்சின் மூலோபாயத் திட்டம் (2026–2028) தயாரிப்பு மட்டத்தில் இருந்ததுடன், அதற்கு நேரொத்ததான செயற்பாட்டுத் திட்டமானது அதுவரை இறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள்


| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### நகர அபிவிருத்தி

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | பெறப்பட்டது. |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு ஐம்பத்தைந்து அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட உறுதிமொழிகளின் முன்னேற்றத்தையும் இயலுமாக்கின. மீளாய்வு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில், ஐந்து தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையவை என மதிப்பிடப்பட்ட அதேவேளை, பதினெட்டுத் தீர்மானங்கள் நேரடி பொருத்தப்பாடுடையவை எனவும், பதினாறு தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை எனவும், இன்னும் பதினாறு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*


## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் 108 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் அமைச்சுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன், மொத்த அரசாங்கச் செலவினத்தின் 5.54 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 489,303 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு அமைச்சுக்கு வழங்கப்பட்டது. இந்த ஒதுக்கீட்டில் 11 சதவீதம் மீண்டெழுஞ் செலவினத்திற்காகவும், 89 சதவீதம் மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இது முதலீட்டை மையமாகக் கொண்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான வலுவான முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது. ஒப்பிட்டு நோக்கும் போது, 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் இதேபோன்ற மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவின விகிதத்துடன் 497,259 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 489,330 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 243,290 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 50 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

## தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

முச்சக்கர வண்டிச் சேவைகள் மற்றும் பணிக்குழுக்கள், பாடசாலைப் பிள்ளைகள் ஆகியோரின் போக்குவரத்தும் உட்பட ஏனைய வாடகை வண்டிச் சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, தரம் வாய்ந்ததும் வினைத்திறன் மிக்கதுமான சேவையாக மாற்றப்படும் (பக்கம் 174) என்பது போக்குவரத்துத் துறையின் கீழ் பட்டியலிடப்பட்ட ஒரு வாக்குறுதியாகும். கண்காணிப்பின் முதலாம் கட்ட காலப்பகுதியின் போது, இதற்குரிய அவசியமான நடவடிக்கைகள் அமைச்சரவையில் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக, 2025 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமும் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | பாராளு-மன்றம் | வரவு செலவு-திட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | முச்சக்கர வண்டிச் சேவைகள் மற்றும் பணிக்குழுக்கள், பாடசாலைப் பிள்ளைகள் ஆகியோரின் போக்குவரத்தும் உட்பட ஏனைய வாடகை வண்டிச் சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, தரம் வாய்ந்ததும் வினைத்திறன் மிக்கதுமான சேவையாக மாற்றப்படும். | ✓ | ✓ | | |
| 02 | அதிக புகையிரதப் பெட்டிகளை ஈடுபடுத்தியதும், புகையிரதம் பயணிக்கும் தடவைகளை அதிகரித்ததும், காலை முதல் நள்ளிரவு வரையான செயற்றிறன்மிக்கதுமான புகையிரதச் சேவை. | ✓ | | ✓ | ✓ |
| 03 | துரிதமாக மறுசீரமைக்கப்பட வேண்டிய கிராமிய மற்றும் தோட்டங்களை அண்மித்த வீதிகளை அடையாளங்கண்டு, முன்னுரிமைப் பட்டியலொன்றைத் தயாரித்து அம்முன்னுரிமைப் பட்டியலுக்கு ஏற்றவாறு வீதிகளை மறுசீரமைத்து பேண்தகுரீதியில் பராமரித்தல். | ✓ | | ✓ | ✓ |
| 04 | அதிவேக வீதிகள் (E), பெருந்தெருக்கள் (A, B) மற்றும் மாகாண வீதிகள் (C,D) அனைத்தும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் (periodically) உரியமுறையில் பராமரிக்கப்பட்டு பேணப்படுதல். | ✓ | | ✓ | ✓ |
| 05 | ஏற்கனவே நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள மத்திய அதிவேக வீதியின் கடவத்தையில் இருந்து மீரிகம வரையான எஞ்சியுள்ள பகுதியில் தோன்றியுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு பணிகள் பூர்த்தி செய்யப்படும். | ✓ | | ✓ | ✓ |
| 06 | முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக இப்போது புகையிரதப் பாதை வலையமைப்பின் ஊடாக உள்வாங்கப்படாத பிரதேசங்கள் வரை புகையிரதப் பாதைகளை நீடித்து ஒவ்வொரு பிரதான நகரத்திற்கும் புகையிரதச் சேவைகளை வழங்குதல். | ✓ | | ✓ | ✓ |
| 07 | அண்மித்த பிரதேசங்களில் தூரப் பிரதேசங்களிலிருந்து வரும் பயணிகளுக்கு பஸ் தரிப்பிடமும் புகையிரத நிலையங்களும் ஒரே இடத்தில் அமைந்துள்ள, பயணிகள் இடைமாறல் நகரங்கள். | ✓ | | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 51 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 17. கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

தொழில்முயற்சியாண்மை மேம்பாடு – ஜீவதரணீ அணுகல் என்பது கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தனியார் துறையின் விரிவாக்கம் என்பவற்றுக்கான அரசாங்கத்தின் மேலோங்கிய கொள்கை வழிகாட்டலைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வீழ்ச்சியடைந்த உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு புத்துயிரளித்தல், ஏற்றுமதியை மையமாகக்கொண்ட தொழிற்துறைகளின் போட்டித்தன்மையை அதிகரித்தல், சேவை சார்ந்த கைத்தொழில்களை ஊக்குவித்தல், புதிய உலகளாவிய சந்தை வாய்ப்புகளை ஆராய்ந்து நிலைநிறுத்துதல், ஒரு சீரான தேசிய மூலோபாயத்துடன் ஒத்திசைந்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல், முதலீட்டிற்கு உகந்த வணிகச் சூழலை வளர்த்தெடுத்தல் அத்துடன் கட்டுப்படியாகக்கூடிய உட்கட்டமைப்பு மற்றும் உற்பத்தி உள்ளீடுகளின் வழங்கலை உறுதிசெய்தல் என்பன இந்தக் கொள்கைச் சட்டகத்தின் முதன்மையான நோக்கங்களுள் உள்ளடங்குகின்றன.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில்முயற்சியாண்மை தொடர்பில் மொத்தமாக 95 உறுதிமொழிகள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. அந்த 95 உறுதிமொழிகளும் தேசிய கொள்கைச் சட்டகத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக கண்காணிப்பு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, இந்த தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டுவதனை நோக்காகக் கொண்ட அமைச்சின் 2026–2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டம் தயாரிப்பு மட்டத்தில் இருந்தது. மேலும், அதற்கான செயற்பாட்டுத் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அது மதிப்பீட்டுக்காக இன்னும் உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில், அமைச்சு பதினைந்து அமைச்சரவைக் குறிப்பறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை அனைத்தும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட கொள்கை முன்முயற்சிகளை (policy initiatives) முன்னெடுத்துச் செல்வதையும் இலகுபடுத்தின. அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வின்படி, அவற்றுள் ஒரு தீர்மானம் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையது என மதிப்பிடப்பட்ட அதேவேளை, ஒன்பது தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை எனவும், மூன்று தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை எனவும், இரண்டு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நேரடியாகத் தொடர்பற்றவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*


## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் இவ்வமைச்சு 25 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுடன் தொடர்புபட்டுக் காணப்பட்டதுடன், அதற்கென 13,943 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டும் இருந்தது. அதில் 35 சதவீதம் மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும், 65 சதவீதம் மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தன. 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் 13,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவின விகிதாசாரமானது, 42 சதவீத மீண்டெழுஞ் செலவினம் என்றும், 58 சதவீத மூலதனச் செலவினம் என்றும் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 13,943 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 4,511 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 32 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

## தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | வரவுசெலவுத் திட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|
| 01 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்காக நிதியுதவிகளை வழங்குவதற்காக அபிவிருத்தி வங்கியொன்றின் மூலமாக நிதித்துறை ஊடாக சாத்தியவள மதிப்பீட்டின்பேரில் 10 மில்லியன் ரூபா வரையான பிணையமற்ற கடன் செயற்றிட்டமொன்று (Based on Feasibility and Credit Score) | ✓ | |
| 02 | சமுர்த்தி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளையும் உள்ளிட்டதாக கூட்டுறவு வங்கிமயமாக்கத்தை பலப்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் நிதித் தேவைகளை அமைத்துக்கொடுத்தல். | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 18 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, ஒரு மைல்கல்லை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 18. பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனமானது பெருந்தோட்டத் துறைக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட ஒரு தனித்துவமான தொனிப்பொருள்சார் கவனக்குவிவுக்குரிய பகுதியை (Distinct thematic focus area) அடையாளப்படுத்தவில்லை. இருப்பினும், **18** இயைபான உறுதிமொழிகள் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் தேசிய கொள்கைச் சட்டகத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளமையை கண்காணிப்பு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்


மீளாய்வின் போது, இயைபான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டும் வகையில் வடிவமைக்கப்பட்ட அமைச்சின் 2026–2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அத்துடன், குறித்த உறுதிமொழிகளைத் தொழிற்படுத்துவதற்காக அதனோடிணைந்த செயற்பாட்டுத் திட்டமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அமைச்சின் பணிப்பாணை (Mandate) இருவகைப்பட்டதாகும்: (i) பெருந்தோட்டத் தொழிற்துறையின் அபிவிருத்தியும் ஒழுங்குபடுத்துகையும், அத்துடன் (ii) வாழ்வாதாரத்திற்காக இத்தொழிற்துறையில் நேரடியாகத் தங்கியுள்ள பெருந்தோட்டச் சமூகங்களினுள் சமூக-பொருளாதார நிலைமைகளையும் உட்கட்டமைப்பையும் மேம்படுத்துதல்.

### பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | பெறப்பட்டது. |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | பெறப்பட்டது. |
| 2025-09-30 ஆம் தேியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் இரண்டு அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை இரண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றன. அத்துடன் அவை தெரிவுசெய்யப்பட்ட கொள்கை முன்முயற்சிகள் மீதான முன்னேற்றத்தையும் இலகுபடுத்தின. இந்த அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய மதிப்பீடொன்று, அவ்விரு அமச்சரவைத் தீர்மானங்களும் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் பொருத்தப்பாடுடையவை என மதிப்பிட்டுள்ளது.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*


### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் இவ்வமைச்சு 37 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுடன் தொடர்புபட்டுக் காணப்பட்டதுடன், அதற்கென 17,783 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டும் இருந்தது. இதில் 31 சதவீதம் மீண்டெழுஞ் செலவினத்திற்காகவும், 69 சதவீதம் மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இது மூலதனம் சார்ந்த உட்கட்டமைப்பு மற்றும் துறைசார் அபிவிருத்தி முன்முயற்சிகளைப் பிரதிபலிக்கின்றது. 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் 25,050 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், மீண்டெழுஞ் செலவினம் 31 சதவீதத்திலிருந்து 53.29 சதவீதமாக அதிகரித்தமை மற்றும் மூலதனச் செலவினம் 2025 இல் காணப்பட்ட 69 சதவீதத்திலிருந்து 53.29 சதவீதமாகக் குறைந்தமை ஊடாக, மீண்டெழுஞ் செலவினத்திற்கும் மூலதனச் செலவினத்திற்குமான விகிதம் அபிவிருத்திச் செலவினம் சார்ந்தது எனும் நிலையிலிருந்து தொழிற்பாடுச் செலவினத்தை சார்ந்ததாக ஒருங்கிணைக்கப்பட்டது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 17,783 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 7,987 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 46 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

## தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவுத் திட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | மலையக சமுதாயத்தின் வீடமைப்பு மற்றும் துப்-பரவேற்பாட்டு வசதிகளை முன்னேற்றுவதற்கான நிதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள். | ✓ | ✓ | ✓ |
| 02 | தோட்டங்களை சார்ந்த பிரதேசங்களில் வீடமைப்புத் திட்டங்கள். | ✓ | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 07 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 19. வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

"உன்னதமான இராஜதந்திர நிலை – தன்னாதிக்கமுள்ள நாடு" என்பது இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைச் சட்டகத்தை வழிநடத்தும் மேலோங்கிய கொள்கைசார் திசைநோக்காக அமைகின்றது. 2022 ஆம் ஆண்டின் கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டிய தேவையானது இலங்கையின் சமகால வெளிநாட்டு உறவுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைச் செலுத்துவதுடன், அது வெளிவாரியான ஈடுபாடுகளையும் பொருளாதார இராஜதந்திரத்தையும் தொடர்ந்தும் தீர்மானிப்பதாக அமைகிறது என்பதை இத்தேர்தல் விஞ்ஞாபனம் ஏற்றங்கீகரிக்கின்றது. அதேவேளை, பிரதான உலகளாவிய மற்றும் பிராந்திய சக்திகளுக்கிடையே அதிகரித்துவரும் பூகோள அரசியல் பதற்றங்கள் தேசிய பாதுகாப்புக்கும் பிராந்திய ஸ்திரத்தன்மைக்கும் மூலோபாய ரீதியான சவால்களை ஏற்படுத்துகின்றன. இவை சமநிலையான, அணிசேராத மற்றும் இறைமை உணர்வுள்ள ஓர் இராஜதந்திர அணுகுமுறையைத் தேவைப்படுத்துகின்றன.

இவ்வமைச்சின் பணிப்பாணையானது (Mandate) சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய துறைகளையும் உள்ளடக்கியுள்ளது. சுற்றுலாத்துறை என்பது கணிசமான பொருளாதார, சமூக-கலாசார மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகளை உருவாக்கும் ஆற்றல்கொண்ட ஒரு முக்கிய பொருளாதார உந்துசக்தியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இத்துறைக்கான வளங்களின் தளமானது நான்கு முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டது எனப் புரிந்துகொள்ளப்படுகிறது. அவையாவன: இயற்கைச் சொத்துக்கள், கலாசார மரபுரிமைகள், மனித மூலதனம் மற்றும் நிதிசார் மூலதனம் என்பனவாகும். இலங்கையை ஒரு நிலைபேண்தகு சுற்றுலாத் தளமாக உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மை மிக்கதாக மாற்றுவதற்கு இந்த நான்கு தூண்களையும் வலுப்படுத்துவது இன்றியமையாததாகும்.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

இந்த அமைச்சின் நோக்கெல்லையின்கீழ் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மொத்தம் 139 உறுதிமொழிகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த 139 உறுதிமொழிகளும் அமைச்சின் தேசிய கொள்கைச் சட்டகத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதை கண்காணிப்பின் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, இவ்வுறுதிமொழிகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு வழிகாட்டுவதனை நோக்காகக்கொண்ட, 2026-2028 காலப்பகுதிக்கான அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு நிலையில் இருந்தது. அதேவேளை ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், அது மதிப்பீட்டுக்காக இன்னும் உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

பின்வரும் உறுதிமொழி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தேசிய கொள்கைச் சட்டகத்தில் பிரதிபலிக்கப்படவில்லை என்பது கண்காணிப்பு நடவடிக்கையின் போது அடையாளம் காணப்பட்டது:


- உலகளாவிய அங்கீகாரம், தாபிக்கப்பட்ட நிறுவனரீதியிலான கட்டமைப்புகள், பல-கட்சிப் பிரதிநிதித்துவம் மற்றும் அடிக்கடி ஏற்படும் ஈடுபாட்டுக்கான வாய்ப்புகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, பாராளுமன்ற இராஜதந்திரத்தை ஒரு முதன்மைக்குரிய முன்னுரிமையாக வலுப்படுத்துதல்.

**அவதானிப்பு:** இந்த உறுதிமொழியானது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்வாங்கப்பட்டுள்ள போதிலும், தேசிய கொள்கைச் சட்டகத்தில் இடம்பெறவில்லை. இது, தேர்தல் விஞ்ஞாபனத்தின் நோக்கம் மற்றும் முறைசார் கொள்கை ஏற்பு (formal policy adoption) ஆகியவற்றுக்கிடையே நிலவும் ஓர் இடைவெளியைச் சுட்டிக்காட்டுகின்றது.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் இருபத்தொரு அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்துக்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டன. இது, தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகள் மீதான முன்னேற்றத்தை இலகுபடுத்துகின்றன. அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய மதிப்பீடொன்று, ஐந்து தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞான உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையவை எனவும், ஏழு தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை எனவும், மேலும் ஏழு தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை எனவும், இரண்டு தீர்மானங்கள் பொருத்தப்பாடற்றவை எனவும் கூறுகிறது.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

அரசாங்க நிதியளிப்பைப் பொறுத்தவரை, இவவமைச்சு 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் 7 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுடன் தொடர்புபட்டிருந்ததுடன், அதற்கென 21,773 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் 90 சதவீதம் மீண்டெழுஞ் செலவினத்திற்காகவும், 10 சதவீதம் மட்டும் மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு 23,000 மில்லியன் ரூபாவாக அதிகரித்த போதிலும், செலவின விகிதமானது மாற்றமின்றிக் காணப்பட்டது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு **21,773 மில்லியன் ரூபா** ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2025 ஆம் ஆண்டுக்கான செலவினத் தொகையும், நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்ற விபரங்களும் இவ்வமைச்சிடமிருந்து இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

## தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

"சுற்றுலாக் கைத்தொழிலின் முறைசாராத சேவைகளை வழங்குபவர்களை முறைப்படுத்துவதற்கு அவசியமான வசதிகளை வழங்குதல்" (பக்கம் 145) எனும் அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிக்கிணங்க, 2025 செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி பாராளுமன்றம் 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தை அங்கீகரித்துள்ளது. இச்சட்டம் சூதாட்ட விடுதிகள் (casinos), இணையவழி (online) மற்றும் கரைகடந்த (offshore) பணச்சூதாட்டங்கள் உள்ளிட்ட எல்லா சூதாட்ட நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக இலங்கையில் ஒரு மத்திம மயப்படுத்தப்பட்ட அதிகாரசபையை (GRA) நிறுவுகின்றது. இது வருமானத்தை அதிகரித்தல், பணம் தூய்தாக்கல் எதிர்ப்பு நடவடிக்கைகளை (anti-money laundering measures) வலுப்படுத்தல் அத்துடன் சமூகத் தீங்குகளைத் தணித்தல் ஆகிய இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு காலங்கடந்த சட்டங்களை மாற்றீடு செய்கின்றது.

## தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | பாராளுமன்றம் | வரவு செலவுத் திட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | நாட்டைச் சுற்றி பயணமுடிவிடங்களில் தற்போது நிலவுகின்ற சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பு வசதிகளும் நவீனமயமாக்கவேண்டிய துறைகளை இனங்காண்பதற்கான மதிப்பாய்வும். | | ✓ | ✓ |
| 02 | இராஜதந்திர ரீதியான பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேசத் தொடர்புகள் மற்றும் மூலோபாயமிக்க கல்வி நிறுவனங்களை (LKI) மறுசீரமைத்தல் மற்றும் வலுவூட்டல். | | ✓ | ✓ |
| 03 | சுற்றுலாக் கைத்தொழிலின் முறைசாராத சேவைகளை வழங்குபவர்களை முறைப்படுத்துவதற்காக அவசியமான வசதிகள். | ✓ | | |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 20 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, ஒரு மைல்கல்லை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 20. பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பில் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மேலோங்கிய தொனிப்பொருளாக (overarching theme) மக்கள்-நேய பாதுகாப்புச் சேவையைத் (people-friendly security service) தாபித்தல் அமைகின்றது. பொதுமக்கள் பாதுகாப்புசார் நிருவாகம் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் ஆகிய இரண்டு விடயங்களுக்குமான பொறுப்பு இவ்வமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனமானது, பொலிஸ் சேவையை பொதுமக்களுடன் நெருங்கிய ஈடுபாட்டுடன் இயங்கும் சுயாதீனமானதும், வினைத்திறன்மிக்கதும், மற்றும் பிரஜைகளை மையமாகக் கொண்டதுமான ஒரு நிறுவனமாக நிலைமாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றது. நீதியை நிலைநாட்டுதல் என்பது, இவ்வமைச்சின் கீழான தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளின் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. அதனுடன் தொடர்புபட்ட முக்கிய உறுதிமொழிகளுள் பின்வருவன அடங்குகின்றன:

- உயித்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்புக்களின் பிரகாரம் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்ட அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் எதிராக பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்;
- அரசியல் கொலைகள் தொடர்பான விசாரணைகளையும், ஊடகவியலாளர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் வேறு தனிநபர்கள் கடத்தப்பட்டமை தொடர்பான விசாரணைகளையும் துரிதப்படுத்துதல்; அத்துடன்
- அச்சுறுத்தல்கள் மற்றும் அரசியல் ரீதியிலான மிரட்டல்கள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய ஊடகவியலாளர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் வேறு தனிநபர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதை உறுதிப்படுத்தல்.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

அமைச்சின் பணிப்பாணைக்கு (Mandate) இயைபான 45 உறுதிமொழிகள் தேசிய கொள்கைச் சட்டகத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளதாகக் கண்காணிப்பின் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளின் நடைமுறைப்படுத்துகைக்கு வழிகாட்டுவதை நோக்காகக்கொண்ட, 2026-2028 காலப்பகுதிக்கான அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு நிலையில் இருந்தது. அதேவேளை ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், அது மீளாய்வுக்காக இன்னும் உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் ஐந்து அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்துக்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டன. இது, தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகள் மீதான முன்னேற்றத்தை இலகுபடுத்தின. அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய மதிப்பீடொன்று, ஒரு தீர்மானம் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையது எனவும், மற்றொரு தீர்மானம் பொருத்தப்பாடுடையது எனவும், மேலும் ஒரு தீர்மானம் பகுதியளவு பொருத்தப்பாடுடையது எனவும், அத்துடன் இரண்டு தீர்மானங்கள் பொருத்தப்பாடற்றவை எனவும் சுட்டிக்காட்டுகிறது.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

இவ்வமைச்சு 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் 17 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுடன் தொடர்புபட்டிருந்ததுடன், அதற்கென மொத்த அரசாங்கச் செலவினத்தின் 2.25 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 175,992 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டது. இந்த ஒதுக்கீட்டில் 91.35 சதவீதம் மீண்டெழுஞ் செலவினத்திற்காகவும், 8.65 சதவீதம் மட்டும் மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. உட்கட்டமைப்பு அபிவிருத்தியை விடவும் தொழிற்பாட்டு ரீதியான பணிகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதையே இது காட்டுகின்றது. 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு 23,000 மில்லியன் ரூபாவாக அதிகரித்த போதிலும், செலவின விகிதமானது மாற்றமின்றி அதே விகிதமாகவே காணப்பட்டது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 198,422 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2025 ஆம் ஆண்டுக்கான செலவினத் தொகையும், நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்ற விபரங்களும் இவ்வமைச்சிடமிருந்து இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | வரவு செலவு-திட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|
| 01 | போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை முறைப்படுத்தி போதைப்பொருள் பாவனையிலிருந்து அவர்களை மீட்டெடுத்தல். | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 04 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, ஒரு மைல்கல்லை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 21. பாதுகாப்பு அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

பாதுகாப்பானதும் மீண்டெழும் தன்மையுடையதுமான (Resilient) ஒரு தேசத்தை உறுதிப்படுத்துவதே பாதுகாப்பு அமைச்சின் மேலோங்கிய குறிக்கோளாகும். சுதந்திரமானதும் சமநிலையானதுமான இராஜதந்திரம், மனித உரிமைகளைப் போற்றிக்காக்கும் ஜனநாயக அரசாளுகை, பல்வகைமையை அரவணைக்கும் சமத்துவம் மற்றும் சமூக ஒற்றுமை அத்துடன் பிரஜைகளினதும் தேசத்தினதும் பாதுகாப்புக்காக அர்ப்பணிக்கப்பட்ட தொழில்வாண்மைசார் இராணுவம் ஆகியவற்றிலேயே தேசிய பாதுகாப்பு தங்கியிருக்க வேண்டும் என்பதை தேர்தல் விஞ்ஞாபனம் வலியுறுத்துகிறது.

அமைச்சுக்கான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுக்கு அடிப்படையாக அமையும் பிரதான விடயப்பரப்புகளினுள் பின்வருவன உள்ளடங்குகின்றன: குடிமக்களின் பாதுகாப்பு; இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் (Territorial integrity) பாதுகாத்தல்; உள்நாட்டுப் பாதுகாப்பையும் தேசிய நல்லிணக்கத்தையும் வலுப்படுத்துதல்; கடல்சார் பிராந்தியத்தினதும் வான்பரப்பினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்; தேசியப் பாதுகாப்புச் சட்டகத்திற்குள் பொறுப்புக்கூறலையும் பொறுப்புணர்வையும் அதிகரித்தல்; தேசிய வளங்களைப் பாதுகாத்தல்; எரிசக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்; தேசியப் பாதுகாப்புக்காக அரச புலனாய்வுச் சேவைகளின் பங்களிப்பை வலுப்படுத்துதல்; அத்துடன் முறைசார் பாதுகாப்பு ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவித்தல்.

### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

அமைச்சின் அதிகாரவரம்பின்கீழ் (Purview) வருகின்ற தொடர்புடைய 42 உறுதிமொழிகள் தேசிய கொள்கைச் சட்டகத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளதாகக் கண்காணிப்பு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டும் நோக்கிலான 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு மட்டத்தில் இருந்தது. அதேவேளை, ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டபோதிலும், அது இதுவரை மீளாய்வுக்காக உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

பின்வரும் உறுதிமொழி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தேசியப் பாதுகாப்பு எனும் விடயத்தின்கீழ் தேசிய கொள்கைச் சட்டகத்தில் பிரதிபலிக்கப்படவில்லை என்பது கண்காணிப்பு நடவடிக்கையின் போது அடையாளம் காணப்பட்டது:


- சட்டவாட்சிக்கு இணங்க ஜனநாயகம், குடிமக்களின் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றைப் பாதுகாக்கும் அதேவேளை, இனச் சமூகங்களுக்கு மத்தியில் ஒற்றுமையையும் சகவாழ்வையும் ஊக்குவிக்கும் நல்லாட்சி முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துதல்.

**அவதானிப்பு:** இவ்வுறுதிமொழி தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், தேசிய கொள்கைச் சட்டகத்தில் அது இடம்பெறவில்லை. தேர்தல் விஞ்ஞாபனத்தின் நோக்கங்களுக்கும், தேசிய பாதுகாப்புத் துறையிலான முறைசார் கொள்கை வெளிப்பாட்டிற்கும் (Policy articulation) இடையே ஓர் இடைவெளி இருப்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |

## அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு

மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் 7 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்துக்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டன. இது, தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகள் மீதான முன்னேற்றத்தை இயலுமாக்கின. இந்த அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய மதிப்பீடொன்று, இரண்டு தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையவை எனவும், மூன்று தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை எனவும், இரண்டு தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை எனவும், எந்தவொரு தீர்மானமும் பொருத்தப்பாடற்றதாகக் காணப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டுகிறது.





*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

2025ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின்கீழ் 71 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுடன் இவ்வமைச்சு தொடர்புபட்டிருந்தது. மொத்த அரசாங்கச் செலவினத்தின் 4.76 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 420,323.70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு இவ்வமைச்சுக்கு வழங்கப்பட்டது. அதில் 86 சதவீதம் மீண்டெழும் செலவினத்திற்காகவும், 14 சதவீதம் மாத்திரம் மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தன. இது உட்கட்டமைப்பு அபிவிருத்தியை விடவும் தொழிற்பாட்டு ரீதியான பாதுகாப்புச் செலவினங்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதைப் பிரதிபலிக்கின்றது.

2026ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின்கீழ் 432,435 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதிலும் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்கு இடையிலான விகிதம் முன்னையதைப் போன்றதாகவே காணப்பட்டது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 420,323.70 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2025 ஆம் ஆண்டுக்கான செலவினத் தொகையும், நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்ற விபரங்களும் இவ்வமைச்சிடமிருந்து இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | வரவு செலவு திட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவு–சலவுத் திட்டத்திற்கு முன் பாராளு–மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | இயற்கை அனர்த்த அபாய நேர்வு நிலப்பகுதிகளை இனங்காணல், முகாமை செய்தல் மற்றும் அனர்த்தங்களைக் குறைத்தல். | ✓ | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 14 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 22. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் மேலோங்கிய தொனிப்பொருள் யாதெனில், சமூக முன்னேற்றத்திற்கும் தேசிய அபிவிருத்திக்குமாக விஞ்ஞான ரீதியிலான தீர்வுகளை வழங்குவதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சார்ந்த அணுகுமுறையை ஊக்குவித்தலாகும். இலங்கையானது நுண்ணறிவும் திறன்களும் கொண்ட மனித வளங்களின் வலுவான தளத்தைக் கொண்டுள்ளதுடன், கிராம மட்டத்திலும்கூட புத்தாக்குநர்கள் (innovators) உருவாகி வருவதை தேர்தல் விஞ்ஞாபனம் ஏற்றுங்கீகரிக்கிறது. எவ்வாறாயினும், இது சமூகத்தில் அடிமட்டத்திலுள்ள புத்தாக்கங்களை (Grassroots innovations) அடையாளம் காண்பதற்கும், வளர்த்தெடுப்பதற்கும், அவற்றை வணிகமயப்படுத்துவதற்கும் கட்டமைக்கப்பட்ட பொறிமுறைகள் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே காணப்படுவதையும் அத்துடன் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்குப் போதிய உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமையையும் சுட்டிக்காட்டுகின்றது. இந்த இடைவெளிகளை விளித்துரைத்து நிவர்த்தி செய்வது அமைச்சின் கொள்கை வழிகாட்டலின் ஒரு முக்கிய தூணாக அமைகின்றது.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

அமைச்சின் அதிகாரவரம்பின்கீழ் (Purview) வருகின்ற தொடர்புடைய 28 உறுதிமொழிகள் தேசிய கொள்கைச் சட்டகத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளதாகக் கண்காணிப்பு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டும் நோக்கிலான 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு மட்டத்தில் இருந்தது. அதேவேளை, ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டபோதிலும், அது இதுவரை மீளாய்வுக்காக உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேயன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு

மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் ஆறு அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்துக்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டன. இது, தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகள் மீதான முன்னேற்றத்தை இயலுமாக்கின. இந்த அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய மதிப்பீடொன்று, ஒரேயொரு தீர்மானம் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையது (highly relevant) எனவும், எந்தவொரு தீர்மானமும் பொருத்தப்பாடுடையதாகக் (relevant) காணப்படவில்லை எனவும், இரண்டு தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை (partially relevant) எனவும், அத்துடன் மூன்று தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் பொருத்தப்பாடற்றவையாகக் (not relevant) காணப்பட்டன எனவும் மதிப்பிடப்பட்டதாகச் சுட்டிக்காட்டுகின்றது.





*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு


2025ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின்கீழ் 20 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுடன் இவ்வமைச்சு தொடர்புபட்டிருந்ததுடன், 5,750 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டது. இதில் 49 சதவீதம் மீண்டெழும் செலவினத்திற்காகவும், 51 சதவீதம் மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஒதுக்கீடானது, மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்கிடையே ஒரு சமநிலையான விகிதத்தை (Balanced ratio) வெளிப்படுத்துகின்றது.

ஒப்பிட்டு நோக்குகையில், 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் 6,770 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இதில் மீண்டெழும் செலவினம் 46.82 சதவீதமாகவும், மூலதனச் செலவினம் 53.18 சதவீதமாகவும் காணப்படுவதால், தொழிற்பாட்டு ரீதியான (operational) செலவினங்களை விடவும், அபிவிருத்தி சார்ந்த செலவினங்களை (Development-oriented) நோக்கிய ஒரு சிறிய முன்னேற்றம் தென்படுகின்றது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 5,750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2,290 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 40 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (financial progress rate) பிரதிபலிக்கின்றது. அத்துடன், பௌதிக முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை அமைச்சிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

## 23. கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல் அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டவாறு கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் மேலோங்கிய இலக்கு யாதெனில், வறுமை ஒழிப்பு மற்றும் சகல தரப்பினரையும் உள்வாங்கக்கூடிய சமூக அபிவிருத்தி (inclusive social development) என்பவற்றுக்கூடாக பாதுகாப்பான சமூகத்தையும் வளமான தேசத்தையும் உருவாக்குவதாகும். இந்தக் கொள்கைச் சட்டகத்தின் வழிகாட்டற் கோட்பாடுகளினுள் சமூக ஒருமைப்பாடு (Social solidarity), சமூக வலுவூட்டல், தேவையுடையோருக்கான இலக்கு-நிர்ணயிக்கப்பட்ட நிதியுதவி, அமைச்சுகளுக்கிடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல், எல்லா பிரஜைகளுக்கும் வாழ்க்கைச் சுழற்சி அடிப்படையிலான (life-cycle-based) சமூகப் பாதுகாப்பு, சமூக நீதியை உறுதிப்படுத்தி எவரையும் கைவிடாதிருத்தல் (Leaving no one behind), அத்துடன் நலன்புரி நன்மைகளைத் தெரிவுசெய்வதிலும் வழங்குவதிலும் பயனாளிகள் மற்றும் இயைபான பங்குதாரர்களின் (relevant stakeholders) வினைத்திறனானதும் அர்த்தபூர்வமானதுமான பங்களிப்பை ஊக்குவித்தல் ஆகியன உள்ளடங்குகின்றன.

தகுதியுள்ள பயனாளிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் அதேவேளை, கிடைக்கக்கூடிய முதல் சந்தர்ப்பத்திலேயே அவர்களை செயல்முனைப்புள்ள பொருளாதாரப் பங்கேற்புக்கு (Active economic participation) நிலைமாற்றமடையச் செய்வதே அரசாங்கத்தின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களின் முதன்மைக் குறிக்கோளாகும். எல்லா இலங்கையர்களுக்குமான வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறையை (Life-cycle approach) அடிப்படையாகக்கொண்ட, அனைத்துலக சமூகப் பாதுகாப்பு முறைமை (Universal social protection system) ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

அமைச்சின் பணிப்பாணையின்கீழ் (mandate) வருகின்ற தொடர்புடைய 81 உறுதிமொழிகள் தேசிய கொள்கைச் சட்டகத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளதாகக் கண்காணிப்பு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டும் நோக்கிலான 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு மட்டத்தில் இருந்தது. அதேவேளை, ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டபோதிலும், அது இதுவரை மீளாய்வுக்காக உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பி-க்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு

மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் 6 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்துக்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டன. இது, தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகள் மீதான முன்னேற்றத்தை இலகுபடுத்தின. இந்த அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய மதிப்பீடொன்று, இரண்டு தீர்மானங்கள் குறிப்பான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையவை (highly relevant) எனவும், மேலும் இரண்டு தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை (relevant) எனவும், எந்தவொரு தீர்மானமும் பகுதியளவு பொருத்தப்பாடுடையதாகக் (partially relevant) காணப்படவில்லை எனவும், அத்துடன் மூன்று தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் பொருத்தப்பாடற்றவையாகக் (not relevant) காணப்பட்டன எனவும் மதிப்பிடப்பட்டதாகச் சுட்டிக்காட்டுகின்றது.





*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

### அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

2025ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின்கீழ் 33 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுடன் இவ்வமைச்சு தொடர்புபட்டிருந்ததுடன், 31,350 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டது. இதில் 80 சதவீதம் மீண்டெழும் செலவினத்திற்காகவும், 20 சதவீதம் மூலதனச் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இது கிராமிய உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி முன்முயற்சிகளை விடவும், தொழிற்பாட்டு ரீதியான பணிகளுக்கே (Operational-oriented) அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது.

ஒப்பிட்டு நோக்குகையில், 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் 61,691.50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது என்பதுடன், மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவின விகிதத்தில் குறிப்பிடத்தக்க மாற்றமும் (Significant change)

ஏற்பட்டுள்ளது. மீண்டெழும் செலவினம் 80 சதவீதத்திலிருந்து 44.56 சதவீதமாகக் குறைந்துள்ள அதேவேளை, மூலதனச் செலவினம் 20 சதவீதத்திலிருந்து 55.44 சதவீதமாக அதிகரித்துள்ளது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 31,350 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2025 ஆம் ஆண்டுக்கான செலவினத் தொகையும், நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்ற விபரங்களும் இவ்வமைச்சிடமிருந்து இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

## தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

"சமுர்த்தி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளையும் உள்ளிட்டதாக, கூட்டுறவு வங்கிமயமாக்கத்தைப் பலப்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் நிதித் தேவைகளை அமைத்துக் கொடுத்தல் (பக்கம் 152)" எனும் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிக்கு இணங்க, 2025 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலத்தின் ஊடாக சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகளையும், சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிச் சங்கங்களையும் அரசாங்க கணக்காய்வுக்கு உட்படுத்துவதற்காக, அரசாங்கம் 2025 மே 07 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானமொன்றை எடுத்தது. சமுர்த்தி நிதி நிறுவனங்களுக்குள் நிதி மேற்பார்வை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக, 2025 ஆகஸ்ட் 22 ஆம் திகதி பாராளுமன்றம் 2025 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சமுர்த்தி (திருத்தச்) சட்டத்தை அங்கீகரித்தது.

## தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | அமைச்சரவை | பாராளுமன்றம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | சமுர்த்தி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளையும் உள்ளிட்டதாக கூட்டுறவு வங்கிமயமாக்கத்தை பலப்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் நிதித் தேவைகளை அமைத்துக்கொடுத்தல். | ✓ | ✓ | |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 10 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கற்களை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 24. துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

சர்வதேச கடல்சார் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளில் இலங்கையை ஒரு முக்கிய பங்குதாரராக நிலைநிறுத்துவதே தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் மேலோங்கிய குறிக்கோளாகும். இலங்கையானது, கிழக்கு மற்றும் மேற்கு கடல் வழித்தடங்களின் சந்திப்பில் அமைந்துள்ள தனது மூலோபாய அமைவிடத்தைப் (Strategic location) பயன்படுத்தி, ஒவ்வோர் ஆண்டும் கடந்துசெல்லும் கப்பல்கள் மூலம் காவிச் செல்லப்படும் ஆயிரக்கணக்கான தொன் நிறையுள்ள பொருட்களைக் கையாள்கிறது. விநியோகச் சங்கிலியின் வினைத்திறனை (Supply chain efficiency) மேம்படுத்துதல், தேர்ச்சிபெற்ற கடல்சார் ஊழியர் படையொன்றை உருவாக்குதல் மற்றும் இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள தனது அமைவிடத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் நாட்டை உலகத்தரம் வாய்ந்த ஒரு கடல்சார் மையமாக (Nautical hub) நிலைமாற்றுவதை அரசாங்கம் நோக்காகக் கொண்டுள்ளது.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

மொத்தமாக 28 தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகள் இவ்வமைச்சுடன் நேரடியாகத் தொடர்புடையவை. கண்காணிப்பின் முடிவுகள், அந்த 28 வாக்குறுதிகளும் தேசிய கொள்கைச் சட்டகத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றன. மீளாய்வின் போது, இவ்வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு நிலையில் இருந்தது. அதேவேளை, ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ள போதிலும், அது இதுவரை மீளாய்வுக்காக உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | பெறப்பட்டது. |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | பெறப்பட்டது. |

### அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு


மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் 4 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்துக்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டன. இது, தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகள் மீதான முன்னேற்றத்தை இயலுமாக்கின. இந்த அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய மதிப்பீடொன்று, ஒரேயொரு தீர்மானம் இயைபான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையது (highly relevant) எனவும், மற்றொரு தீர்மானம் பொருத்தப்பாடுடையது (relevant) எனவும், இன்னுமொரு தீர்மானம் பகுதியளவு பொருத்தப்பாடுடையது (partially relevant) எனவும், அத்துடன் மற்றொரு தீர்மானம் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் பொருத்தப்பாடற்றது (not relevant) எனவும் மதிப்பிடப்பட்டதாகச் சுட்டிக்காட்டுகின்றது.




*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் ஒன்பது வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுடன் இவ்வமைச்சு தொடர்புபட்டிருந்ததுடன், 191 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2026 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 4,128 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட சமர்ப்பிப்புக்கு முன்னதாக அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெற்றமையால், செலவின விகிதத்தை அடுத்த அறிக்கையிலேயே பகுப்பாய்வு செய்யமுடியும் என்பது புரிந்துகொள்ளத்தக்கது.





*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சின் வணிகக் கப்பல் செயலகத்திற்கு (Merchant Shipping Secretariat) 191 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. எவ்வாறாயினும், அந்த ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 104 மில்லியன் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 54 சதவீத நிதிசார் முன்னேற்ற விகிதத்தைப் (Financial progress rate) பிரதிபலிக்கிறது. பௌதிக முன்னேற்றம் குறித்த சுருக்க அறிக்கை அமைச்சிலிருந்து இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. அமைச்சுசார் விடயதானங்களில் (Ministerial portfolios) ஏற்பட்ட மறுசீரமைப்புகள் காரணமாக, ஒதுக்கீட்டின் எஞ்சிய பகுதியானது போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு மாற்றப்பட்டது.

2025 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், முக்கிய அமைச்சுக்களின் நிறுவனரீதியிலான கட்டமைப்பு குறிப்பிடத்தக்க மறுசீரமைப்புக்கு (Restructuring) உள்ளானது. நகர அபிவிருத்தி, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து ஆகியவற்றின் செயல்பாடுகள் தனித்துவமான நிருவாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டன. நகர அபிவிருத்தி எனும் விடயதானம், வீடமைப்பு அமைச்சிலிருந்து நீக்கப்பட்டு, போக்குவரத்து அமைச்சுக்கு மீளவும் குறித்தளிக்கப்பட்டது. அதேவேளை, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து எனும் விடயதானம், போக்குவரத்து அமைச்சிலிருந்து பிரிக்கப்பட்டு, ஒரு தனித்தியங்கும் (Standalone) துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சாக மீண்டும் கட்டமைக்கப்பட்டது.

இந்த ஆண்டு நடுப்பகுதியில் (Mid-year) மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பின் விளைவாக, 2025 ஆம் ஆண்டுக்கான துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின்கீழ் காட்டப்பட்டுள்ள வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடானது ஒப்பீட்டளவில் குறைவாகத் தென்படுவதுடன், அது அறிக்கையிடல் காலப்பகுதிக்கான ஓர் அர்த்தபூர்வமான பகுப்பாய்வை (Meaningful analysis) மேற்கொள்வதற்கும் இடமளிக்கவில்லை. எவ்வாறாயினும், 2026 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டமானது இவ்வமைச்சுக்கென ஒரு தனிவேறானதும் முழு ஆண்டுக்கானதுமான ஒதுக்கீட்டை வழங்குகின்றது. இது, அடுத்த கட்டத்தில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பின் போது இன்னும் விரிவான மதிப்பீட்டைச் (Comprehensive assessment) செய்வதற்கு வழிவகுக்கும்.




*அட்டவணை: நிதிசார் முன்னேற்றம் (3ஆம் காலாண்டு இறுதியில்)*

### தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை

| இல. | வாக்குறுதி | வரவு செலவுத் திட்டம் | 2026ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சுசார் முன்னேற்ற அறிக்கை |
|---|---|---|---|
| 01 | துறைமுக விரிவாக்கம், பராமரிப்பு, தரவுக் களஞ்சியம், உற்பத்தி செயற்பாங்குகள், தேசிய கப்பல்கள், உட்கட்டமைப்பு வசதிகள், தடாகங்கள் மற்றும் செயற்பாடுகளை விரிவாக்குதல். | ✓ | ✓ |
| 02 | உள்நாட்டு விமான நிலையங்கள் மற்றும் நீர்ப்பரப்பு விமான நிலையங்களை (Water Aerodromes) வாய்ப்புள்ள முக்கிய பகுதிகளில் மேலும் அபிவிருத்தி செய்தல். | ✓ | ✓ |

அமைச்சினால் நடைமுறைப்படுத்தலுக்காகத் தொடங்கப்பட்ட 09 வாக்குறுதிகள் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலுள்ள அட்டவணையானது, ஒரு மைல்கல்லை எட்டியுள்ள வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. எஞ்சியுள்ள வாக்குறுதிகள் பின்னிணைப்பு-2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 25. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் பற்றிய பகுப்பாய்வு

நிதி தொடர்பில் விஞ்ஞாபனத்தின் ஒட்டுமொத்த இலக்காக, "நவீன வாழ்க்கை – செல்வம் கொழிக்கும் நாடு" மற்றும் "ஜனநாயக ரீதியான பொருளாதாரம் - செல்வம் கொழிக்கும் நாடு" ஆகியவை அமைந்துள்ளன. அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைச் சட்டகம் பொருளாதார ஜனநாயகத்தில் கவனம் செலுத்துகிறது. இது பொருளாதாரச் செயற்பாடுகளில் சமமான வாய்ப்புகள், பொருளாதாரம் சம்பந்தப்பட்டு முடிவெடுக்கும் செயன்முறையில் கருத்துத் தெரிவிப்பதற்கான சம வாய்ப்புடன் (equal say) பங்கேற்றல், அத்துடன் பொருளாதார ரீதியான நன்மைகளில் நியாயமான பங்கைப் பெறுதல் ஆகியவற்றை உறுதிசெய்வதற்காக, மனிதவள மேம்பாட்டுத் திட்டமொன்றுடனும், தொழில்நுட்பவியல் அபிவிருத்தி வழிவரைபடமொன்றுடனும் (technological development roadmap) ஒருங்கிணைக்கப்படுகிறது. நிலைபேண்தகு பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் எய்துவதற்கான பத்து முக்கிய கோட்பாடுகளின் அடிப்படையில் இது உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், மீள்திறன் கொண்ட உற்பத்திப் பொருளாதாரத்திற்கு (resilient production economy) ஊடாக, 2030 ஆம் ஆண்டளவில் 120 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுள்ள உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (Real GDP) இலக்கை அடைவதையும் இது நோக்காகக் கொண்டுள்ளது.


### நிறுவன ரீதியிலான திட்டமிடலும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மையும்

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை என்பவற்றின்கீழ், விஞ்ஞாபனத்தில் 55 வாக்குறுதிகள் பட்டியலிடப்பட்டுள்ளன என்பதுடன், அந்த 55 வாக்குறுதிகளும் இந்த அமைச்சுக்கான தேசியக் கொள்கைச் சட்டகத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன என்பதைக் கண்காணிப்பின் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மீளாய்வின் போது, இயைபான விஞ்ஞாபன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டும், 2026-2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான அமைச்சின் மூலோபாயத் திட்டம் தயாரிப்பு நிலையில் இருந்தது. அதேவேளை, ஒரு செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ள போதிலும், அது இதுவரை உத்தியோகபூர்வமாகக் கிடைக்கப்பெறவில்லை.

| ஆவணம் | சேகரிப்பு பற்றிய இற்றைப்படுத்தல் |
|---|---|
| மூலோபாயத் திட்டம் (2025-2029) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| செயற்பாட்டுத் திட்டம் (வருடாந்த நடைமுறைப்படுத்தற் திட்டம்) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை - Q2 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q3 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| காலாண்டு முன்னேற்ற அறிக்கை – Q4 (2025) | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |
| 2025-09-30 ஆம் தேதியன்றுள்ளவாறு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை | RTI ஊடாக கோரப்பட்டது. பெறப்படவில்லை |

## அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்களின் பகுப்பாய்வு

மீளாய்வுக் காலப்பகுதியில் அமைச்சினால் 66 அமைச்சரவைக் குறிப்பறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அனைத்துக்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டன. இது, தெரிவுசெய்யப்பட்ட கொள்கைசார் முன்முயற்சிகள் மீதான முன்னேற்றத்தை இயலுமாக்கின. இந்த அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய மதிப்பீடொன்று, 13 தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அதிக பொருத்தப்பாடுடையவை (highly relevant) எனவும், 22 தீர்மானங்கள் பொருத்தப்பாடுடையவை (relevant) எனவும், 15 தீர்மானங்கள் பகுதியளவு பொருத்தப்பாடுடையவை (partially relevant) எனவும், அத்துடன் 16 தீர்மானங்கள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் பொருத்தப்பாடற்றவை (not relevant) எனவும் மதிப்பிடப்பட்டதாகச் சுட்டிக்காட்டுகின்றது.





*உரு: அமைச்சுசார் அமைச்சரவைத் தீர்மானங்கள்*

## அமைச்சுசார் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு

2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் 101 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுடன் இவ்வமைச்சு தொடர்புபட்டிருந்ததுடன், தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் 40.33 சதவீத ஒதுக்கீடான, 3,562,925.30 மில்லியன் ரூபா நிதி இவ்வமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஒதுக்கீட்டில், 95.09 சதவீதமானது மீண்டெழுஞ் செலவினங்களுக்காகவும், 4.91 சதவீதம் மாத்திரம் மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது, அபிவிருத்திசார் நோக்குநிலையை விடவும், தொழிற்பாட்டு ரீதியில் சார்ந்திருக்கும் (Operational-oriented) பணிகளை முன்னெடுப்பதற்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது.

ஒப்பிட்டு நோக்குகையில், 2026 ஆம் ஆண்டில் 3,148,229 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இது தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் 35 சதவீதமாகும். அத்துடன், மீண்டெழுஞ் செலவினத்திற்கும் மூலதனச் செலவினத்திற்குமான விகிதத்தில் (Ratio) சிறு மாற்றம் ஏற்பட்டுள்ளதுடன், அது 93.57 சதவீத மீண்டெழுஞ் செலவினமாகவும், 6.43 சதவீத மூலதனச் செலவினமாகவும் காணப்படுகிறது.




*அட்டவணை: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் சேர்த்து மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

2025 ஆம் ஆண்டில், அமைச்சுக்கு 3,562,925 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2025 ஆம் ஆண்டுக்கான செலவினத் தொகையும், நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்ற விபரங்களும் இவ்வமைச்சிடமிருந்து இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

## தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

“வரி நிருவாகத்தை வினைத்திறன்கொண்டதாக மாற்றுவதற்காக அவசியமான சட்ட மறுசீரமைப்புக்களைச் செய்தல் (பக்கம் 102)” எனும் விஞ்ஞாபன உறுதிமொழிக்கிணங்க, மொத்த சேகரிப்பு விதிப்பனவை (Gross Collection Levy) 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிப்பதற்கும், இலங்கைப் பிரஜைகளுக்கு விதிக்கப்படும் சூதாட்டவிடுதி நுழைவு விதிப்பனவை (Casino Entrance Levy) 50 அமெரிக்க டொலரிலிருந்து 100 அமெரிக்க டொலராக அதிகரிப்பதற்கும் அரசாங்கம் அமைச்சரவைத் தீர்மானமொன்றை எடுத்தது. அதற்கிணங்க, சூதாட்டவிடுதி நுழைவு விதிப்பனவை 100 அமெரிக்க டொலராக அதிகரிப்பதற்கும், பந்தயம் மற்றும் சூதாட்ட வணிகங்கள் மீதான மொத்த சேகரிப்பு விதிப்பனவை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்துவதற்கும், 2026 ஜனவரி 1 ஆம் திகதிமுதல் நடைமுறைக்குவரும் வகையில், 2025 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

சமூகப் பாதுகாப்பு நிதியளிப்பை வலுப்படுத்துவது பற்றிய இயைபான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழியைத் தொழிற்படுத்துவதற்கென 2025 செப்டம்பர் 15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கூடாக சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அரசாங்கம் அங்கீகாரமளித்தது. அவ்வங்கீகாரத்தை உடனடுத்து, அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. வரிக் கட்டமைப்பை சீரமைக்கும் நோக்குடன், வரி விலக்களிப்புக்களில் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கும், அத்துடன் வரி விதிக்கப்படக்கூடிய சேவைகளின் நோக்கெல்லையைத் தெளிவுபடுத்துவதற்குமாக, 2025 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமானது 2025 டிசம்பர் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.

இந்த சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டத்தின் நடைமுறைப்படுத்தலானது, வருமானச் சேகரிப்பு மற்றும் செலவினம் ஆகிய இரண்டிலும் மேம்பட்ட வெளிப்படைத்தன்மையுடனும் பொறுப்புக்கூறலுடனும் முன்னெடுக்கப்படுமென கண்காணிப்புச் செயற்பாடு எதிர்பார்க்கின்றது. குறிப்பாக, பின்வருவனவற்றை வெளிப்படுத்துவதற்காக, தெளிவான பகிரங்க அறிக்கையிடல் பொறிமுறைகள் (Public reporting mechanisms) நிறுவப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது:

i. இந்த அறவீட்டின்கீழ் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம்.

ii. சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் முழுவதுக்குமான அதன் ஒதுக்கீடு, அத்துடன்

iii. அத்தகைய செலவினங்களின் ஊடாக அடையப்பெற்ற அளவிடத்தக்க பெறுபேறுகள் (measurable outcomes)

இந்த அறவீட்டின் நிருவாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துதல் என்பது பொதுமக்களின் நம்பிக்கையைத் தக்கவைப்பதற்கும், அத்துடன் மேலதிக வரிச் சுமையானது வலுப்படுத்தப்பட்டதும் ஒப்புரவானதுமான சமூகப் பாதுகாப்புச் சேவைகளுக்கு நேரடிப் பங்களிப்புச் செய்கின்றது என்பதை நிரூபிப்பதற்கும் இன்றியமையாததாகும்.

“பெண்களை பாதிப்பிற்குள்ளாக்கி அதிக வட்டியை அறவிடுகின்ற அநீதியான நுண்நிதிக் கடன் சுமையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் (பக்கம் 77)” மற்றும் “சட்டமுறையான ஏற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களை மீறி வழங்கப்பட்டுள்ள நுண்நிதிக் கடன்கள் பற்றி மீளாய்வுசெய்து, பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் (பக்கம் 104)” என்பன தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள நுண்நிதி கடன்கள் தொடர்பான வாக்குறுதிகளாகும். அதற்கிணங்க, நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டமூலத்தை (Microfinance and Credit Regulatory Authority Bill) வரைவதற்காக, அரசாங்கம் 2025 ஆகஸ்ட் 11 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானமொன்றை எடுத்தது. மேலும், 2025 செப்டம்பர் 22 ஆம் திகதி புதிய நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டமூலம் தொடர்பாக மற்றுமொரு அமைச்சரவைத் தீர்மானமும் எடுக்கப்பட்டது. குறித்த சட்டமூலத்திற்கான முதலாவது வாசிப்பு 2025 நவம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்றது. இது, பழைய சட்டமான 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நுண்நிதியளிப்புச் சட்டத்தை மாற்றீடு செய்வதாக அமையும் என்பதுடன், உயர் வட்டிப் பொறிகளை (high-interest traps) அல்லது துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கும் சிறு வியாபாரங்களுக்கும் கடன்கள் நியாயமான முறையில் கிடைப்பதை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்காக, சிறு கடன் வழங்குநர்களுக்கான விதிகளையும் நிர்ணயிக்கிறது. உரிமம்பெற்ற கடன் வழங்குநர்கள் வட்டி உச்சவரம்புகள் (Interest caps), வெளிப்படைத்தன்மை பற்றிய விதிகள் மற்றும் ஒழுக்கநெறிமுறையான கடன் சேகரிப்பு ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும். இந்த விதிகளை மீறினால் தண்டங்கள் விதிக்கப்படும். எவ்வாறிருப்பினும், தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதியுடன் ஒப்பிடுகையில் இந்தச் சட்டத்தின் வினைத்திறனானது, அது பாராளுமன்றத்தில் ஒரு சட்டமாக அமுல்படுத்தப்படும் தன்மையைக் கொண்டே அளவிடப்பட வேண்டும்.

## 5.4. அவதானிப்புகள்

**2025 ஜூன் முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்குரிய முக்கிய சூழமைவுசார் கரிசனைகள்**

- கண்காணிப்புச் செயன்முறையின் ஊடாக, வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் பெரும் பகுதி மூலதனச் செலவினங்களை விடவும் (கடன் மீள்செலுத்துகைகள் புறநீங்கலாக) மீண்டெழுஞ் செலவினங்களுக்கே ஒதுக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது **அமைச்சுக்கள்** அபிவிருத்திசார் இடையீடுகளைவிடவும், அவற்றின் அன்றாடத் தொழிற்பாடுகளிலேயே அதிக கவனம் செலுத்துகின்றன என்பதை உணர்த்துகின்றது. ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில் இவற்றுக்கிடையிலான விகிதம் பின்வருமாறு அமைகின்றது:

| ஆண்டு | மொத்த ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்) | மீண்டெழுஞ் செலவினம் (ரூபா. மில்லியன்) | % | மூலதனச் செலவினம் (ரூபா. மில்லியன்) | % |
|---|---|---|---|---|---|
| 2025 | 6,637,463 | 5,410,996 | 81.5% | 1,226,467 | 18.5% |
| 2026 | 6,450,279 | 5,166,034 | 80.1% | 1,284,245 | 19.9% |

*அட்டவணை 4: கடன் மீள்செலுத்துகைகள் இல்லாமல் அமைச்சுக்களுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு, மாகாண சபை வரவுசெலவுத் திட்டம் மற்றும் விசேட செலவு அலகுகள் (SSU)*

- மாகாண சபைகளின் தொழிற்பாட்டு மற்றும் அபிவிருத்திசார் பணிப்பாணைகளைப் (அயனெயவநள) பிரதிபலிக்கும் வகையில், தேசிய வரவுசெலவுத்திட்டமானது தொடர்புடைய அமைச்சுகளுக்கு நிகரான முறையில் மாகாண சபைகளுக்கும் நிதியை ஒதுக்குகின்றது. 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தில், மாகாண சபைகளுக்காக மொத்தம் 551,944 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இது அரசாங்கத்தின் ஒட்டுமொத்த செலவினத்தில் 6.25 சதவீதமாகும்.

  2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில், இந்த ஒதுக்கீடானது 618,100 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இருப்பினும், செலவினங்களின் கட்டமைப்பு பெருமளவில் மாற்றமின்றியே காணப்படுகின்றது. மீண்டெழுஞ் செலவினங்களுக்கும் மூலதனச் செலவினங்களுக்கும் இடையிலான விகிதம் தொடர்ந்தும் அண்ணளவாக 85:15 என்ற மட்டத்திலேயே உள்ளது. இது ஒதுக்கீடுகளின் பெரும்பகுதி மூலதன முதலீடுகள் மற்றும் அபிவிருத்திசார் செயற்பாடுகளை விடவும், தொழிற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகளுக்கே பயன்படுத்தப்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றது.

| ஆண்டு | மொத்த ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்) | மீண்டெழுஞ் செலவினம் (ரூபா. மில்லியன்) | % | மூலதனச் செலவினம் (ரூபா. மில்லியன்) | % |
|---|---|---|---|---|---|
| 2025 | 551,944 | 472,500 | 86% | 79,444 | 14% |
| 2026 | 618,100 | 533,000 | 86% | 85,100 | 14% |

*அட்டவணை 5: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்காக மாகாண சபைகளுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள்*

- கடன் மீள்செலுத்துகையானது ஒரு குறிப்பிடத்தக்க நிதிச் சுமையாக உருவெடுத்துள்ளது. 2025 ஆம் ஆண்டில் இதற்காக 1,600,000 மில்லியன் ரூபா (ஒட்டுமொத்த செலவினத்தில் சுமார் 18%) ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2026 ஆம் ஆண்டில் இது 1,877,740 மில்லியன் ரூபாவாக (ஒட்டுமொத்த செலவினத்தில் சுமார் 21%) அதிகரித்துள்ளது. தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் கடன் சேவையாற்றலுக்கான (debt servicing) பங்கு இவ்வாறாக அதிகரித்துச் செல்வது, பின்வரும் பல பேரண்டப் பொருளாதார (macroeconomic) மற்றும் கட்டமைப்பு ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும்:

| ஆண்டு | மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்) | மீண்டெழுஞ் செலவினம் (ரூபா. மில்லியன்) | % | மூலதனச் செலவினம் (ரூபா. மில்லியன்) | % |
|---|---|---|---|---|---|
| 2025 | 8,835,001 | 0 | 0% | 1,600,000 | 18.1% |
| 2026 | 8,980,000 | 0 | 0% | 1,877,740 | 20.9% |

*அட்டவணை 6: 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் கடன் மீள்செலுத்துகைக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு*

I. **அரசிறை வெளிக்கான முட்டுக்கட்டைகள் (Fiscal Space Constraints):** கடன் மீள்செலுத்துகைக்காக அதிகளவு நிதி ஒதுக்கப்படுவதானது அரச முதலீடு, சமூகப் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு மற்றும் மனித மூலதன அபிவிருத்தி ஆகியவற்றுக்காகக் கிடைக்கக்கூடிய அரசிறை வெளியைக் (fiscal space) குறைக்கின்றது. இதன் விளைவாக, மூலதனச் செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்டால், அது நடுத்தர மற்றும் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியை மந்தமடையச் செய்யக்கூடும்.

II. **அபிவிருத்திச் செலவினங்கள் புறந்தள்ளப்படல் (Crowding-Out of Development Spending):** ஒட்டுமொத்தச் செலவினத்தில் ஐந்தில் ஒரு பங்கிற்கும் அதிகமான தொகை கடன் சேவையாற்றலுக்காக ஒதுக்கப்படும் போது, அரசாங்கம் அபிவிருத்தி சார்ந்த கருத்திட்டங்களைவிடவும் மீண்டெழும் உறுதிமொழிகளுக்கே (recurrent commitments) முன்னுரிமை அளிக்கக்கூடும். இது அரச முதலீட்டு உத்வேகத்தை வலுவிழக்கச் செய்வதுடன், குறிப்பாகக் கல்வி, சுகாதாரம் மற்றும் பிராந்திய அபிவிருத்தி போன்ற துறைகளில் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

III. **வரிவிதிப்பு மற்றும் வருமானத் திரட்டல் மீதான அழுத்தம் (Pressure on Taxation and Revenue Mobilisation):** அதிகளவு கடன் சேவையாற்றல் கடப்பாடுகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, அரசாங்கம் வரிவிதிப்பை அதிகரிப்பதையோ, வரித் தளங்களை (tax bases) விரிவாக்குவதையோ சார்ந்திருக்கக்கூடும். இது வருமானம் ஈட்டுவதை வலுப்படுத்தக்கூடும் என்றாலும், கவனமாக நிருவகிக்கப்படாவிட்டால் அதிகப்படியான வரி அழுத்தமானது தனியார்துறை முதலீடுகளையும் நுகர்வையும் மந்தமடையச் செய்யக்கூடும்.

IV. **மட்டுப்படுத்தப்பட்ட எதிர்–சுழற்சி இயலுமையாற்றல் (Limited Counter-Cyclical Capacity):** கடன் சேவையாற்றலுக்கான உயர்ந்த கடப்பாடுகள், பொருளாதார வீழ்ச்சியின்போது "எதிர்-சுழற்சி அரசிறைக் கொள்கைகளை" (counter-cyclical fiscal policies) நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்குள்ள இயலுமையாற்றலைக் கட்டுப்படுத்துகின்றன. நெருக்கடியான காலப்பகுதிகளில், வரையறுக்கப்பட்ட அரசிறை நெகிழ்வுத்தன்மையானது (fiscal flexibility) பொருளாதாரத் தூண்டல் நடவடிக்கைகளை (stimulus measures) முன்னெடுக்கத் தடையாக அமையக்கூடும்.

V. **முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் கடன் நிலைபேண்தகுதன்மை (Investor Confidence and Debt Sustainability):** சாதகமான அம்சம் எனப் பார்த்தால், தொடர்ச்சியானதும் அதிகரிக்கப்பட்டதுமான கடன் மீள்செலுத்துகையானது ஒரு நாட்டின் நாணயத் தகைமையை (credit worthiness) மேம்படுத்தி, முதலீட்டாளர் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப உதவுவதுடன், குறிப்பாக நெருக்கடிக்குப் பின்னரான மீட்புச் சூழலில் பேரண்டப் பொருளாதார நிலைத்தன்மைக்கு ஆதரவாக அமையும். இருப்பினும், கடன் நிலைபேண்தகுதன்மையானது, அத்தகைய கடன் சேவையாற்றலுடன் இணைந்து, பொருளாதார வளர்ச்சியும் முதன்மை மிகைவருமான (primary surplus) உருவாக்கமும் ஏற்படுகின்றதா என்பதிலேயே தங்கியுள்ளது.

VI. **வளர்ச்சி மற்றும் சமூக ஒப்புரவு மீதான தாக்கம் (Impact on Growth and Social Equity):** செலவினக் கட்டமைப்பில் மீண்டெழுஞ் செலவுகளும் கடன் கடப்பாடுகளும் ஆதிக்கம் செலுத்துமானால், பொருளாதாரம் முதலீட்டு ரீதியான உந்துதலைக் கொண்டதாகவன்றி, நுகர்வு சார்ந்ததாக மாறும் அபாயத்தை எதிர்கொள்ளும். காலப்போக்கில் இது வேலைவாய்ப்பு உருவாக்கம், உற்பத்தித்திறன் அதிகரிப்பு மற்றும் சகலரையும் உள்வாங்கிய வளர்ச்சி (inclusive growth) ஆகிய பெறுபேறுகளைப் பாதிக்கக்கூடும்.

இச்சூழ்நிலையானது, கடன் நிலைபேண்தகுதன்மைக்கு முன்னுரிமை அளிக்கப்படும் ஓர் இறுக்கமான அரசிறைச் சூழலைப் (fiscal environment) பிரதிபலிக்கின்றது. கடன் சேவையாற்றலானது கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள், வருமான அதிகரிப்பு மற்றும் நீண்டகால வளர்ச்சியைத் தூண்டுவதற்குத் தேவையான போதிய மூலதன முதலீடு ஆகியவற்றால் ஈடுசெய்யப்படுகிறதா என்பதிலேயே அதன் முக்கிய பொருளாதாரத் தாக்கம் தங்கியிருக்கும். இக்காரணிகளைச் சமநிலைப்படுத்தத் தவறினால், அதிகப்படியான கடன் மீள்செலுத்துகை விகிதங்கள், அபிவிருத்தி மற்றும் பொருளாதார மீட்பு முயற்சிகளைக் கட்டுப்படுத்தக்கூடும்.

- விசேட செலவு அலகானது (Special Spending Unit), 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்திலிருந்து 45,593 மில்லியன் ரூபாவையும், 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்திலிருந்து 33,881 மில்லியன் ரூபாவையும் ஒதுக்கீடு செய்துள்ளது.

இலங்கையின் தேசிய வரவுசெலவுத்திட்டம் பற்றிய சொல்லாடலில், விசேட செலவு அலகு (SSU) என்பது தொடர்புடைய அமைச்சுகள் (line ministries) அல்லாத, ஆனால் அரசியலமைப்பு ரீதியான, நியதிச்சட்ட ரீதியான அல்லது வேறு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை முன்னெடுக்கின்ற அரச நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படும் ஒரு நிறுவன ரீதியான வகையினத்தைக் குறிப்பீடு செய்கிறது. அந்த நிறுவனங்களும் அவற்றுக்கான ஒதுக்கீடுகளும் பின்வருமாறு:

| இல. | நிறுவனம் | 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு (மில்லியன்) | 2026 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு (மில்லியன்) |
|---|---|---|---|
| 01 | ஜனாதிபதி அலுவலகம் | 9,000.00 | 11,385.00 |
| 02 | பிரதமர் அலுவலகம் | 1,170.00 | 975.00 |
| 03 | மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் | 577.00 | 689.00 |
| 04 | அமைச்சரவை அலுவலகம் | 231.00 | 275.00 |
| 05 | பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலகம் | 345.50 | 433.00 |
| 06 | நீதிச் சேவை ஆணைக்குழு | 165.00 | 185.00 |
| 07 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 245.00 | 270.00 |
| 08 | நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை | 49.50 | 53.00 |
| 09 | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | 1,374.00 | 2,109.00 |
| 10 | நிதி ஆணைக்குழுவின் அலுவலகம் | 133.00 | 162.00 |
| 11 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 449.00 | 494.00 |
| 12 | பாராளுமன்றம் | 5,150.43 | 5,280.00 |
| 13 | பாராளுமன்றத்தின் சபை முதல்வரின் அலுவலகம் | 78.00 | 85.00 |
| 14 | Office of the Chief Government whip of the Parliament | 88.50 | 90.00 |
| 15 | பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் | 331.00 | 337.00 |
| 16 | தேர்தல் ஆணைக்குழு | 21,487.00 | 6,650.00 |
| 17 | தேசிய கணக்காய்வு அலுவலகம் | 4,352.50 | 4,120.00 |
| 18 | நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | 46.00 | 52.00 |
| 19 | கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு | 80.00 | 75.00 |
| 20 | தேசிய பெறுகை ஆணைக்குழு | 222.00 | 140.00 |
| 21 | எல்லை நிர்ணய ஆணைக்குழு | 19.00 | 22.00 |
| | **மொத்தம்** | **45,593.43** | **33,881.00** |

*அட்டவணை 7: விசேட செலவு அலகுகள்சார் (SSU) நிறுவனங்களும் ஒதுக்கீடும்*

விசேட செலவு அலகுகள் (SSUs), பாரம்பரிய அமைச்சுக் கட்டமைப்பிற்கு அப்பாற்பட்ட, அவற்றின் குறிப்பான வகிபாகங்களையும் செலவினப் பொறுப்புகளையும் பிரதிபலிக்கும் வகையில், வரவுசெலவுத்திட்டத்தில் தனிவேறாக முன்வைக்கப்படுகின்றன.

அதற்கிணங்க, விசேட செலவு அலகுகளுக்காக 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 45,593 மில்லியன் ரூபாவும், 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 33,881 மில்லியன் ரூபாவும் இந்த முக்கிய சுயாதீன அல்லது ஓரளவு சுயாதீன (quasi-independent) அமைப்புகளின் தொழிற்பாடுகள், நிருவாகச் செலவுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இச்செலவினமானது ஆளணிச் செலவுகள் (personnel costs), தொழிற்பாட்டுச் செலவினங்கள், அத்துடன் சில சந்தர்ப்பங்களில் ஆளுகை (governance), மேற்பார்வை மற்றும் அரசியலமைப்புசார் பணிகளுக்கு அத்தியாவசியமாகவுள்ள குறிப்பான நிறுவனஞ்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது.

- 2025 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டத்திற்கான சட்டமூலம் 2025 ஜூலை 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, 2025 செப்டம்பர் 11 ஆம் திகதி அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு, 2025 செப்டம்பர் 23 ஆம் திகதி சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது முதல் சட்டமாக நிறைவேற்றப்பட்டது வரை இடம்பெற்ற ஒப்பீட்டளவில் துரிதப்படுத்தப்பட்ட நகர்வானது, தேசிய மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலில் ஆளுகை (governance) மற்றும் பொறுப்புக்கூறல் சீர்திருத்தங்களுக்கு வழங்கப்பட்ட முன்னுரிமையை பிரதிபலிக்கின்றது. அரசதுறைசார் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துதல், ஊழலை ஒழித்தல் மற்றும் நிதிசார் ஆளுகையை மேம்படுத்துதல் போன்ற அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் இணங்கிப்போகும் ஒரு குறிப்பிடத்தக்க சட்டவாக்க நடவடிக்கையாக இச்சட்டம் அமைகின்றது. **சர்வதேச நாணய நிதியத்துடனான** இலங்கையின் நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய ஆளுகை மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பு பற்றிய உறுதிமொழிகளின் பரந்த சட்டகத்திற்குள்ளேயே இச்சட்டத் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இச்சட்டத் திருத்தம் நிறுவன ரீதியான மேற்பார்வைப் பொறிமுறைகளை வலுப்படுத்துவதுடன், கணக்காய்வாளர் நாயகத்தின் சுதந்திரம், அதிகாரம் மற்றும் அமுல்படுத்துவதற்கான இயலுமையாற்றல் என்பவற்றை வலுப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், இக்காலப்பகுதியில் கணக்காய்வாளர் நாயகத்தின் நியமனமானது அரசாங்கத்திற்கும் அரசியலமைப்புப் பேரவைக்கும் இடையில் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக மாறியதுடன், நிறைவேற்று அதிகாரத்தின் நோக்கங்கள் மற்றும் நடைமுறைசார் இசைந்தொழுகுகைகள் குறித்து கரிசனைகளும் எழுப்பப்பட்டன. இப்பிரச்சினையானது பின்னர் நிறுவன ரீதியான ஈடுபாடுகளின் ஊடாகத் தீர்க்கப்பட்டதுடன், அறிக்கையிடல் காலப்பகுதியைத் தொடர்ந்து ஓர் உடன்பாடும் எட்டப்பட்டது.

- ஓய்வுபெற்ற ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியங்களையும் விசேட சிறப்புரிமைகளையும் இல்லாதொழித்தல், அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட ஒரு வாக்குறுதியாகும். அதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமானது 2025 செப்டம்பர் 10 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இது, முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியங்களையும் விசேட சிறப்புரிமைகளையும் இல்லாதொழிப்பதற்கான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழியை நிறைவேற்றும் ஒரு உறுதியான நடவடிக்கையாகும். இச்சட்டமானது 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் சட்டத்தை நீக்குகின்றது. இதன்மூலம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் அவர்களது விதவை மனைவிமார்களுக்கும் ஏலவே வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள், மாதாந்தக் கொடுப்பனவுகள், பணியாளர்கள், அலுவலக வசதிகள் மற்றும் போக்குவரத்து போன்ற அரச நிதியுதவியுடனான நன்மைகள் நீக்கப்படுகின்றன. பாராளுமன்றத்தில் அமோக பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட இந்தச் சீர்திருத்தமானது, பொருளாதார நெருக்கடிக்குப் பின்னரான அரசிறை உறுதிப்பாட்டு நடவடிக்கையொன்றாகக் கருதப்படுவதுடன், அரசியல் பொறுப்புக்கூறல் மற்றும் அரச செலவினங்களை முறைப்படுத்துதல் என்பவற்றை நோக்கிய மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான அரசியலமைப்பு ரீதியான ஓய்வூதிய உரித்துக்கள் இன்னும் அமுலில் இருப்பதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இது தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதியின் நடைமுறைப்படுத்துகை கணிசமானது என்றாலும், அது முழுமையானதல்ல என்பதைக் காட்டுகின்றது.

- ஐந்தாண்டு கால சேவையின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இல்லாதொழித்தல் என்பது தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஒரு முக்கிய வாக்குறுதியாகும். இந்த உறுதிமொழியை நடைமுறைப்படுத்துவதற்கான அமைச்சரவைத் தீர்மானம் 2025 ஜூன் 16 மற்றும் 2025 நவம்பர் 17 ஆகிய திகதிகளில் எடுக்கப்பட்டதுடன், இந்தக் கட்டத்திற்குரிய கண்காணிப்பு காலத்தைத் தொடர்ந்து, அடுத்தடுத்த பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இக்கண்காணிப்புச் செயற்பாட்டின் அடுத்த கட்டமானது, இந்த நடவடிக்கையின் முன்னேற்றம் மற்றும் நடைமுறைப்படுத்துகை பற்றிய விரிவான விளக்கத்தை வழங்கும்.

- பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை ஒழிப்பதற்கான உறுதிமொழி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அறிக்கையிடல் காலப்பகுதியில், **இந்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்துவதற்கான எந்தவொரு கொள்கை ரீதியான அல்லது சட்டவாக்க ரீதியான செயல்நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.** இருப்பினும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் குழுக் காப்புறுதி வசதி (group insurance facility) தொடர்பாக செலவினங்களை முறைப்படுத்தும் ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு பாராளுமன்ற ஆண்டுக்கு உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூபா 1,000,000 காப்புறுதித் தொகையை வழங்கும் குழுக் காப்புறுதிக் கொள்கைக்கு 2023 மே 15 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டு, கடந்த காலப்பகுதியில் இக்காப்புறுதி நடைமுறையில்

இருந்தது. 2025 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில், செலவினக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்தக் காப்புறுதிக்கான உச்ச வரம்பெல்லையை உறுப்பினர் ஒருவருக்கு ரூபா 250,000 ஆகக் குறைப்பதற்கான யோசனையை கௌரவ ஜனாதிபதி முன்மொழிந்தார். அதனைத் தொடர்ந்து, 2025 ஒக்டோபர் 09 ஆம் திகதி ஆரம்பமாகும் காப்புறுதி ஆண்டிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில், காப்புறுதி நன்மையை 250,000 ரூபாவாகத் திருத்துவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இந்த முடிவானது பாராளுமன்ற சிறப்புரிமைகளைக் குறைப்பதற்கும் அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்குமான ஒரு பகுதியளவிலான முயற்சியைப் பிரதிபலித்தாலும், அமர்வு அடிப்படையிலான கொடுப்பனவுகளை (session-based allowances) ஒழிப்பதற்கான முக்கிய தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழி இந்தக் கட்டத்தில் இன்னும் நிறைவேற்றப்படாமல் உள்ளது.

- போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான ஒருங்கிணைந்த தொழிற்பாட்டை நடைமுறைப்படுத்துதல், போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கான தண்டனைகளை வலுப்படுத்துதல் அத்துடன் அத்தகைய வழக்குகள் விரைவாகத் தீர்க்கப்படுவதை உறுதிசெய்தல் ஆகிய தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள், சட்டவாக்க மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்புக்கு ஊடாகக் கையாளப்பட்டுள்ளன.

  I. சட்டவாக்க மறுசீரமைப்பைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் (திருத்தச்) சட்டம் ஆக்கப்பட்டமையானது, இலங்கையில் போதைப்பொருள் குற்றங்களை நிருவகிக்கும் சட்டச் சட்டகத்தை வலுப்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். 2022 நவம்பர் 25 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவந்த (218 ஆம் அத்தியாயமான) முதன்மைக் கட்டளைச்சட்டத்துக்கான இந்தத் திருத்தமானது, அமுலாக்கத்தை மேம்படுத்துவதையும், போதைப்பொருள் தொடர்பான வழக்குகளைக் கையாளுவதை விரைவுபடுத்துவதையும் நோக்காகக் கொண்ட, அதிகரிக்கப்பட்ட தண்டனைகளையும் நடவடிக்கைமுறைசார் ஏற்பாடுகளையும் அறிமுகப்படுத்தியது. இந்த மீள்திருத்தப்பட்ட சட்டச் சட்டகமானது, போதைப்பொருள் கட்டுப்பாட்டில் மிகவும் கடுமையான மற்றும் அச்சுறுத்தும் வகையிலான (deterrent) அணுகுமுறையைப் பின்பற்றும் நோக்கத்தைப் பிரதிபலிக்கின்றது.

  II. இத்தகைய சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்குத் துணையாக, "போதைப்பொருள் அற்ற நாடு - மகிழ்ச்சியான நாளை" என்ற தொனிப்பொருளின் கீழ் "முழு நாடும் ஒன்றாக" எனும் தேசியமட்டத் தொழிற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஜனாதிபதியின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் இப்பிரசாரமானது, மாவட்ட ரீதியான ஈடுபாடுகள், பொதுமக்கள் விழிப்புணர்வு முன்முயற்சிகள் மற்றும் சட்ட அமுலாக்க முகராண்மைகளுக்கும் நிருவாக அதிகாரிகளுக்கும் இடையிலான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் ஒரு நாடு தழுவியதும் ஒருங்கிணைந்ததுமான அணுகுமுறையைப் பின்பற்றுகின்றது. இப்பிரசாரத்தின் ஒரு பகுதியாக ஜனாதிபதி மேற்கொள்ளும் மாவட்ட விஜயங்கள், உயர்மட்ட அரசியல் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதுடன், போதைப்பொருள் தடுப்பு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கு எதிரான ஒருமித்த தேசிய பதிலிறுப்பை (unified national response) வலுப்படுத்துகின்றன.

  III. ஒட்டுமொத்தமாக நோக்குகையில், இத்தகைய நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்ட சட்டவாக்கக் கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்த தேசியளவிலான தொழிற்பாடுகள் ஆகிய இரண்டின் மூலமும், தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுவதை நோக்கிய முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றன.

- "பாராளுமன்ற உறுப்பினர்களின் சுங்கத்தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத் திட்டம் நீக்கப்படும் (பக்கம் 194)" என்பது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் உறுதிமொழியாகும். இந்தக் கண்காணிப்புச் செயன்முறையின் முதலாம் கட்டத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. இது அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான ஆரம்பக்கட்ட இணங்கியொழுகலைப் (initial compliance) பிரதிபலிக்கின்றது.

  எவ்வாறாயினும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமன்றி அரச அதிகாரிகளுக்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் வெளிப்படுத்துகின்றன. இவிடயம் தொடர்பாக பாராளுமன்றத்தில் உரையாற்றிய சிரேஷ்ட அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி, 2025 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்திலிருந்து சேமிக்கப்படும் நிதி இதற்காகப் பயன்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டார்.

  இந்த விளக்கம் எவ்வாறிருப்பினும், கண்காணிப்புச் செயற்பாட்டின் போது 2026 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவாக வாகனக் கொள்வனவுக்காக 12,500 மில்லியன் ரூபா எனும் ஒரு தனிவேறான நிதி ஒதுக்கீடு கண்டறியப்பட்டுள்ளது. இது, 2,500 மில்லியன் ரூபா மீண்டெழுஞ் செலவினத்தையும், 10,000 மில்லியன் ரூபா[1] மூலதனச் செலவினத்தையும் உள்ளடக்கியுள்ளது. இந்த முன்னேற்றங்கள், ஆரம்பகால உறுதிமொழியுடன் ஒத்திசைவுத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், இத்தீர்மானத்தின் அரசிறை ரீதியான தாக்கங்களைத் தெளிவுபடுத்துவதற்கும் மேலதிக சரிபார்ப்பு மற்றும் அதிகரித்த வெளிப்படைத்தன்மை என்பவற்றை அவசியமாக்குகின்றன.

1 P, 178, Budget Estimates (Approved), 2026, Volume I, https://www.treasury.gov.lk/api/file/f5514bb0-58d9-4a6b-8bd5-0684966285e0

- திறன்களை அடிப்படையாகக்கொண்ட தொழில்வாண்மைப் பண்புடன்கூடிய வினைத்திறன் மிக்க அரசாங்க சேவைக்காக, டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பிரதேச செயலகங்களை பன்முக சேவை வழங்கும் மையங்களாக (multi-service provision centers) நிறுவுவதாக அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் உறுதியளித்திருந்தது (பக்கம் 198). கண்காணிப்புச் செயன்முறையின் முதலாம் கட்டத்தின் போது, எல்லா அரசாங்கக் கொடுப்பனவுகளையும் டிஜிட்டல்மயமாக்குவதற்கான "GovPay" தளத்தை ஆரம்பித்தல், ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை கொழும்பிலுள்ள அதன் பிரதான அலுவலகத்தில் இருந்து பிரதேச செயலக மட்டத்திற்கு விரிவுபடுத்துதல் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் இலங்கையின் இராஜதந்திர தூதரகங்கள் ஊடாக பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை இலத்திரனியல் முறையில் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும் "இலத்திரனியல் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்" (EBMD) வசதியை அறிமுகப்படுத்தியமை போன்ற முன்னெடுப்புகள் அவதானிக்கப்பட்டுள்ளன. 2026 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில், இலங்கையின் தனித்துவமான டிஜிட்டல் அடையாள கருத்திட்டம் (Sri Lanka Unique Digital Identity project), 'e-Grama Niladhari' தளம் மற்றும் டிஜிட்டல் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் போன்ற முக்கிய தேசிய டிஜிட்டல் முன்முயற்சிகளுக்காக மொத்தமாக 30 பில்லியன் இலங்கை ரூபா (98 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டங்கள், அரச முகவராண்மைகளுக்கிடையே வினைத்திறன்மிக்க தகவல் பரிமாற்றத்தையும் சேவை ஒருங்கிணைப்பையும் எளிதாக்குவதற்கு ஒரு மையப்படுத்தப்பட்ட மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.[1] ஜனாதிபதி ஊடகப் பிரிவின் தகவல்களின்படி, "பிரஜா சக்தி" தேசியத் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மாவட்ட செயலக அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலக அலுவலகங்களுக்கு தலா 01 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இந்த நிதியானது மடிக்கணினிகள் மற்றும் கணினிகள் உள்ளிட்ட தேவையான தகவல் தொழில்நுட்ப வன்பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கும், உத்தியோகத்தர்களின் தொடர்புடைய இயலுமையாற்றலைக் கட்டியெழுப்புவதற்கும் வழங்கப்படுகின்றது.[2] பிரஜைகளுக்கு மிகவும் வினைத்திறனானதும், பதிலளிக்கக்கூடியதும் மற்றும் உயர்தரத்திலானதுமான சேவைகள் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு, அரச துறையை மறுசீரமைப்பதும் நவீனமயமாக்குவதும் தற்போதைய அரசாங்கத்தின் ஒரு முக்கிய முன்னுரிமையாகும்.

- நிறைவேற்றதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை இல்லாதொழித்து, பாராளுமன்றத்தினால் நியமிக்கப்படும் நிறைவேற்று அதிகாரங்களற்ற ஒரு ஜனாதிபதியை நிறுவுதல் (பக்கம் 194) தொடர்பான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழியும் இந்தக் கண்காணிப்பு நடவடிக்கையின் போது அவதானிக்கப்பட்டது. நிறைவேற்றதிகாரமுள்ள ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் என சிரேஷ்ட அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்கு உறுதியளித்துள்ளமை இங்கு அவதானிக்கப்பட்டது. அதேபோன்று, கண்காணிப்புச் செயன்முறையின் இரண்டாம் கட்டத்தின் போது, பிரதமர் ஹரிணி அமரசூரியவும் இந்த உறுதிமொழியை புதிய அரசியலமைப்பை இயற்றுவதோடு தொடர்புபடுத்தி பாராளுமன்றத்தில் இதேபோன்றதொரு உத்தரவாதத்தை வழங்கினார்.[3]

  இந்த உத்தரவாதங்கள் அரசியல் எண்ணப்பாட்டை வெளிப்படுத்தினாலும், இச்செயன்முறை குறித்த தெளிவான விளக்கத்தையோ அல்லது அதனை நடைமுறைப்படுத்துவதற்கான உத்தியோகபூர்வ காலக்கெடுவையோ அரசாங்கம் இன்னும் அறிவிக்கவில்லை. நுடவடிக்கைமுறைசார் படிநிலைகள் மற்றும் மைல்கற்கள் குறித்த முறையான அறிவிப்புகள் இல்லாதமையானது, தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள இந்த முக்கிய உறுதிமொழியின் நிறைவேற்றம் பற்றிய முன்னேற்றத்தை மதிப்பிடும் திறனைக் கட்டுப்படுத்துகின்றது.

- அமைச்சர்கள் / பிரதி அமைச்சர்கள் தமது பதவிக்காலத்தின் போது பயன்படுத்துவதற்கு ஒரேயொரு வாகனத்தை மாத்திரம் வழங்குதல் (பக்கம் 194) தொடர்பான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழியின் முதலாம் கட்டக் கண்காணிப்பின் போது, ஒவ்வோர் அமைச்சருக்கும் அல்லது ஒவ்வொரு பிரதி அமைச்சருக்கும் ஒரு வாகனம் மாத்திரம் ஒதுக்கப்படுமா என்பது குறித்த மேலதிக தெளிவுபடுத்தல்கள் அவசியப்பட்டன. இது தொடர்பாக 25 அமைச்சுகளுக்கும் தகவலறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், 13 அமைச்சுகள் மாத்திரமே அவற்றுக்கு பதிலளித்துள்ளன. 07 அமைச்சுகளுக்கு முதலாம் மேன்முறையீடு செய்யப்பட்டது. 13 அமைச்சுகளிடமிருந்து பெறப்பட்ட பதில்களைப் பின்வருமாறு தொகுக்கலாம்:

---

1 https://english.news.cn/20251107/9e30e116da1947b3b81e4903b5866ca5/c.html#:~:text=According%20to%20President%20and%20Finance,provincial%20and%20local%20government%20offices.

2 https://pmd.gov.lk/news/under-the-praja-shakthi-initiative-rs-01-million-each-will-be-provided-to-district-secretariats-and-divisional-secretariats-to-enhance-their-digitalisation-capacity/#:~:text=Under%20the%20Praja%20Shakthi%20initiative,limiting%20it%20to%20Colombo%20alone.

3 https://www.pmoffice.gov.lk/news.php?para=RU5vekFVR2dpQTd2VGRiMkZUNE4wREZ6ZGk2VGF0MXFnK1BpTmFMMkpQajdnQ3QzQ3NYRHFYbDdlZEdTSmtOKw==

| இல. | அமைச்சின் பெயர் | அமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | பிரதியமைச்சருக்கு / பிரதியமைச்சர்களுக்கு குறித்தளிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி | 02 | 02 |
| 02 | மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம் | 02 | 02 |
| 03 | கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல் | 02 | 01 |
| 04 | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனம் | தெளிவில்லை[1] | 01 |
| 05 | எரிசக்தி | 02 | தெளிவில்லை[2] |
| 06 | புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் | 01<br>01 (தேசிய மரபுரிமைகள்) | 01 (கலாசாரம்)<br>01 (சமயம்) |
| 07 | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி | தெளிவில்லை[3] | 01 |
| 08 | சுற்றாடல் | 02 | 01 |
| 09 | பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு | 02 | 02 |
| 10 | தொழில் | தெளிவில்லை[4] | 02 |
| 11 | பாதுகாப்பு | 01 | 02 |
| 12 | வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் | 01 | 02 |
| 13 | கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் | 02 | 01 |

*அட்டவணை 8: தகவலறியும் உரிமை ஊடாக 13 அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்ட பதில்கள்*

மேலுள்ள அட்டவணையில் இந்த வாக்குறுதி தொடர்பான தகவலறியும் உரிமைக் கோரிக்கைக்கான பதில்கள் தெளிவாக முன்வைக்கப்படாததால், அமைச்சர்களின் வாகனப் பயன்பாடு குறித்த வழிகாட்டல்களை வழங்குவதற்காக வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் பற்றி மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க இந்தக் கண்காணிப்புச் செயற்பாடு நாட்டம் கொள்கிறது.

- 2019 ஏப்ரல் 21 ஆந் திகதிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கு அமைவாக, அரசியல்வாதிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக துரித சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழி (பக்கம் 206) பகுதியளவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி முந்தைய குழுவின் அறிக்கையை உத்தியோகபூர்வமாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளித்துள்ளதுடன், உடனடி சட்ட நடவடிக்கையை உறுதிசெய்யும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக தற்போது நாளாந்த விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

  இந்த நடவடிக்கைகள் உறுதிமொழியை நிறைவேற்றுவதை நோக்கிய முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றன என்றபோதிலும், இந்த வழக்குநடவடிக்கைகளின் வினைத்திறன் மற்றும் காலமுறைமை (timeliness) ஆகியவற்றை மதிப்பிடுவதற்கு தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியமாகின்றது.

- ஓராண்டு காலத்திற்குள் மாகாண சபைத் தேர்தல்களையும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும் நடத்தி, குடிமக்கள் அரசாளுகையில் (governance) பங்கேற்பதற்கான வாய்ப்பை வழங்குவதற்கான (பக்கம் 230) தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழி பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், மாகாண சபைத் தேர்தல்கள் இதுவரை நடத்தப்படவில்லை. 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், நடைமுறைப்படுத்துவதை நோக்கிய ஆரம்பக்கட்ட ஆயத்த நடவடிக்கைகளை இது பிரதிபலிக்கின்றது.

1. There is no information on whether the ministry has allocated vehicle/s for the minister.
2. Same as above
3. Same as above
4. Same as above

இரண்டாம் கட்ட கண்காணிப்பைத் தொடர்ந்து, மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான முறைமையியல் (methodology) மற்றும் செயன்முறை குறித்து ஆலோசிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் தலைமையில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பாராளுமன்றக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இத்தகைய முன்னேற்றங்கள் தொடர்ச்சியான முயற்சிகளைச் சுட்டிக்காட்டுகின்ற போதிலும், முழுமையான உறுதிமொழியை நிறைவேற்றுவது இன்னும் நிலுவையில் உள்ளது.

- ஊடகத்துறையின் வினைத்திறனான செயற்பாட்டை உறுதிசெய்வதற்காக ஒரு சுயாதீன ஊடக ஆணைக்குழுவை நிறுவுதல் (பக்கம் 61) தொடர்பான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழியில் பகுதியளவிலான முன்னேற்றம் காணப்படுகின்றது. ஊடகவியலாளர்களைத் தரப்படுத்துவதையும் அங்கீகரிப்பதையும் நோக்காகக் கொண்ட, இலங்கை பட்டய ஊடகத் தொழில்வாண்மையாளர் நிறுவகம் (Chartered Institute of Media Professionals of Sri Lanka) ஒன்றை நிறுவுவதற்கான சட்டமூலத்திற்கு 2025 ஏப்ரல் 07 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. தேர்தல் விஞ்ஞாபனமானது பொறுப்புக்கூறல் மற்றும் ஊடகத் தரநியமங்களைக் கண்காணிப்பதற்கான ஓர் ஒழுங்குபடுத்தல் அமைப்பையே (regulatory body) இலக்காகக் கொண்டிருந்த போதிலும், இந்த பட்டய நிறுவனமானது ஒரு சுயாதீன ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்பதையும்விட, முதன்மையாக ஒரு தொழில்வாண்மைசார் அமைப்பாகவே செயற்படுகின்றது.

  முறைசார் வழிகள் ஊடாக முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் முயற்சிகள் சவால்களை எதிர்கொண்டுள்ளன. 2025 டிசம்பர் 02 ஆம் திகதி, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலறியும் உரிமைசார் விண்ணப்பத்திற்கு எவ்வித பதிலும் கிடைக்காத நிலையில், 2026 ஜனவரி 20 ஆம் திகதி அதற்கான முதலாவது மேன்முறையீடு செய்யப்பட்டது. இதற்கிடையில், பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் கலாநிதி கௌஷல்யா ஆரியரத்ன, இந்த பட்டய நிறுவகத்தை நிறுவுவது தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழியை நிறைவேற்றுவதாக அமையும் எனத் தெரிவித்தார்.

  ஆரம்பகால உறுதிமொழிக்கும் தற்போதைய நடைமுறைப்படுத்துகைக்கும் இடையே காணப்படுகின்ற இத்தகைய முரண்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழியை துல்லியமாகப் பிரதிபலிக்கின்றனவா என்பதையும், உட்கருதப்பட்ட ஊடகத் துறைக்கான சுயாதீன மேற்பார்வை யதார்த்தமாகின்றதா என்பதையும் தீர்மானிக்க மேலதிக சரிபார்ப்புகள் அவசியமாகின்றன.

- ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவுக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளை ஆறு (06) மாதங்களுக்குள் புலனாய்வு செய்தல் அல்லது அவ்வாறு புலனாய்வு செய்யப்படாத முறைப்பாடுகள் சம்பந்தமாக அறிக்கையை ஒவ்வோர் ஆறு (06) மாதங்களுக்கு ஒருதடவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் (பக்கம் 201) தொடர்பான உறுதிமொழியானது, தகவலறியும் உரிமைச் செயன்முறை ஊடாகப் பின்தொடரப்பட்டது. இது தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கும் (CIABOC) மற்றும் இலங்கை பாராளுமன்றத்திற்கும் 2025 டிசம்பர் 22 ஆம் திகதி தகவலறியும் உரிமைக்கான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு எவ்வித பதிலும் கிடைக்கப்பெறாத நிலையில், 2026 ஜனவரி 20 ஆம் திகதி குறித்த விண்ணப்பம் தொடர்பில் ஒரு மேன்முறையீடும் செய்யப்பட்டது.

- அரசியலமைப்பின் 16 ஆவது திருத்தத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு தேவையான வளங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம், தேசிய மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான (பக்கம் 231) தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழியானது பகுதியளவில் நிறைவேற்றப்படாமல் உள்ளது. எல்லா அரசகரும மொழிகளுக்கும் சமமான அங்கீகாரத்தை இக்கொள்கை வலியுறுத்துகின்ற போதிலும், டித்வா சூறாவளி அனர்த்தத்தின் போது அரசாங்கத்தின் அறிவிப்புகள் மற்றுமொரு தேசிய மொழியான தமிழ் மொழியைப் புறக்கணித்து, சிங்கள மொழியில் மாத்திரம் வெளியிடப்பட்ட நிலைமை அவதானிக்கப்பட்டது. இது பொதுமக்கள் மத்தியில் கணிசமான கவலையையும் விமர்சனத்தையும் தூண்டியது.[1]

  தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிக்கு முழுமையாக மதிப்பளிக்கும் பொருட்டு, அரசாங்கம் தனது அனைத்து உத்தியோகபூர்வ தொடர்பாடல்களிலும் தேசிய மொழிக் கொள்கையைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன், அனைத்து மொழிச் சமூகங்களுக்கும் தகவல்கள் சமமாகச் சென்றடைவதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

- தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிக்கு இணங்க, 2025 ஆம் ஆண்டில் அரச மற்றும் தனியார் துறைகளுக்கான சம்பளக் கட்டமைப்பு சீர்திருத்தப்பட்ட போதிலும், வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வேதனத்தை அதிகரிப்பதற்கான (பக்கம் 231) உறுதிமொழி இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. 2026 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வேதன ஊக்குவிப்புக்காக 5,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதனை நடைமுறைப்படுத்துவதை இலகுபத்துவதற்கு பிராந்திய பெருந்தோட்டக் கம்பெனிகளுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் (MOU) கைச்சாத்திடப்பட்டது. இரண்டாம் கட்ட கண்காணிப்புக் காலப்பகுதியைத் தொடர்ந்து, தற்போது அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

1 https://www.thenewhumanitarian.org/news-feature/2025/12/18/lost-translation-how-sri-lankas-tamils-face-repeated-disaster-warning

எவ்வாறாயினும், இந்த உறுதிமொழியை வினைத்திறனுடனும் நிலைபேண்தகுதன்மையுடனும் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்ய பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கான கட்டமைப்புசார் ஏற்பாடுகள் பாராளுமன்றத்திலும் அரச நிதி பற்றிய குழுவிலும் (Committee on Public Finance) சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளன.

- ஒரு புதிய அரசியலமைப்பு - ஒன்றுபட்ட இலங்கைத் தேசம் எனும் துறையின்கீழ், ஒவ்வோர் அமைச்சுக்கும் அந்தந்த விடயங்கள் தொடர்பான நிபுணர்களை உள்ளடக்கிய ஓர் ஆலோசனைக் குழுவை நியமிப்பதாக அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் உறுதியளித்திருந்தது (பக்கம் 194). இது தொடர்பாக, 2025 நவம்பர் 18 ஆம் திகதி மொத்தமாகவுள்ள 25 அமைச்சுக்களுக்கும் தகவலறியும் உரிமைசார் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றுக்கு 16 அமைச்சுக்கள் பதிலளித்துள்ளதுடன், ஏனைய 09 அமைச்சுக்களும் இதுவரை பதிலளிக்கவில்லை. பதிலளித்த 16 அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| இல. | அமைச்சின் பெயர் | ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது (ஆம்/இல்லை) |
|---|---|---|
| 01 | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி | ஆம் |
| 02 | மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம் | இல்லை |
| 03 | பாதுகாப்பு | இல்லை |
| 04 | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனம் | இல்லை |
| 05 | புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் | இல்லை |
| 06 | எரிசக்தி | இல்லை |
| 07 | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி | இல்லை |
| 08 | கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் | இல்லை |
| 09 | வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை | இல்லை |
| 10 | நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு | இல்லை |
| 11 | தொழில் | இல்லை |
| 12 | பொது நிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | ஆம் |
| 13 | பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு | இல்லை |
| 14 | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி | இல்லை |
| 15 | சுற்றாடல் | இல்லை |
| 16 | கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல் | இல்லை |

*அட்டவணை 9: தகவலறியும் உரிமை ஊடாக 16 அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்ட பதில்கள்*

மேலுள்ள அட்டவணைக்கு இணங்க, அமைச்சுக்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஆலோசனைக் குழுக்களை நிறுவும் தனது வாக்குறுதியை அரசாங்கம் இன்னும் நிறைவேற்றவில்லை. கிடைக்கப்பெற்றுள்ள ஆவணங்களின் அடிப்படையில், ஆலோசகர்களின் எண்ணிக்கை, தெரிவு செய்யும் முறை அல்லது தகைமைத் தேவைகள் குறித்து தெளிவாக வரையறுக்கப்பட்ட எவ்வித அளவுகோல்களும் (criteria) இல்லை என்பது இந்தக் கண்காணிப்புச் செயன்முறையின் மூலம் மேலும் அவதானிக்கப்பட்டது. எனவே, இந்த உறுதிமொழியின் தற்போதைய நிலை மற்றும் அதன் நடைமுறைப்படுத்துகை குறித்து கண்காணிப்பு நடவடிக்கையின் அடுத்த கட்டத்தில் மேலதிக தெளிவூட்டல்களைப் பெற இந்தக் கண்காணிப்புச் செயற்பாடு நாட்டம் கொள்கின்றது.

# 6

# 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்துடன் தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஒத்திசைவு பற்றிய மீளாய்வு

## 6.1. 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கொள்கைத் திசைமுகம் பற்றிய மேலோட்டான பார்வை

2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டமானது, அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளைத் தொழிற்படுத்த முனையும் முதலாவது முழுமையான அரசிறைசார் கருவியைப் (fiscal instrument) பிரதிபலிப்பதாகும். (தேசிய கொள்கைச் சட்டகத்தில் பிரதிபலிக்கின்றவாறான) தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள், 2026 ஆம் ஆண்டுக்குரிய மற்றும் அதற்கு அப்பாலுள்ள வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் எந்தளவுக்கு இலக்காகக் கொண்டுள்ளன என்பதை இவ்வத்தியாயம் மதிப்பிடுகின்றது. இந்த பகுப்பாய்வு பின்வருவனவற்றை ஒப்பீடு செய்கின்றது:

- ஒவ்வொரு அமைச்சுக்கும் குறித்தளிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளின் எண்ணிக்கை.
- வரவுசெலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் ∴ கருத்திட்டங்களின் எண்ணிக்கை.
- 2026 தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளின் எண்ணிக்கை.

நிரல் ஒன்றில் (Column One) சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறாக, ஒவ்வோர் அமைச்சுக்கும் குறித்துரைக்கப்பட்டவோர் எண்ணிக்கையிலான வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு குறித்தளிக்கப்பட்டுள்ளது. நிரல் இரண்டானது (Column Two), 2026 தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் அந்தந்த அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட கருத்திட்டங்களினதும், நிகழ்ச்சித்திட்டங்களினதும் எண்ணிக்கையை முன்வைக்கின்றது.

| இல. | அமைச்சு | தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளின் மொத்த எண்ணிக்கை | தேசிய வரவுசெலவுத் திட்ட கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் 2026 | 2026 தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப் படவுள்ள தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனம் | 107 | 120 | 74 |
| 02 | புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் | 82 | 84 | 22 |
| 03 | பாதுகாப்பு | 42 | 71 | 31 |
| 04 | டிஜிட்டல் பொருளாதாரம் | 37 | 22 | 22 |
| 05 | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி | 108 | 171 | 35 |
| 06 | எரிசக்தி | 68 | 21 | 7 |
| 07 | சுற்றாடல் | 76 | 52 | 30 |
| 08 | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி | 55 | 124 | 41 |
| 09 | கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் | 66 | 20 | 21 |
| 10 | வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை | 139 | 12 | 6 |
| 11 | சுகாதார மற்றும் வெகுஜன ஊடகம் | 94 | 143 | 29 |
| 12 | வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் | 33 | 53 | 20 |
| 13 | கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி | 95 | 24 | 13 |
| 14 | நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு | 33 | 62 | 19 |
| 15 | தொழில் | 25 | 16 | 6 |
| 16 | பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு | 11 | 31 | 11 |
| 17 | துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து | 28 | 10 | 10 |
| 18 | பொது நிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | 20 | 107 | 7 |
| 19 | பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் | 45 | 15 | 8 |
| 20 | கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல் | 81 | 31 | 16 |
| 21 | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் | 28 | 18 | 6 |
| 22 | வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி | 21 | 15 | 5 |
| 23 | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி | 50 | 120 | 65 |
| 24 | மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம் | 59 | 21 | 11 |
| 25 | விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் | 64 | 20 | 19 |

இந்தக் கண்காணிப்புச் செயற்பாடானது, எடுத்துக்கூறப்பட்ட வாக்குறுதிகளுக்கும் அவற்றுக்குரிய வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் இடையிலான ஒத்திசைவின் அளவை மதிப்பிட்டுள்ளது. இந்த பொருத்தப்பாடு பற்றிய பகுப்பாய்வின் (Relevance analysis) முடிவுகள் மூன்றாவது நிரலில் (Third Column) முன்வைக்கப்பட்டுள்ளன.

*அட்டவணை 10: தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுக்கும் அரசிறைத் திட்டமிடலுக்கும் இடையிலான ஒத்திசைவு*

## 6.2. 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் தேர்தல் விஞ்ஞாபனத்துடன் ஒத்திசையும் விதம்

கண்காணிப்புச் செயற்பாட்டின் முதலாம் கட்டமானது, 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை ஆராய்ந்ததுடன், தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுடன் சம்பந்தப்பட்ட 133 முன்மொழிவுகள் 2025 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென முன்மொழியப்பட்டிருந்ததைக் கண்டறிந்தது. எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் பதிவேடுகளில் இருந்து மேற்கூறிய முன்மொழிவுகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டன என்பது குறித்த தெளிவான விபரங்களை இந்தக் கண்காணிப்புச் செயற்பாட்டினால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

மறுபுறம், இந்தக் கண்காணிப்பானது, 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்திற்காக, தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை அடையாளம் கண்டது.

| இல. | வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் 2026 | தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதி |
|---|---|---|
| 01 | அரசாங்க நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்குத் தேவையான வாகனங்களை/ இயந்திரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக, மீண்டெழுஞ் செலவினமாக 2,500 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவினமாக 10,000 மில்லியன் ரூபாவும். | பாராளுமன்ற உறுப்பினர்களின் சுங்கத்தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத் திட்டம் நீக்கப்படும் (பக்கம் 194) |
| 02 | வங்கிகள் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஆதனக் கடன் திட்டத்தை மீளச் செயற்படுத்துவதற்காக மீண்டெழுஞ் செலவினமாக 500 மில்லியன் ரூபா. | நேரொத்த வாக்குறுதி எதுவுமில்லை. |
| 03 | ஆசிரியர்களின் இடர்நிலைக் கொடுப்பனவு மற்றும் அதிபர்களின் கொடுப்பனவு ஆகியவற்றை அதிகரிப்பதற்காக மீண்டெழுஞ் செலவினமாக 1,000 மில்லியன் ரூபா. | விசேட காரணங்களால் தொழிற்படையில் சேர முடியாதவர்களுக்கு அடிப்படைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக இடைக்காலக் கொடுப்பனவொன்று (பக்கம் 72). |
| 04 | பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் பணியாற்றும் கடவைக் காவலர்களுக்கான கொடுப்பனவை அதிகரிப்பதற்காக மீண்டெழுஞ் செலவினமாக 250 மில்லியன் ரூபா. | விசேட காரணங்களால் தொழிற்படையில் சேர முடியாதவர்களுக்கு அடிப்படைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக இடைக்காலக் கொடுப்பனவொன்று (பக்கம் 72). |
| 05 | தனியார் துறையில் மாற்றுத்திறன்கொண்ட அல்லது விசேட தேவையுடைய இளைஞர்களின் வேலைவாய்ப்பினை ஊக்குவிப்பதற்காக மீண்டெழுஞ் செலவினமாக 500 மில்லியன் ரூபா. | இயலாமைக்குட்பட்ட நபர்களுக்கான கல்வி, பயிற்சி, தொழில்வாய்ப்பு மற்றும் ஜீவனோபாய சந்தர்ப்பங்களுக்கான வசதிகள் (பக்கம் 66). |
| 06 | தலசீமியா நோயாளிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மீண்டெழுஞ் செலவினமாக 250 மில்லியன் ரூபா. | நேரொத்த வாக்குறுதி எதுவுமில்லை. |
| 07 | காசற்ற பொருளாதாரத்தை (Cashless Economy) ஊக்குவிப்பதற்கு அரச நிறுவனங்களை இலகுபடுத்துவதற்கு மீண்டெழுஞ் செலவினமாக 1,000 மில்லியன் ரூபா. | பிரஜைகளுக்கு வெளிப்படைத்தன்மையும் வினைத்திறனும் கொண்ட சேவையை வழங்குவதற்காக பதிலிறுப்புச் செய்கின்ற அரச பிரிவொன்றை உருவாக்குவதற்காக பிரதான அரச நிறுவனங்களை டிஜிட்டல்மயமாக்கல் (பக்கம் 132) |
| 08 | நாடு தழுவிய ரீதியில் போதைப்பொருள் அச்சுறுத்தலைத் தடுப்பதற்கான விசேட நடவடிக்கையை ஆரம்பிப்பதற்காக மீண்டெழுஞ் செலவினமாக 500 மில்லியன் ரூபாவும் மூலதனச் செலவினமாக 1,000 மில்லியன் ரூபாவும். | நாட்டில் போதைப் பொருட்களையும் பாதாள உலகத்தையும் ஒழித்துக்கட்டுவதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கை (பக்கம் 212) |
| 09 | அரச நிறுவனங்களில் டிஜிட்டல் அணுகல் வசதிகளை மேம்படுத்துவதற்காக மூலதனச் செலவினமாக 1,000 மில்லியன் ரூபா. | பிரஜைகளுக்கு வெளிப்படைத்தன்மையும் வினைத்திறனும் கொண்ட சேவையை வழங்குவதற்காக பதிலிறுப்புச் செய்கின்ற அரச பிரிவொன்றை உருவாக்குவதற்காக பிரதான அரச நிறுவனங்களை டிஜிட்டல்மயமாக்கல் (பக்கம் 132) |

| | | |
|---|---|---|
| 10 | மாற்றுத்திறனாளிகள் மற்றும் விசேட தேவையுடையோருக்காகப் பொது இடங்களில் அணுகல் வசதிகளையும் சுகாதார வசதிகளையும் உறுதிப்படுத்துவதற்காக மூலதனச் செலவினமாக 1,000 மில்லியன் ரூபா. | பொதுக் கட்டிடங்களைத் திட்டமிடுகையில் இயலாமைக்குட்பட்ட ஆட்களின் பாதுகாப்பையும் அணுகலையும் உறுதிசெய்தல் (பக்கம் 97) |
| 11 | இரத்தினபுரி நகர அபிவிருத்திக்காகக் காணிகளை விடுவிப்பதற்கும் (அரசாங்க அதிகாரிகளுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணித்தல்), அதற்கான மூலதனச் செலவினமாக 500 மில்லியன் ரூபா. | நேரொத்த வாக்குறுதி எதுவுமில்லை. |
| 12 | ஒட்டிசம் (Autism) உள்ளிட்ட மாற்றுத்திறனுடைய சிறுவர்களுக்கான பகல்நேர பராமரிப்பு நிலையங்களைத் தாபிப்பதற்காக மூலதனச் செலவினமாக 500 மில்லியன் ரூபா. | இயலாமைக்குட்பட்ட சிறுவர்கள், வீதிகளில் உள்ள சிறுவர்கள் மற்றும் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் உட்பட, அபாய நேர்வுக்கு உட்படக்கூடிய சிறுவர்களை முன்கூட்டியே இனங்காண்பதற்கு மற்றும் அவர்களுக்காக உரிய தலையீட்டை மேற்கொண்டு செயற்படுவதற்கு வலுவான பொறிமுறையொன்றை தாபித்தல் (பக்கம் 83). |
| 13 | நிறுவனமயப்படுத்தப்பட்ட தனிநபர்களை மீண்டும் சமூகமயப்படுத்துவதற்கும் மற்றும் சிறுவர் பாதுகாப்புக்குமான வீடமைப்பு உதவிகளை வழங்குவதற்காக மூலதனச் செலவினமாக 2,000 மில்லியன் ரூபா. | மானிய உதவிகள் மற்றும் பாதுகாப்பு அவசியமாகும் யுத்த-விதவைகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், இயலாமைக்குட்பட்ட நபர்கள் மற்றும் மன அழுத்தங்களுக்கு ஆளானவர்கள் ஆகியோருக்கு மானிய உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் (பக்கம் 231). |
| 14 | ஆரோக்கிய நிலையங்களைத் (Aarogya Centers) தாபிப்பதற்காக மூலதனச் செலவினமாக 1,500 மில்லியன் ரூபா. | நேரொத்த வாக்குறுதி எதுவுமில்லை. |
| 15 | தெனியாய மற்றும் தம்புள்ள வைத்தியசாலைகளைப் பொருத்தமான இடங்களுக்கு இடமாற்றுவதற்காக மூலதனச் செலவினமாக 1,000 மில்லியன் ரூபா. | நேரொத்த வாக்குறுதி எதுவுமில்லை. |
| 16 | அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய இடங்களில் நகர மண்டபங்களை நிர்மாணிப்பதற்காக மூலதனச் செலவினமாக 200 மில்லியன் ரூபா. | நேரொத்த வாக்குறுதி எதுவுமில்லை. |
| 17 | நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிந்தவூர் கலாசார மத்திய நிலையத்தின் எஞ்சிய பணிகளைப் பூர்த்தி செய்வதற்காக மூலதனச் செலவினமாக 300 மில்லியன் ரூபா. | நேரொத்த வாக்குறுதி எதுவுமில்லை. |
| 18 | முதியோர் பொருளாதாரம் (Silver Economy) – சிரேஷ்ட பிரஜைகளுக்கான முதலீடுகளுக்காக மூலதனச் செலவினமாக 10 மில்லியன் ரூபா | நேரொத்த வாக்குறுதி எதுவுமில்லை. |
| 19 | மாத்தறை நில்வலா ஆற்றின் வழியே வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் உவர் நீர் உட்புகுவதைக் கட்டுப்படுத்தும் பணிகளுக்காக மூலதனச் செலவினமாக 1,000 மில்லியன் ரூபா. | நேரொத்த வாக்குறுதி எதுவுமில்லை. |
| 20 | உள்நாட்டு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக மூலதனச் செலவினமாக 1,000 மில்லியன் ரூபா. | நேரொத்த வாக்குறுதி எதுவுமில்லை. |

*அட்டவணை 11: 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள்*

இந்தக் கண்காணிப்புச் செயன்முறையானது மேலுள்ள 20 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளில், பகுதியளவு பொருத்தப்பாடுடைய 10 தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளை அடையாளம் கண்டுள்ளது. 2026 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய மேற்கூறிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்தும் செயன்முறை மீதான கண்காணிப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

# 7

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அரசாங்கத்தின் நடவடிக்கைகள்

## 7.1. அனர்த்த முகாமைத்துவம் பற்றிய வாக்குறுதிகளும் டித்வா சூறாவளிக்குப் பின்னரான நடவடிக்கைகளும்

அரசாங்கத்தின் "வளமான நாடு - அழகான வாழ்க்கை" எனும் தேர்தல் விஞ்ஞாபனம் அனர்த்த முகாமைத்துவத்திற்கென ஒரு பிரத்யேகமான தொனிப்பொருள்சார் பிரிவைக் (dedicated thematic section) கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அனர்த்தம் தொடர்பான உறுதிமொழிகள் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பல்வேறு தொனிப்பொருள்சார் பகுதிகளில் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்தக் கண்காணிப்புச் செயற்பாடானது வெவ்வேறு தொனிப்பொருள்களுக்குக் கீழே காணப்படும் அனர்த்தம் தொடர்பான பின்வரும் உறுதிமொழிகளை அடையாளம் கண்டுள்ளது:

1. இயற்கை அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகளை அடையாளம் காணுதல், முகாமை செய்தல் மற்றும் இடராபத்துக் குறைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் (பக்கம் 31).

2. விவசாய, கைத்தொழில் மற்றும் குடியிருப்பு நோக்கங்களுக்காக விஞ்ஞான ரீதியாக வடிவமைக்கப்பட்ட நிலைபேண்தகுதன்மையிலான காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.

3. இயற்கை அனர்த்தங்களுக்கான முன்னெச்சரிக்கை முறைமைகளை அறிமுகப்படுத்துதல், மனித செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் அத்துடன் இழப்பீடு மற்றும் காப்புறுதிப் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்.

4. மலை முகடுகளிலும் செங்குத்தான சரிவுகளிலும் உள்ள காடுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் முகாமை செய்தல் அத்துடன் அவற்றின் பொருளாதார மற்றும் சமூகப் பயன்பாட்டின் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தல்.

5. காலநிலையைத் தாங்கி வளரக்கூடிய பயிர் வகைகளை உருவாக்குதல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு அமைய தகவமைத்துக்கொள்ளக்கூடிய பண்ணை மற்றும் நீர்ப்பாசன நுட்பங்களைப் பின்பற்றுதல்.

6. சட்டவிரோத மீன்பிடியைத் தடுத்தல், கடல் மாசுபாட்டைக் குறைத்தல் மற்றும் கடல் சார்ந்த அனர்த்தங்களைக் குறைப்பதற்கு அவசரகாலப் பதிலிறுப்புப் பொறிமுறைகளை நிறுவுதல்.

7. வெள்ளம், காட்டுத்தீ மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கான செயற்திறன் மிக்க மற்றும் நிகழ்நேர (real-time) எச்சரிக்கை முறைமைகளை உருவாக்குதல்.

8. அவசர அனர்த்தப் பதிலிறுப்பு உட்பட கடல்சார் துறையில் நிலவும் இயலுமையாற்றல்சார் இடைவெளிகளை அடையாளம் காண்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதுடன், ஓர் எதிர்கால தொலைநோக்குக்கு முன்னுரிமை அளித்தல் (பக்கம் 78).

9. நீர்ப்பிடிப்பு (catchment) மற்றும் தாவர (vegetation) வரைபடமாக்கல் அத்துடன் காணிப் பயன்பாட்டு அச்சுறுத்தல் வகைப்படுத்தல் (land-use threat categorization) உள்ளிட்ட உயிர்ப்பல்வகைமை சார்ந்த "அதிமுக்கிய இடங்களை" (hotspots) அடையாளம் கண்டு அவற்றைப் பாதுகாப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை வலுப்படுத்துதல்.

10. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் ஊடான அனர்த்தத் தணிப்பு (Disaster mitigation), காலநிலை தாங்குதிறன் (climate resilience) மற்றும் தகவமைப்புப் பொறிமுறைகள் (adaptation mechanisms).

11. தேசிய அனர்த்தப் பதிலிறுப்பு மற்றும் தொழிற்படைப் பயிற்சி என்பவற்றுக்காக அரச துறை நிர்மாண நிறுவனங்களைச் சான்றுறுதிப்படுத்தல்.

12. உள்நாட்டு துரித பதிலிறுப்பு இயலுமையாற்றலை வலுப்படுத்தும் அதேவேளை, உலகளாவிய மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரணப் பணிகளில் இலங்கையின் வகிபாகத்தை மேம்படுத்தல்.

13. தொழிற்துறை மாசுபாடு, சுற்றுச்சூழல் அபாயங்கள், இயற்கை அனர்த்தங்கள், தீ மற்றும் வறட்சி ஆகியவற்றால் ஏற்படும் சுகாதார மற்றும் பொருளாதாரத் தாக்கங்களைக் குறைத்து, உயிர்களைப் பாதுகாப்பதற்கு அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்புகளை முறைப்படுத்துதல்.

முதல் நான்கு வாக்குறுதிகளும் **"முழுநிறைவான வாழ்க்கை – வசதியான நாடு"** எனும் தொனிப்பொருளின்கீழ் அமைகின்றன. அதனைத் தொடர்ந்துவரும் ஏழு வாக்குறுதிகளும் **"நவீன வாழ்க்கை – செல்வம் கொழிக்கும் நாடு"** என்பதன்கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. எஞ்சிய இரண்டு வாக்குறுதிகளும் **"அபிமானமிக்க வாழ்க்கை – நிலைதளராத நாடு"** என்பதன்கீழ் உள்ளடக்கப்படுகின்றன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது என்னவெனில், **"கௌரவமான வாழ்க்கை – பாதுகாப்பான நாடு"** எனும் தொனிப்பொருளின்கீழ் அனர்த்தம் தொடர்பான எந்தவொரு வாக்குறுதியும் உள்வாங்கப்படவில்லை. ஒட்டுமொத்தத்தில், அனர்த்தம் தொடர்பான இந்த 13 உறுதிமொழிகளும் பல்வேறு அமைச்சுப் பொறுப்புக்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

## 7.2. தேசிய கொள்கைச் சட்டகத்தில் அனர்த்தம் தொடர்பான உறுதிமொழிகள்

தேர்தல் விஞ்ஞாபனம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் ஒரு தேசிய கொள்கைச் சட்டகமாக ஏற்றங்கீகரிக்கப்பட்டதும், அனர்த்தம் தொடர்பான உறுதிமொழிகள் தனியொரு தொனிப்பொருள்சார் வகுதியின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டன. அனர்த்தங்களை மையப்படுத்திய பத்து கொள்கைசார் உறுதிமொழிகள் பின்வருமாறு அடையாளப்படுத்தப்பட்டன:

1. இயற்கை அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகளை அடையாளம் காணுதல், முகாமை செய்தல் மற்றும் இடராபத்துக்களைக் குறைத்தல்.

2. விஞ்ஞான ரீதியாக வடிவமைக்கப்பட்ட நிலைபேண்தகு தன்மையுடனான காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

3. மலை முகடுகள் மற்றும் செங்குத்தான சரிவுகளில் உள்ள காடுகளை கடுமையான கட்டுப்பாடுகளுடன் ஒழுங்குபடுத்துதல்.

4. முன்னெச்சரிக்கை முறைமைகளை அறிமுகப்படுத்துதல், மனித செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் அத்துடன் இழப்பீடு மற்றும் காப்புறுதிப் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்.

5. சுகாதார மற்றும் பொருளாதாரத் தாக்கங்களைக் குறைத்து, உயிர்களைப் பாதுகாப்பதற்கு அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்புகளை முறைப்படுத்துதல்.

6. வெள்ள அபாய வலயங்களை வரைபடமாக்குதல் மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அபிவிருத்திகளுடனான அவற்றின் தொடர்புகளை மதிப்பீடு செய்தல், தரவு ரீதியான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் தீர்வுகளை வழங்குதல்.

7. புயல்கள், வெள்ளம், சுனாமி, மண்சரிவு மற்றும் வேறு அனர்த்தங்கள் பற்றி பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கைகளை வழங்குவதற்காக உயர் தொழில்நுட்ப வானிலை செயலிகளை உருவாக்குதல்.

8. அதிக இடராபத்துள்ள பகுதிகளில் நிலச்சிதைவு குறித்த கருத்தாய்வுகளையும் (surveys) ஆய்வுகளையும் நடாத்துதல் மற்றும் மண்சரிவுகளைத் தடுப்பதற்காக மண் வளத்தையும் கட்டமைப்பையும் மேம்படுத்துதல்.

9. இழப்புகளைத் தணிப்பதற்காக அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி காலநிலை மாற்றத்தினால் தூண்டப்படும் இயற்கை அனர்த்தங்கள் குறித்து புலனாய்வு செய்தல்.

10. காப்புறுதித் திட்டங்கள் மற்றும் விசேட அனர்த்தத் தயார்நிலை நிதியங்கள் உட்பட, அடுத்த தசாப்தத்திற்கான இயற்கை அனர்த்த முகாமைத்துவ மூலோபாயம் ஒன்றை நிறுவுவதற்கு தொழில்துறை மற்றும் பொது மன்றங்களுடன் கூட்டுழைப்புடன் செயலாற்றுதல்.

இந்த பத்து உறுதிமொழிகளில், முதல் ஐந்து உறுதிமொழிகளும் நேரடியாகத் தேர்தல் விஞ்ஞாபனத்திலிருந்து உருவானவை, அதேவேளை, ஏனைய ஐந்து உறுதிமொழிகளும் தேசிய கொள்கைச் சட்டக மட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சேர்க்கைகளாகும். இந்த கண்காணிப்புச் செயன்முறையானது, டித்வா சூறாவளி அனர்த்தத்திற்கு முன் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திற்குப் பின்னரான கொள்கை விரிவாக்கங்களாக இந்தச் சேர்க்கைகளை அடையாளப்படுத்துகின்றது.

## 7.3. டித்வா சூறாவளிக்குப் பிந்தைய கொள்கை நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தலும்

டித்வா சூறாவளிக்குப் பிந்தைய சூழலில், அனர்த்த முகாமைத்துவமானது அரசாங்கக் கொள்கை நடைமுறைப்படுத்தலில், குறிப்பாக மீட்பு, நிவாரணம் மற்றும் புனரமைப்பு ஆகியவற்றில் ஒரு முக்கிய அங்கமாக மாறியுள்ளது. ஊடனடி பதிலிறுப்பாக, அரசாங்கம் நாடு தழுவிய அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியதுடன், பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதையும் பதிலிறுப்புப் பொறிமுறைகளைத் துரிதப்படுத்துவதையும் நோக்காகக் கொண்ட ஒழுங்குவிதிகளையும் சுற்றறிக்கைகளையும் வெளியிட்டது.

டிட்வா சூறாவளிக்குப் பிந்தைய மீட்பு, நிவாரணம் மற்றும் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக, அரசாங்கம் பின்வரும் வர்த்தமானிகளையும் சுற்றறிக்கைகளையும் வெளியிட்டது:

| வர்த்தமானி/ சுற்றறிக்கை இல. | அமைச்சு/ நிறுவனம்/ அமைப்பு | தலைப்பு | வெளியிடப்பட்ட திகதி | இணையத்தள இணைப்பு |
|---|---|---|---|---|
| அதிவிசேட வர்த்தமானி இல. 2464/30 | ஜனாதிபதி | ஜனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்/ இலங்கையில் பொதுமக்கள் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தல். | 28-11-2025 | https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-30_E.pdf |
| வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல: 05/2025 | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | அவசரகால அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல். | 28-11-2025 | https://www.treasury.gov.lk/api/file/1a7c2b96-dba7-4976-bae7-81edf25395f2 |
| வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல: 06/2025 | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | அவசரகால அனர்த்த நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையைத் துரித கதியில் வழமைக்குக் கொண்டு வருதல். | 01-12-2025 | https://www.treasury.gov.lk/api/file/73cf1541-c48c-4ce0-9c3d-dd63db381e0a |
| வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல: 07/2025 | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | அவசரகால அனர்த்த நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையைத் துரித கதியில் வழமைக்குக் கொண்டு வருதல். | 02-12-2025 | https://www.treasury.gov.lk/api/file/116b2606-8f0a-4571-852b-f80fd3987518 |
| வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல: 08/2025 | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோரை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டம். | 05-12-2025 | https://www.treasury.gov.lk/api/file/8322d7b1-c343-4a47-a4c3-27a1c7baa7ec |

| | | | | |
|---|---|---|---|---|
| வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல: 08/2025 (i) | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோரை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டம். | 20-12-2025 | https://www.treasury.gov.lk/api/file/a50e4973-227b-4b84-acf2-42748ac25738 |
| அதிவிசேட வர்த்தமானி இல. 2469/09 | ஜனாதிபதி | ஜனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்/ இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணியொன்றைத் தாபித்தல். | 31-12-2025 | https://documents.gov.lk/view/extra-gazettes/2025/12/2469-09_E.pdf |

*அட்டவணை 12: நெருக்கடிக்குப் பிந்தைய காலத்திலான அரசாங்க வர்த்தமானிகளும் சுற்றறிக்கைகளும்*

இவற்றுக்கு மேலதிகமாக, டித்வா சூறாவளிக்குப் பிந்தைய மீட்பு முயற்சிகளுக்கு ஆதரவளிக்க பின்வரும் ஐந்து அமைச்சரவை தீர்மானங்கள் எடுக்கப்பட்டன:

1. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரணங்களை வழங்குதல் (2025 டிசம்பர் 1)
2. “இலங்கையைக் மீளக்கட்டியெழுப்பும் நிதியத்தை” (Rebuilding Sri Lanka Fund) தாபித்தல் (2025 டிசம்பர் 1)
3. உலக வங்கி நிதியுதவி அளிக்கும் கருத்திட்டங்களுக்குள், தற்செயல் நிகழ்வுசார் அவசரகால பதிலிறுப்புக் கூறுகளைச் (Contingency Emergency Response Components) செயற்படுத்துதல் (2025 டிசம்பர் 10)
4. நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக ஆசிய பசுபிக் அனர்த்த பதிலிறுப்பு நிதியத்திலிருந்து (Asia Pacific Disaster Response Fund) மானியக்கொடை ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல் (2025 டிசம்பர் 10)
5. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமய நிறுவனங்களை புனரமைப்பதற்கான உதவிகளை வழங்குதல் (2025 டிசம்பர் 10)

## 7.4. நிதிசார் உறுதிமொழிகள்

அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, 2026 ஆம் ஆண்டுக்கான குறைநிரப்பு செலவுமதிப்பீட்டின் (Supplementary Estimate) ஊடாக நிதிசார் உறுதிமொழிகளும் வழங்கப்பட்டன. டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து, அதன் மீட்புப் பணிகளுக்காக 500 பில்லியன் இலங்கை ரூபா (சுமார் 1.6 பில்லியன் அமெரிக்க டாலர்) மேலதிக ஒதுக்கீட்டுக்கு 2025 டிசம்பர் 19 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றம் அங்கீகாரம் அளித்தது. எவ்வாறாயினும், இந்த மேலதிகச் செலவினமானது 2026 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 1.5% இனால் அதிகரிப்பதுடன், அரசிறைசார் வெளியைக் (Fiscal Space) குறைப்பதாகவும் அமைகிறது.[1] நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இதனை BD/CBP/01/01/50/2025 எனுமிலக்க சுற்றறிக்கையின் ஊடாக அறிவித்தது.[2] அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை வழமைக்குக் கொண்டுவருவதற்கும், அழிக்கப்பட்ட உட்கட்டமைப்புகளைப் புனரமைப்பதற்கும் இந்த குறைநிரப்பு செலவுமதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது. இந்த செலவுமதிப்பீட்டில் உட்கட்டமைப்புக்காக 250 பில்லியன் ரூபாவும், வணிக மற்றும் வாழ்வாதார மீட்புக்காக 150 பில்லியன் ரூபாவும், நேரடி நிவாரணம் மற்றும் வீடமைப்புக்காக 100 பில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

## 7.5. கண்காணிப்புத் தாக்கவிளைவுகள்

தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள், புதிதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகள், அவசரகால வர்த்தமானிகள், திறைசேரிச் சுற்றறிக்கைகள், அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் நிதியத்தின் ஊடாகத் திரட்டப்பட்ட நிதிகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பானது, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மீட்பு முயற்சிகளைக் கண்காணிப்பதற்கான ஒரு மேலதிகமானதும் சமாந்தரமானதுமான பாதையை உருவாக்கியுள்ளது. இதற்கமைய, 2026 ஆம் ஆண்டு முழுவதும் அனர்த்த பதிலிறுப்பு, மீட்பு மற்றும் மீண்டெழும் திறனைக் கட்டியெழுப்பல் ஆகிய செயன்முறைகளை, குறிப்பாக ஜனாதிபதியின் அதிகாரத்தின்கீழ் இயங்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின்கீழ், மூன்றாம் தரப்பு மற்றும் சுயாதீன கண்காணிப்பு வழிமுறைகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்கின்றன. அனர்த்தத்திற்குப் பிந்தைய

1 https://publicfinance.lk/public/en/topics/budget-2026-lkr-500-billion-relief-bill-shrinks-fiscal-space-1766561006

2 https://treasury.gov.lk/api/file/4f526647-b266-4ebe-aeee-ae6612c47cd3?utm_source=chatgpt.com

அனைத்து புனர்வாழ்வு, மீட்பு மற்றும் புனரமைப்பு விடயங்களுக்கும் மூலோபாயத் தலைமைத்துவம், ஒருங்கிணைப்பு, ஏகோபித்த அணுகுமுறை மற்றும் மேற்பார்வை ஆகியவற்றை வழங்குவதற்காகவும், பெரும் நம்பிக்கையையும் உறுதிப்பாட்டையும் நிலைநிறுத்தும் பொருட்டும், "இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி" (Presidential Task Force for Rebuilding Sri Lanka) நிறுவப்பட்டது.[1] எவ்வாறாயினும், "இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் நிதியத்தின்" சட்ட அந்தஸ்து குறித்து அரச நிதி பற்றிய குழுவில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நெருக்கடி நிலையின் போது சிவில் சமூக அமைப்புகள் (CSOs) ஆக்கபூர்வமான முறையில் ஆதரித்துவாதிடல் (Advocacy) செயற்பாடுகளிலும், பதிலிறுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன. செயலணியிலும், அதனோடு தொடர்புபட்ட உபகுழுக்களிலும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்வாங்கப்பட்டமை பாராட்டத்தக்கது என்றாலும், நெருக்கடிக்குப் பிந்தைய முகாமைத்துவச் செயல்பாடுகளில் முக்கிய விடயங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பது பற்றி பகிரங்கமாகக் கிடைக்கக்கூடிய தகவல்களில் ஒரு குறிப்பிடத்தக்க குறைபாடு காணப்படுகிறது. மேலும், மிகவும் வினைத்திறனானதும் சகலரையும் உள்ளடக்கியதுமான (Inclusive) பதிலிறுப்பை உறுதிப்படுத்துவதற்காக உள்ளூர், பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்கு கணிசமான வாய்ப்புகள் உள்ளன. அனர்த்த பதிலிறுப்பு மற்றும் மீட்பு முயற்சிகளில் தேவைகள் புறக்கணிக்கப்படக்கூடிய அபாயத்தைக்கொண்டுள்ள பெண்கள் உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய மக்கள் (Vulnerable populations) குறித்து அரசாங்கம் குறிப்பாகக் கவனம் செலுத்த வேண்டும் என சிவில் சமூக அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. அனர்த்த முகாமைத்துவ இடையீடுகள் சகலரையும் உள்ளடக்கியதாகவும் ஒப்புரவானதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கு, மேற்பார்வை வழிமுறைகளை (Oversight mechanisms) மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை கள யதார்த்தங்கள் சுட்டிக்காட்டுகின்றன. டித்வா சூறாவளிக்குப் பிந்தைய மீட்புப் பணிகளின் போது கருத்திற் கொள்ள வேண்டிய குறுகிய கால மற்றும் நீண்ட காலப் பிரச்சினைகள் குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது.[2] இதில் நிவாரண முயற்சிகளின் ஒரு பகுதியாக எடுக்கப்பட வேண்டிய உடனடி நடவடிக்கைகள், சட்ட மற்றும் கொள்கைசார் சிக்கல்கள், ஆளுகை மற்றும் கட்டமைப்பு சார்ந்த பிரச்சினைகள், அரச நிதி, மற்றும் உருவாகிவரும் நீண்டகாலப் பிரச்சினைகள் போன்றவை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. முக்கியமாக, பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவளிப்பதன் மூலமும், சகலரையும் உள்ளடக்கிய மற்றும் உரிமைகள் சார்ந்த (Rights-based) பதிலிறுப்புகளுக்காக ஆதரித்துவாதிடுவதன் மூலமும், கள யதார்த்தங்களை வெளிப்படுத்துவதன் மூலமும் இந்த நெருக்கடி காலத்தில் சிவில் சமூகம் ஒரு தீர்மானமிக்க வகிபாகத்தை வகித்தது. எனவே, சிவில் சமூக அமைப்புகளுடன் தொடர் ஈடுபாடு கொள்வதானது வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் சமூகத்தை மையமாகக் கொண்ட மீட்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்கு அர்த்தபூர்வமான பங்களிப்பை வழங்கும்.

இதற்கிடையில், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தை சட்டரீதியாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகத் (Legal corporate body) தாபிப்பதற்காக, 2025 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகச் சட்டத்தை பாராளுமன்றம் 2025 ஒக்டோபர் 7 ஆம் திகதி அங்கீகரித்துள்ளது. மண்சரிவு இடர்களை முகாமைத்துவம் செய்தல், தேசிய கட்டிடக் குறியீடுகளை (National building codes) நிர்ணயித்தல் மற்றும் அனர்த்தங்களைத் தாங்கக்கூடிய (Disaster-resilient) கட்டுமானங்களை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை இச்சட்டம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. முன்னதாக, 2021-10-05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்திற்கு சட்டப்பூர்வ அங்கீகாரத்தை வழங்குவதற்கான சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு (Legal Draftsman) அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.[3]

1 https://www.dgi.gov.lk/images/2025/12/31/2469-09_E.pdf

2 https://www.cpalanka.org/key-short-term-and-long-term-issues-to-consider-for-post-cyclone-ditwah-recovery/

3 https://island.lk/national-building-research-institute-to-be-established/

# 8

# பரிந்துரைகள்

தேர்தல் விஞ்ஞாபனக் கண்காணிப்பு பற்றிய இரண்டாவது அரையாண்டு அறிக்கை முடிவுகளின் அடிப்படையில், பின்வரும் பரிந்துரைகள் முன்மொழியப்படுகின்றன:

1. **இடைவெளிகள் பற்றிய தெளிவூட்டல்:** ஓர் அரசியல் ஆவணம் என்றவகையில் அசல் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுக்கும், ஓர் அரசாங்க ஆவணம் என்றவகையில் தேசிய கொள்கைச் சட்டகத்திற்கும் இடையில் அவதானிக்கப்பட்ட இடைவெளிகள் குறித்து அரசாங்கத்திடமிருந்து விரிவான விளக்கங்களை வழங்குதல். இது அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் பங்களிக்கும்.

2. **உள்ளகக் கண்காணிப்பு பொறிமுறைகள்:** தேர்தல் விஞ்ஞாபன நடைமுறைப்படுத்தலைப் பின்தொடர்ந்து கண்காணிப்பதற்காக, ஜனாதிபதி செயலகத்தினால் ஒருங்கிணைக்கப்படும் ஏற்பாடுகள் உட்பட அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் உள்ளகக் கண்காணிப்புச் செயற்பாடுகளின் பயனுறுதி பற்றி ஆராய்ந்து அறிக்கையிடுதல். இந்தப் பொறிமுறைகள் தெளிவாக வரையறுக்கப்பட்ட நிறுவன ரீதியிலான மட்டத்தில் தொழிற்படுவதையும், விஞ்ஞாபன உறுதிமொழிகளின் நிலை குறித்த முன்னேற்ற அறிக்கைகளைக் கிரமமாக வெளியிடுவதையும் இது உறுதிப்படுத்துகின்றது.

3. **நடைமுறைப்படுத்தல் வழிமுறை பற்றிய மதிப்பீடு:** தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதிமொழிகள் வெளிப்படுத்தப்பட்டமை முதல், அவை தேசியக் கொள்கைச் சட்டகத்தில் உள்வாங்கப்படுதல், மூலோபாயத் திட்டங்களாக மாற்றப்படுதல் அத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களினதும் நிறுவனங்களினதும் பங்களிப்புடன் அமைச்சு மட்டத்திலான செயற்பாட்டுத் திட்டங்களூடாக நடைமுறைப்படுத்தப்படுதல் வரையில் காணப்படுகின்ற நடைமுறைப்படுத்தல் வழிமுறை பற்றி ஒரு முழுமையான மதிப்பீட்டைச் செய்தல்.

4. **அமைச்சு மட்டத்திலான ஏற்பு:** மூலோபாய மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை அமைச்சுக்கள் ஏற்புச் செய்தமை அல்லது ஏற்புச் செய்யாமை பற்றி மதிப்பீடு செய்தல் அத்துடன், விஞ்ஞாபன முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதில் அமைச்சுக்களின் அர்ப்பணிப்பில் காணப்படும் மாறுபாடுகளுக்கான நியாயப்படுத்தல்களை வழங்குதல்.

5. **வரவுசெலவுத்திட்டப் பயன்பாடு பற்றிய பொறுப்புக்கூறல்:** தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் தொடர்புடைய 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் குறைந்தளவில் பயன்படுத்தப்பட்டமை அல்லது நடைமுறைப்படுத்தப்படாமை பற்றிய நியாயப்படுத்தல்களை வழங்குதல். இதில் அமைச்சுக்களால் திறைசேரிக்குத் திருப்பி அனுப்பப்பட்ட நிதி தொடர்பான விபரங்களையும் உள்ளடக்குதல்.

6. **தரவுகள் கிடைக்கக்கூடிய நிலையை மேம்படுத்துதல்:** பயனுறுதிமிக்க கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக்கு உதவுவதற்காக, விஞ்ஞாபன வாக்குறுதிகளின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான அமைச்சு மட்டத் தரவுகளினதும் தகவல்களினதும் சேகரிப்பு, அவற்றை அணுகக்கூடியதன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை அதிகரித்தல்.

7. **தகவலறியும் உரிமைசார் பதிலிறுப்பின் வினைத்திறன்:** தகவலறியும் உரிமைப் பொறிமுறை ஊடாக வழங்கப்படும் தகவல்களின் காலநேரம் மற்றும் துல்லியத்தன்மையை மேம்படுத்துதல் அத்துடன், தேர்தல் விஞ்ஞாபன நடைமுறைப்படுத்தல் பற்றிய தகவல்களைக் கோரும் விண்ணப்பங்கள் துரிதமாகவும் நம்பகத்தன்மையுடனும் கையாளப்படுவதையும், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளுக்கு இணங்க, முன்கூட்டியே தகவல்களை வெளிப்படுத்தும் (Proactive basis) அடிப்படையில் தகவல்கள் வழங்கப்படுவதையும் உறுதிசெய்தல். இது சான்றுகளின் அடிப்படையிலான சுயாதீனக் கண்காணிப்பை ஊக்குவிப்பதுடன், குடிமக்கள் தமக்கு அரசியலமைப்பினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட உரிமையைச் சுதந்திரமாகப் பயன்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.

# 9

# முடிவுரை

தேர்தல் விஞ்ஞாபனக் கண்காணிப்பு தொடர்பான இரண்டாவது அரையாண்டு அறிக்கையானது, அரசாங்கத்தின் ''வளமான நாடு - அழகான வாழ்க்கை'' எனும் தேர்தல் விஞ்ஞாபனத்தை, செயற்படுத்தக்கூடிய கொள்கைகளாகவும் நிகழ்ச்சித்திட்டங்களாகவும் மாற்றுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், சவால்கள் மற்றும் இடைவெளிகளைத் தெளிவுபடுத்துகின்றது. குறித்தசில விஞ்ஞாபன உறுதிமொழிகள் தேசிய கொள்கைச் சட்டகத்தில் உள்வாங்கப்பட்டு, அமைச்சு மட்டத்திலான மூலோபாயத் திட்டங்கள் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்கள் ஊடாக மேலும் தொழிற்படுத்தப்படுத்தப்பட்டுள்ள போதிலும், உண்மையான அரசியல் உறுதிமொழிகளுக்கும் அவற்றின் நடைமுறைசார் அமுலாக்கத்திற்கும் இடையில் இன்னும் குறிப்பிடத்தக்க இடைவெளிகள் காணப்படுவதை இந்த பகுப்பாய்வு எடுத்துக்காட்டுகின்றது.

இந்த அறிக்கை பல முக்கிய அவதானிப்புகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது: தேசிய வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளுடன் விஞ்ஞாபன வாக்குறுதிகள் ஒத்திசைந்திருப்பது முன்முயற்சிகளுக்குப் பகுதியளவு முன்னுரிமையொன்று அளிக்கப்பட்டுள்ளதைப் பிரதிபலிக்கிறது. இருப்பினும், நிறுவனஞ்சார் இயலுமையாற்றல், தரவுகளின் கிடைக்கக்கூடியதன்மை மற்றும் நடவடிக்கைமுறைசார் பொறிமுறைகள் என்பவற்றில் நிலவும் மட்டுப்பாடுகள் முழுமையான நடைமுறைப்படுத்தலுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன. அமைச்சுக்கள் மூலோபாய மற்றும் தொழிற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ள போதிலும், அவற்றை ஏற்புச் செய்வதிலும் நிறைவேற்றுவதிலும் காணப்படும் மாறுபாடுகள், வலுவான மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பின் தேவையைச் சுட்டிக்காட்டுகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக, இந்த அறிக்கை டித்வா சூறாவளிக்குப் பின்னரான இடையீடுகள் உட்பட அனர்த்த முகாமைத்துவம் போன்ற முக்கிய துறைகளை அடையாளப்படுத்துகிறது. இத்துறைகளில் கொள்கை நடவடிக்கைகளும் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளும் சீரற்ற முறையில் உள்வாங்கப்பட்டுள்ளன. மேலும், வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல், நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல் அத்துடன் சமூகப் பாதுகாப்பு, இளைஞர் வேலைவாய்ப்பு மற்றும் சூழலியல் நிலைபேண்தகுதன்மை போன்ற பிரஜைகளை மையமாகக் கொண்ட குறிக்கோள்களுக்குத் தொடர்ச்சியாக முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் இவ்வறிக்கையின் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

ஒட்டுமொத்தத்தில், 2026 ஆம் ஆண்டின் தேசிய வரவுசெலவுத்திட்டமும் அது தொடர்பான நிறுவன ரீதியிலான நடவடிக்கைகளும் தேர்தல் விஞ்ஞாபனத்தின் நோக்கங்களை முன்னெடுப்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்துகின்றன.

இருப்பினும், அரசியல் உறுதிமொழிகளுக்கும் நடைமுறை விளைவுகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்குத் தொடர்ச்சியான கொள்கைக் கவனக்குவிவு, வலுப்படுத்தப்பட்ட ஆளுகைப் பொறிமுறைகள் மற்றும் அமைச்சு மட்டத்திலான நடைமுறைப்படுத்தல் குறித்த அதிகரித்த கண்காணிப்பு என்பன அவசியமாகும். எனவே, தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகள் பொதுமக்களுக்குப் புலப்படக்கூடிய நன்மைகளாகத் தகுந்த முறையில் மாற்றப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான தொடர்ச்சியான மேற்பார்வைக்கு இந்த அறிக்கை ஓர் அடித்தளத்தை வழங்குகின்றது.

# 10

# உசாத்துணைகள்


Department of Project Management and Monitoring- Ministry of Finance, Planning and Economic Stabilization. 2026. Institutionalizing the Results-based Management in the Public Sector. Colombo: Department of Project Management and Monitoring- Ministry of Finance, Planning and Economic Stabilization. https://www.treasury.gov.lk/api/file/0a2a5037-bcb8-4106-95fb-b46dafbbc66f

Department of Project Management and Monitoring. 2025. Progress of Mega Scale Development Projects First Quarter – Year 2025. Colombo: Department of Project Management and Monitoring. https://www.treasury.gov.lk/api/file/461ff3f7-7ca0-4719-8103-89c59c5a4305

Department of Project Management and Monitoring. 2025. Progress of Mega Scale Development Projects Second Quarter – Year 2025. Colombo: Department of Project Management and Monitoring. https://www.treasury.gov.lk/api/file/8e22d73e-32dd-450f-b6ac-c8bc527e0358

Department of Project Management and Monitoring. 2025. Progress of Mega Scale Development Projects Third Quarter – Year 2025. Colombo: Department of Project Management and Monitoring. https://www.treasury.gov.lk/api/file/c93a03b1-f11c-4b59-91be-203798d10bd2

Department of State Accounts-General Treasury. 2025. Report on Financial Performance of the Government Upto 04th Quarter Ending 31st December 2025. Colombo: Department of State Accounts-General Treasury. https://www.treasury.gov.lk/api/file/80ecb34e-b50b-419d-9f83-bec02e640399

Department of State Accounts-General Treasury. 2025. Report on Financial Performance of the Government Upto 03rd Quarter Ending 30th September 2025. Colombo: Department of State Accounts-General Treasury. https://www.treasury.gov.lk/api/file/9c848db6-0230-46d4-ba0d-a1906966ea3b

Department of State Accounts-General Treasury. 2025. Report on Financial Performance of the Government Upto 02nd Quarter Ending 30th June 2025. Colombo: Department of State Accounts-General Treasury. https://www.treasury.gov.lk/api/file/9c848db6-0230-46d4-ba0d-a1906966ea3b

Jathika Jana Balawegaya (NPP Sri Lanka). 2024. A Thriving Nation–A Beautiful Life. Battaramulla: Jathika Jana Balawegaya (NPP Sri Lanka). https://www.npp.lk/en/policies/npppolicystatement

Ministry of Finance, Planning and Economic Development. 2025. National Policy Framework: A Thriving Nation-A Beautiful Life. Colombo: Ministry of Finance, Planning and Economic Development. https://www.treasury.gov.lk/api/file/beb1840e-cfd0-447f-9d0e-35937c48f1f7

Ministry of Finance, Planning and Economic Development. 2026. Approved Detailed Budget Estimate-Volume I. Colombo: Ministry of Finance, Planning and Economic Development. https://www.treasury.gov.lk/api/file/f5514bb0-58d9-4a6b-8bd5-0684966285e0

Ministry of Finance, Planning and Economic Development. 2026. Approved Detailed Budget Estimate-Volume II. Colombo: Ministry of Finance, Planning and Economic Development. https://www.treasury.gov.lk/api/file/2dfd2838-0d34-4b1b-98ec-a0d69dd870e9

Ministry of Finance, Planning and Economic Development. 2026. Approved Detailed Budget Estimate-Volume III. Colombo: Ministry of Finance, Planning and Economic Development. https://www.treasury.gov.lk/api/file/bc9d-ca02-97c4-4429-a349-13acc2bfb6b2

Ministry of Finance, Planning and Economic Development. 2026. National Budget 2026: Citizen Budget-A Public -Friendly Version of the Annual Budget. Colombo: Ministry of Finance, Planning and Economic Development. https://www.treasury.gov.lk/api/file/806f5cd4-f5fe-47da-8284-912658d73bd0

Parliament Of The Democratic Socialist Republic Of Sri Lanka. 2024. Public Financial Management Act, No. 44 Of 2024. https://www.treasury.gov.lk/api/file/0ad40728-60bd-41e3-980b-8bd4d173bb86

Sivagnanasothy, V. 2020. Development Evaluation in Sri Lanka. USAID/SDGAP.

# 11

# பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு 1: 2025 ஜூன் - டிசம்பர் வரையான காலப்பகுதியில் மதிப்பீடு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள்.

பின்னிணைப்பு 2: அமைச்சு மட்டத்தில் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளின் நடைமுறைப்படுத்தல்

**சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (பஃவ்ரல் அமைப்பு)**
**மார்ச் 12 இயக்கம்**
இல. 16, பயர்ட் பிளேஸ், பாமன்கட குறுக்கு வீதி, கொழும்பு 06
+94 11 255 8570/71
paffrel@sltnet.lk